# அரையாண்டு

# அரசிறை நிலைமை அறிக்கை

# 2023

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு, இலங்கை

# அரையாண்டு
# அரசிறை நிலைமை அறிக்கை - 2023

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க
கௌரவ அமைச்சர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

2023, யூன் 30

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கௌரவ அமைச்சரினால் வெளியிடப்பட்ட

# அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின் படி நிதி அமைச்சரானவர் வருடத்தின் ஜூன் மாதத்தின் இறுதித் தினத்தில் அரசிறை நிலைமை அறிக்கையினை பொது மக்களுக்கு சமர்ப்பிக்கவும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் கேட்கப்பட்டுள்ளார்.

இந்த அறிக்கையின் நோக்கம் அரசாங்கத்தின் அரசிறை உபாயத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையைப் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதாகும்.

அறிக்கையின் உள்ளடக்கமானது 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் அரசாங்கத்தின் வருமானம், செலவினம், காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் மற்றும் கடன் பெறுகைகளின் செயலாற்றுகைகளைக் கொண்டுள்ளது. மேலும் இவ்வறிக்கை 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான தற்காலிக வரவு செலவுத்திட்டத்தின் வெளிப்பாடு, பேரண்டப் பொருளாதார செயற்திறன்கள், விலை மேம்பாடுகள், வெளிநாட்டு நிதி, அரசாங்கத்தின் படுகடன், உத்தியோகபூர்வ இருப்புக்கள் மற்றும் அரசுடைமை வணிக நிறுவனங்களின் செயலாற்றுகைகளை கிடைத்த தகவல்களுக்கேற்ப இற்றைப்படுத்தப்பட்டு வழங்குகின்றது.

# பொருளடக்கத்தின் அட்டவணை


| | பக்கம் |
|---|---|
| **அத்தியாயம் 1 பொருளாதார முன்நோக்குகைகள்** | 1 |
| மேன்நோக்கு | 1 |
| பணவீக்கம் | 2 |
| பணம் மற்றும் கடன் | 3 |
| பங்குச் சந்தை | 3 |
| வெளித்துறை அபிவிருத்திகள் | 4 |
| உலகப் பொருளாதார முன்நோக்குகைகள் | 7 |
| **அத்தியாயம் 2 அரசிறை அபிவிருத்திகள்** | 13 |
| மேன்நோக்கு | 13 |
| அரசாங்க வருமானம் | 15 |
| அரசாங்க செலவினம் | 26 |
| பொது திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை | 32 |
| **அத்தியாயம் 3 அரசுடைமை தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை** | 35 |
| மேன்நோக்கு | 35 |
| அரசுக்கு சொந்தமான பிரதான பத்து தொழில்முயற்சி நிறுவனங்கள் பற்றிய மீளாய்வு | 35 |
| பிரதான தொழில்முயற்சி நிறுவனங்களின் சீர்திருத்த முயற்சிகள் | 39 |
| **அத்தியாயம் 4 வெளிநாட்டு நிதியளிப்பு** | 43 |
| மேன்நோக்கு | 43 |
| வெளிநாட்டு நிதியுதவி கடப்பாடுகள் | 43 |
| வெளிநாட்டு நிதிப் பகிர்வுகள் மற்றும் பயன்பாடு | 43 |
| அபிவிருத்தி கருத்திட்டங்களின் உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி | 44 |
| வெளிநாட்டு கடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் சேவைக் கொடுப்பனவுகள் | 45 |

## பிரதான பொருளாதார குறிகாட்டிகள்

| குறிகாட்டிகள் | காலம் | அலகு | பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | 2022 | 2023 (தற்காலிக) |
| **மெய்த்துறை** | | | | |
| பொருளாதார வளர்ச்சி | முதலாம் காலாண்டு | % | -0.5 | -11.5 |
| விவசாயம் | முதலாம் காலாண்டு | % | -4.4 | 0.8 |
| கைத்தொழில் | முதலாம் காலாண்டு | % | -3.7 | -23.4 |
| சேவைகள் | முதலாம் காலாண்டு | % | 1.8 | -5.0 |
| பணவீக்கம் (புள்ளிக்குப் புள்ளி) | மே மாத இறுதியில் | % | 39.1<br>(2013=100) | 25.2<br>(2021=100) |
| வேலையிண்மை வீதம் | வருடாந்தம் | % | 4.7 | த.இ. |
| தொழிற்படை பங்கேற்பு | வருடாந்தம் | % | 49.8 | த.இ. |
| **அரசிறைத் துறை** | | | | |
| வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | சன - ஏப் | ரூபா. மில். | -524,100 | -824,256 |
| மொத்த வருமானம் | சன - ஏப் | ரூபா. மில். | 630,908 | 820,070 |
| வரி வருமானம் | சன - ஏப் | ரூபா. மில். | 543,649 | 742,578 |
| வரியல்லா வருமானம் | சன - ஏப் | ரூபா. மில். | 87,259 | 77,493 |
| மீண்டெழும் செலவினம் | சன - ஏப் | ரூபா. மில். | 1,016,810 | 1,484,984 |
| அரசாங்க முதலீடு | சன - ஏப் | ரூபா. மில். | 140,999 | 177,903 |
| அரசாங்கப் படுகடன் | திசெ. மாத இறுதியில் | ரூபா. பில். | 27,492 | த.இ. |
| **வெளிநாட்டுத் துறை** | | | | |
| ஏற்றுமதிகள் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 5,273 | 4,866 |
| அதில் விவசாய ஏற்றுமதிகள் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 975 | 1,018 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 4,277 | 3,825 |
| புடவை மற்றும் ஆடைகள் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 2,409 | 2,031 |
| ஏனையவை | சன - மே | ஐ.அ.டொ.மில். | 1,868 | 1,794 |
| இறக்குமதிகள் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 8,802 | 6,791 |
| நுகர்வுப் பொருட்கள் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 1,354 | 1,242 |
| இடைநிலைப் பொருட்கள் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 5,843 | 4,571 |
| அதில் பெற்றோலிய உற்பத்திகள் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 2,384 | 2,065 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 1,603 | 971 |
| வர்த்தக மீதி | சன - மே | ஐ.அ.டொ.மில். | -3,528 | -1,926 |
| உல்லாசப் பயணிகளின் வருகை | சன - மே | எண்ணிக்கை | 378,521 | 524,486 |
| சுற்றுலாத் துறை வருமானம் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 635 | 828 |
| தொழிலாளர்கள் பணவனுப்பல் | சன - மே | ஐ.அ.டொ.மில். | 1,336 | 2,347 |
| முதலீட்டுப் பங்குகள் (தேறிய) | சன - மே | ஐ.அ.டொ.மில். | 92 | 3 |
| மொத்த சென்மதி நிலுவை | சன - மே | ஐ.அ.டொ.மில். | -2,595 | 1,597 |
| மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் | மே மாத இறுதியில் | ஐ.அ.டொ.மில். | 1,887 | 3,491 |
| நாணயமாற்று விகிதம் (இறுதி மாதம்) | மே மாத இறுதியில் | ஐ.அ.டொ. இற்கான ரூபா | 360.8 | 295.5 |
| நாணயமாற்று விகிதம் (மாதாந்த சராசரி) | சன - மே | ஐ.அ.டொ. இற்கான ரூபா | 358.9 | 310.2 |
| **நாணயத்துறை** | | | | |
| நிலையான வைப்பு வசதி விகிதம் (SDFR) | மே மாத இறுதியில் | % | 13.5 | 15.5 |
| நிலையான கடன் வசதி விகிதம் (SLFR) | மே மாத இறுதியில் | % | 14.5 | 16.5 |
| நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு (SRR) | மே மாத இறுதியில் | % | 4.00 | 4.00 |
| அடிப்படை கடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கி சராசரி (AWPLR) | மே மாத இறுதியில் | % | 22.1 | 20.3 |
| கடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கிச் சராசரி (AWLR) | மே மாத இறுதியில் | % | 13.5 | 17.8 |
| இலங்கையின் வங்கிக்கிடையேயான வழங்கல் விகிதம் (SLIBOR ) (I மாதம்) | மே மாத இறுதியில் | % | - | - |
| திறைசேரி உண்டியல் விளைவு விகிதம் (91 நாட்கள்) | மே மாத இறுதியில் | % | 23.7 | 25.7 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகிதம் (364 நாட்கள்) | மே மாத இறுதியில் | % | 24.3 | 22.9 |
| நாணய வழங்கல் வளர்ச்சி (M2b) | மே 2023/ மே 2022 | % | 20.0 | 3.7 |
| தனியார்த் துறைகடன் வளர்ச்சி | மே 2023/ மே 2022 | % | 20.3 | -8.3 |

## இலங்கை : தெரிவு செய்யப்பட்ட சுட்கள்

| குறிகாட்டிகள் | காலம் | அலகு | பெறுமதி |
|---|---|---|---|
| **மின்சாரம்** | | | |
| மின் விநியோக மட்டம் (2016) | 2022 | % | 99.3 |
| **நீர்** | | | |
| பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்கான அடைவு | 2022 | சனத்தொகை % | 96.0 |
| குழாய் நீரைப் பெறுவதற்கான அடைவு | 2022 | சனத்தொகை % | 60.4 |
| **வீதிகள்** | | | |
| வீதி அடர்த்தி | 2022 | கி.மீ.2 | 2.21 |
| வீதிகளின் மொத்த நீளம் | 2022 | கி.மீ. | 144,937 |
| **தொடர்பாடல்** | | | |
| செல்லிடத் தொலைபேசி உள்ளடங்கலாக தொலைபேசிக்கான அடர்த்தி | 2022 | ஒவ்வொரு 100 பேருக்கு | 142.0 |
| இணையத்தள வலைப்பின்னலுக்கான அடைவு | 2022 | ஒவ்வொரு 100 பேருக்கு | 97.7 |
| **கல்வி** | | | |
| **பொதுக் கல்வி** | | | |
| ஆரம்ப பாடசாலைகளில் இணையும் விகிதம் | 2022 | % | 95.3 |
| மாணவர் / ஆசிரியர் விகிதம் (அரசாங்க பாடசாலைகள்) | 2022 | எண்ணிக்கை | 16.8 |
| எழுத்தறிவு வீதம் (சராசரி) | 2021 | % | 93.3 |
| கணினி அறிவு வீதம் (முதல் 06 மாதங்கள்) | 2022 | % | 35.7 |
| **பல்கலைக்கழக கல்வி** | | | |
| மாணவர் / ஆசிரியர் விகிதம் | 2022 | எண்ணிக்கை | 20.2 |
| வயது குறிப்பீடு செய்யப்பட்டு இணையும் விகிதம் (வயது 19 - 23 வருடங்கள்) (அ) | 2022 | % | 9.3 |
| **சுகாதாரம்** | | | |
| வைத்தியசாலைகள் (மேற்கத்தேய மருத்துவம்) (ஆ) | 2022 | எண்ணிக்கை | 617 |
| கட்டில்கள் (ஆ) | 2022 | எண்ணிக்கை | 78,228 |
| வைத்தியசாலை கட்டில்கள் | 2022 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 3.5 |
| வைத்தியர் நோயாளர்களின் சராசரி விகிதம் | 2022 | எண்ணிக்கை | 1,054 |
| **சனத்தொகை** | | | |
| சனத்தொகை அடர்த்தி | 2022 | சதுர கி.மீ. ஆட்கள் | 354 |
| சனத்தொகை வளர்ச்சி | 2022 | % | 0.1 |
| ஆயுள் எதிர்பார்க்கை | 2017 | வருடங்கள் | 75.5 |
| சிசு மரண வீதம் | 2019 | 1000 பிறப்புகளுக்கு | 7.4 |
| தாய் மரண வீதம் | 2015 | 1000 பிறப்புகளுக்கு | 23.2 |
| பருமட்டான பிறப்பு வீதம் | 2022 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 12.4 |
| பருமட்டான இறப்பு வீதம் | 2022 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 8.1 |
| தங்கி வாழ்வோர் வீதம் | 2022 | % | 49.4 |
| **வறுமை** | | | |
| வறுமை ஆள் கணக்கெடுப்பு சுட்டெண் | 2019 | % | 14.3 |
| குடும்பவருமானத்தின் கினிக் குணகம் | 2019 | குணகம் | 0.46 |
| வறுமை இடைவெளி | 2019 | % | 2.8 |
| நாளாந்தம் உட்கொள்ளும் சராசரி கலோரிப் பெறுமானம் | 2019 | கிலோகலோரிகள் | 2,120 |
| **சர்வதேச தரப்படுத்தல்** | | | தரம் |
| மனித அபிவிருத்தி சுட்டெண் | 2021 | 189 நாடுகளின் தரப்படுத்தலில் | 73 |
| வியாபாரம் புரிவோர் சுட்டெண் | 2020 | 190 நாடுகளின் தரப்படுத்தலில் | 101 |
| உலகளாவிய போட்டித் தண்மை சுட்டெண் | 2019 | 141 நாடுகளின் தரப்படுத்தலில் | 84 |
| பொருளாதார சுதந்திர சுட்டெண் | 2022 | 176 நாடுகளின் தரப்படுத்தலில் | 136 |
| உலகளாவிய சாமாதான சுட்டெண் | 2022 | 163 நாடுகளின் தரப்படுத்தலில் | 90 |
| இலத்திரணியல் - ஆட்சிமுறை அபிவிருத்தி சுட்டெண் | 2022 | 193 நாடுகளின் தரப்படுத்தலில் | 95 |

*(அ) மாணவர்களின் உள்விழைவினை மாத்திரம் உள்ளடக்குகின்றது*

*(ஆ) அரசாங்கம்*

# அத்தியாயம் 1

## பொருளாதார முன்னோக்குகைகள்

### மேன்நோக்கு

அரசாங்கத்தினால் அரசிறை, நாணய, நிதி மற்றும் வெளித் துறை ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட இலட்சிய ரீதியான மறுசீரமைப்பு முயற்சிகளுடன், இலங்கை படிப்படியாக பொருளாதார ஸ்திரத்தன்மையை நோக்கிய பாதையில் முன்னேறி வருகிறது. பணவீக்க அழுத்தங்கள் குறைதல், பணவனுப்பல் மற்றும் சுற்றுலாத்துறை வருமானங்களின் மூலம் அதிகரித்த வெளிநாட்டு நாணய வரவு, இலங்கை ரூபாயின் பெறுமதியுயர்வு, வெளிநாட்டு நாணய ஒதுக்குகளின் அதிகரிப்புடன், அத்தியாவசியப் பொருட்களுக்கான நீண்ட வரிசைகள், மின் தடைகள் மற்றும் சமூக மற்றும் அரசியல் அமைதியின்மை உட்பட 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட பாதகமான பொருளாதார அழுத்தங்கள் படிப்படியாகத் தணிந்தமையின் அடிப்படையில் பொருளாதாரத்தில் சாதகமான அறிகுறிகள் தென்படுகின்றன.

இலங்கை தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் சி.எ.உ. 2.286 பில்லியனினைக் (ஏறத்தாழ ஐ.அ.டொ. 3 பில்லியன்) கொண்ட 48 மாத நீடிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டினைச் செயற்படுத்தி வரும் அதேநேரம், இத் திட்டம் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய விரிவான சீரமைப்பு நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்துடன், பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் அவசர நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான விருப்பங்களை விரிவுபடுத்த சலுகை நிதியுதவியை அணுகும் தகுதி ஆகியவற்றிற்காக இலங்கைக்கு வரவு செலவுத் திட்ட உதவியை வழங்குவதற்காக விசேட கொள்கை அடிப்படையிலான கடனாக ஐ.அ.டொ. 350 மில்லியனினை அங்கீகரித்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட ஏனைய அபிவிருத்தி பங்காளிகள் இலங்கைக்கான தமது ஒத்துழைப்பினை உறுதிப்படுத்தியுள்ளனர். மேலும், உலக வங்கி இலங்கைக்கான வரவு செலவுத் திட்ட மற்றும் நலன்புரி உதவியாக ஐ.அ.டொ. 700 மில்லியன்களை அங்கீகரித்துள்ளது.

இருப்பினும், பொருளாதார ஸ்திரத்தன்மையை நோக்கிய பாதையில் இன்னும் பல சவால்களுள்ளன. 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பொருளாதாரத்தில் 11.5 சதவிகிதச் சுருக்கம் பதிவாகியுள்ளது. இருந்தபோதிலும், 2022 ஆம் ஆண்டின் அதே காலாண்டில் 4.4 சதவிகிதத்துடன் ஒப்பிடும் போது, 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 0.8 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்தமையால், விவசாயத் துறை இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான அறிகுறிகளைக் காட்டுகிறது. நெற் பயிர்செய்கையானது 42.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ள அதே நேரத்தில், 'நன்னீர் மீன்பிடித்தல் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு' மற்றும் 'தானியங்களின் பயிர்செய்கை' ஆகியவை முறையே 16.9 சதவீத மற்றும் 13.0 சதவீத வளர்ச்சிகளைப் பதிவு செய்துள்ளன. எவ்வாறாயினும், ஒட்டுமொத்த கைத்தொழில்துறை செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 3.7 சதவிகித சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் இதே காலாண்டில் 23.4 சதவிகிதம் சுருக்கமடைந்தது. 'சுரங்கம் அகழ்வு மற்றும் கல்லுடைத்தல்' 45.7 சதவீதமும், 'கட்டுமானம்' 38.3 சதவீதமும் குறிப்பிடத்தக்களவு சுருங்கியமையும் மற்றும் ஒட்டுமொத்த தயாரிப்புத் துறை 14.2 சதவீதம் சுருங்கியமையும் இதற்கு வழிவகுத்துள்ளது. உலகளாவிய கேள்வியின் வீழ்ச்சி ஏற்றுமதி உற்பத்தித் துறைக்கு, குறிப்பாக ஆடைத் துறைக்கு ஒரு பாரிய சவாலாக உள்ளது. சேவைத் துறையும், 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 1.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது, 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 5.0 சதவீத சுருக்கத்தைப் பதிவு செய்தது. 'காப்புறுதி சேவைகள்' மற்றும் 'நிதிச் சேவை நடவடிக்கைகள்' ஆகியவை முறையே 38.3 சதவீதத்தினாலும் 33.2 சதவீதத்தினாலும் சரிவடைந்தமையே இதற்குக் காரணமாகும்.

ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI, 2021=100) மூலம் அளவிடப்படும் தலைக்குரிய பணவீக்கம், 2022, செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஏறத்தாழ 70 சதவீத உச்சநிலையிலிருந்து (CCPI, 2013=100) 2023, யூன் மாதத்தில் 12.0 சதவீதமாகக் குறைந்தது. பொதுவாக 2023 ஆம் ஆண்டு முழுவதும் பணவீக்கமானது குறைந்து செல்லும் போக்கினைக் கொண்டிருந்தது. 2023, யூன் மாதத்தில் உணவுப் பணவீக்கமும் 4.1 சதவீதமாகக் குறைந்துள்ளது. பணவீக்கத்தின் வேகமான சரிவு மற்றும் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் காலாண்டில் ஒற்றை இலக்க அளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 2023, யூன் 01 ஆம் திகதியன்று மத்திய வங்கி நிலையான வைப்பு வசதி விகிதத்தையும் நிலையான கடன் வசதி விகிதத்தையும் 250 அடிப்படைப் புள்ளிகளால், முறையே 13.00 சதவீதமாகவும் 14.00 சதவீதமாகவும் குறைத்து நாணய நிலைமைகளை எளிதாக்கியது.

2022 ஆம் ஆண்டில் எதிர்கொள்ளப்பட்ட முன்னொருபோதுமில்லாத சவால்களைத் தொடர்ந்து, 2023 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் வெளித் துறையானது முன்னேற்றகரமான செயலாற்றுகையைக் காட்டியது. 2022 ஆம் ஆண்டில் இதே காலகட்டத்தில் பதிவான ஐ.அ.டொ. 3.5 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் வணிக

வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொ. 1.9 பில்லியனாகக் குறைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஐ.அ.டொ. 4.9 பில்லியன் பெறுமதியுடைய ஏற்றுமதிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொ. 5.3 பில்லியன்களிலிருந்து 7.7 சதவிகித சரிவைக் குறிக்கிறது. புடைவை மற்றும் ஆடைகள், பெற்றோலியப் பொருட்கள் மற்றும் இரப்பர் பொருட்களின் ஏற்றுமதி ஆகியவை குறைந்துள்ள அதேநேரம் இரத்தினக் கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் தேயிலை ஆகியவற்றின் ஏற்றுமதி வருமானம் அதிகரித்து, வர்த்தக மீதியில் சாதகமான விளைவுகளுக்குப் பங்களித்தது. 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ஐ.அ.டொ. 8.8 பில்லியனிலிருந்து, 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இறக்குமதிக்கான செலவினம் 22.8 சதவிகிதம் குறைவடைந்து ஐ.அ.டொ. 6.8 பில்லியனினைப் பதிவுசெய்தது. இதற்கு, புடைவை மற்றும் புடைவை சார்ந்த பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், எரிபொருள், கட்டுமானப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள், பிளாஸ்திக் மற்றும் அதன் பொருட்கள் மற்றும் தானியங்கள் மற்றும் ஆலைக் கைத்தொழில் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட சரிவு ஆகியவை முக்கியமாக காரணமாக அமைந்திருந்தது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் தொழிலாளர்களின் பணஅனுப்பீடு 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ஐ.அ.டொ. 1.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 75.7 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 2.3 பில்லியனாக உயர்ந்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் சுற்றுலாத்துறையின் வருமானமும் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவான ஐ.அ.டொ. 634.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 30.4 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 827.8 மில்லியனினைப் பதிவுசெய்தது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 38.6 சதவீதம் அதிகரித்து 524,486 பயணிகளாக இருந்ததுடன் கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 378,521 பயணிகளாக இருந்தது. மேம்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய வரவுகளுடன், மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் தொடர்ந்து அதிகரித்து, 2023 மே மாத இறுதியில் ஐ.அ.டொ. 3.5 பில்லியன்களை எட்டியது. இதில் சீனாவின் மக்கள் வங்கியின் இடமாற்று வசதியும் அடங்கும். வெளிநாட்டுத் துறையில் ஏற்பட்ட சாதகமான முன்னேற்றங்களுடன், 2023, யூன் 28 வரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 17.6 வீதத்தால் அதிகரித்தது.

## பணவீக்கம்

2022, செத்தெம்பர் மாதத்தில் உச்சத்தை எட்டிய தலைக்குரிய பணவீக்கம், அதன் பின்னர் குறைந்து செல்லும் போக்கினைக் கொண்டிருந்தது. இறுக்கமான நாணய மற்றும் நிதிக் கொள்கைகளின் தாக்கம், இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வு, எரிவாயு மற்றும் எரிபொருள் விலைகள் குறைப்பு, உணவுப் பொருட்களின் விலைகளின் இயல்பாக்கம் மற்றும் புள்ளிவிவர அடிப்படை ஆண்டு விளைவின் சாதகமான தாக்கம் ஆகியவற்றின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில், எதிர்பார்த்ததை விட வேகமான வீழ்ச்சியடையும் பணவீக்கப் போக்கு தொடர்ந்தது.

**அட்டவணை 1.1 பணவீக்க அசைவுகள் (%)**

| வருடம் | மாதம் | கொ.நு.வி.சு. | | | | தே.நு.வி.சு. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தலைக்குரிய பணவீக்கம் | | அடிப்படையில் * பணவீக்கம் | | தலைக்குரிய பணவீக்கம் | | அடிப்படையில் * பணவீக்கம் | |
| | | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி |
| 2022** | சனவரி | 14.2 | 6.9 | 9.9 | 5.0 | 16.8 | 8.1 | 12.9 | 6.2 |
| | பெப்ரவரி | 15.1 | 7.9 | 10.9 | 5.7 | 17.5 | 9.3 | 14.1 | 7.1 |
| | மார்ச் | 18.7 | 9.1 | 13.0 | 6.5 | 21.5 | 10.6 | 17.3 | 8.2 |
| | ஏப்பிரல் | 29.8 | 11.3 | 22.0 | 8.1 | 33.8 | 13.0 | 27.9 | 10.2 |
| | மே | 39.1 | 14.2 | 28.4 | 10.2 | 45.3 | 16.3 | 37.7 | 13.0 |
| | யூன் | 54.6 | 18.4 | 39.9 | 13.3 | 58.9 | 20.8 | 49.3 | 16.8 |
| | யூலை | 60.8 | 23.1 | 44.3 | 16.7 | 66.7 | 25.9 | 57.3 | 21.3 |
| | ஆகஸ்ட் | 64.3 | 28.0 | 46.6 | 20.3 | 70.2 | 31.3 | 60.5 | 26.0 |
| | செப்டெம்பர் | 69.8 | 33.4 | 50.2 | 24.1 | 73.7 | 36.9 | 64.1 | 31.0 |
| | ஒக்டோபர் | 66.0 | 38.3 | 49.7 | 27.8 | 70.6 | 42.2 | 62.4 | 35.7 |
| | நவம்பர் | 61.0 | 42.6 | 49.4 | 31.4 | 65.0 | 46.7 | 60.1 | 40.0 |
| | திசெம்பர் | 57.2 | 46.4 | 47.7 | 34.6 | 59.2 | 50.4 | 57.5 | 43.9 |
| 2023** | சனவரி | 51.7 | த.இ. | 45.6 | த.இ. | 53.2 | த.இ. | 52.0 | த.இ. |
| | பெப்ரவரி | 50.6 | த.இ. | 43.6 | த.இ. | 53.6 | த.இ. | 50.1 | த.இ. |
| | மார்ச் | 50.3 | த.இ. | 39.1 | த.இ. | 49.2 | த.இ. | 44.2 | த.இ. |
| | ஏப்பிரல் | 35.3 | த.இ. | 27.8 | த.இ. | 33.6 | த.இ. | 31.8 | த.இ. |
| | மே | 25.2 | த.இ. | 20.3 | த.இ. | 22.1 | த.இ. | 21.6 | த.இ. |
| | யூன் | 12.0 | த.இ. | 09.8 | த.இ. | | | | |

*மூலம் : தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**கொ.நு.வி.சு. முக்கிய பணவீக்கம், தே.நு.வி.சு. முக்கிய பணவீக்கம் - மாறுபடும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து நீங்கலாக*

*** அடிப்படை ஆண்டு 2013=100*

**** அடிப்படை ஆண்டு 2021=100*

எனவே, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தின் தலைக்குரிய பணவீக்கம், 2023 சனவரியில் 53.2 சதவீதத்திலிருந்து 22.1 சதவீதமாகக் குறைந்துள்ளமை அந்த காலகட்டத்தில் உணவு மற்றும் உணவு அல்லாத பொருட்கள் ஆகிய இரண்டினதும் விலைகளில் ஏற்பட்ட சரிவின் பிரதிபலிப்பாகும். ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தின் அடிப்படையில் அளவிடப்படும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021=100) 2023, சனவரியில் 51.7 சதவீதத்திலிருந்து 2023, யூன் மாதத்தில் 12.0 சதவீதமாகக் குறைந்துள்ளது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகியவற்றில் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் நாட்டின் அடிப்படை பணவீக்கத்தைப் பிரதிபலிக்கும் முக்கிய பணவீக்கம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் கணிசமாகக் குறைந்துள்ளது. எனவே, ஒட்டுமொத்த பணவீக்கம் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிலிருந்து ஒற்றை இலக்க அளவை எட்டுமெனவும் நடுத்தர காலத்தில் நடு-ஒற்றை இலக்க அளவில் நிலைபெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### பணம் மற்றும் கடன்

2022, ஏப்பிரல் முதல் கடைப்பிடிக்கப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாடானது, சந்தை வட்டி விகிதங்கள் அதன் வரலாற்று உயர் மட்டங்களுக்கு கணிசமாக அதிகரிக்க வழிவகுத்தது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டு வரை காணப்பட்ட சுருக்கத்திலிருந்து பொருளாதார நடவடிக்கைகளை எளிதாக்குவதற்கு 2023, யூன் முதல் நாணய நிலைமைகள் தளர்த்தப்பட்டன.

அதற்கிணங்க, 2023 மாச்சு மதத்தில் 100 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 15.50 சதவீதமாகவும் 16.50 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்ட நிலையான வைப்பு வசதி விகிதம் மற்றும் நிலையான கடன் வசதி விகிதம் ஆகியவை 2023 யூன் மாதத்தில் 250 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 13.00 சதவீதமாகவும் 14.00 சதவீதமாகவும் குறைக்கப்பட்டதுடன் சட்டப்பூர்வ ஒதுக்கு விகிதம் 4.00 சதவீதமாகவும் காணப்பட்டது.

**அட்டவணை 1.2 பணம் மற்றும் தனியார்த் துறைக் கடன்**

ரூபா பில்லியன்

| விடயம் | 2022 | | | | 2023 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்பிரல் | சனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்பிரல் | 2023 ஏப்பிரல்/2022 ஏப்பிரல் வளர்ச்சி (%) |
| ஒதுக்குப் பணம் | 1,337.49 | 1,324.23 | 1,386.70 | 1,481.80 | 1,589.72 | 1,504.68 | 1,424.21 | 1,417.07 | -4.37 |
| விரிந்த பணம் (M2b) | 10,667.73 | 10,755.11 | 11,575.56 | 11,940.61 | 12,322.46 | 12,345.80 | 12,293.35 | 12,386.65 | 3.74 |
| தனியார்த் துறைக் கடன் | 7,017.77 | 7,051.28 | 7,533.54 | 7,752.83 | 7,318.02 | 7,260.39 | 7,152.77 | 7,109.55 | -8.30 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

### பங்குச் சந்தை

2022 ஆம் ஆண்டில் நிலவிய பாதகமான பேரண்டப் பொருளாதார முன்னேற்றங்களின் தாக்கத்தின் மத்தியில் விலைக் குறியீடுகள் மற்றும் சந்தை மூலதனமாக்கலின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் பங்குச் சந்தை முடக்கப்பட்ட செயலாற்றுகையைக் கொண்டிருந்தது. அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI) 2022, மே மாத இறுதியில் 8,108 புள்ளிகளுடன் ஒப்பிடுகையில், 2023, மே மாத இறுதியில் 8,555 புள்ளிகளாக 5.5 சதவீதத்தால் அதிகரித்தது. அதிக திரவப் பங்குகளைக் கொண்டுள்ள ஸ்டாண்டர்ட் புவர்ஸ் ஸ்ரீலங்கா 20 (S&P SL20) சுட்டெண்ணானது 2022, மே மாத இறுதியில் 2,679 புள்ளிகளுடன் ஒப்பிடுகையில் 2023, மே மாத இறுதியில் 9.6 சதவீதம் குறைந்து 2,421 புள்ளிகளாகக் காணப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 3,611 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்ட சந்தை மூலதனமாக்கல் 2023, மே மாத இறுதியில் 0.4 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 3,598 பில்லியனினைக் கொண்டிருந்தது. இதேவேளை, கொழும்பு பங்குச் சந்தையின் சராசரி நாளாந்த புரள்வு, 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ரூபா 1,481 மில்லியன் ஆகும். இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 4,077 மில்லியனினைப் பதிவு செய்தது.

2022 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ரூபா 23,744 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்ட தேறிய வெளிநாட்டு விற்பனைகள் 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 41.8 சதவீதம் சரிவடைந்து ரூபா 13,809 மில்லியனினைக் கொண்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 22,577 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக்

கொள்முதல்களும் 2023, முதல் ஐந்து மாதங்களில் 32.8 சதவீதம் வீழ்ச்சியடைந்து ரூபா 15,168 மில்லியனாகக் காணப்பட்டது. அதன்படி ஒருங்கிணைந்த விளைவாக, 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் தேறிய கொள்முதல்கள் 216.5 சதவிகிதத்தினால் கணிசமாக அதிகரித்துள்ளது.

**அட்டவணை 1.3 மூலதன சந்தையின் இயக்கங்கள்**

| குறிகாட்டிகள் | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | மே மாத இறுதி 2022 | மே மாத இறுதி 2023 |
|---|---|---|---|---|---|---|---|
| அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (1985=100) | 6,052 | 6,129 | 6,774 | 12,226 | 8,490 | 8,108 | 8,555 |
| எஸ் அன்ட் பீஎஸ். எல. 20 சுட்டெண் | 3,135 | 2,937 | 2,638 | 4,233 | 2,636 | 2,679 | 2,421 |
| சந்தை மூலதனமாக்கல் (ரூபா. பில்) | 2,840 | 2,851 | 2,961 | 5,489 | 3,847 | 3,611 | 3,598 |
| வர்த்தகப் பட்எயலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 297 | 289 | 283 | 296 | 290 | 294 | 289 |
| நாளாந்த சராசரி புரள்வு (ரூபா.மில்) | 834 | 711 | 1,899 | 4,888 | 2,972 | 4,077 | 1,481 |
| வெளிநாட்டு விற்பனை (ரூபா.மில்) | 100,316 | 68,272 | 104,165 | 86,689 | 36,863 | 23,744 | 13,809 |
| வெளிநாட்டு கொள்முதல் (ரூபா.மில்) | 77,067 | 56,537 | 52,889 | 39,410 | 67,488 | 22,577 | 15,168 |
| தேறிய கொள்முதல் (ரூபா.மில்) | -23,249 | -11,735 | -51,276 | -47,279 | 30,625 | -1,167 | 1,359 |

*மூலம் : கொழும்பு பங்கு சந்தை மற்றும் இலங்கை மத்திய வங்கி*

## வெளித் துறை அபிவிருத்திகள்

வர்த்தகப் பற்றாக்குறையின் சுருக்கம், தொழிலாளர்களின் பணஅனுப்பீடு மற்றும் சுற்றுலா வருமானங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஆகியவற்றினால் உந்தப்பட்டு 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இலங்கையின் வெளித் துறையானது ஸ்திரத்தன்மைக்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியது. தொழிலாளர்களின் பணப்பரிமாற்றம் 75.7 சதவிகிதத்தினால் கணிசமாக அதிகரித்துள்ளது; சுற்றுலாத்துறையின் வருவாய் 30.4 சதவிகிதம் அதிகரித்துள்ள அதேநேரத்தில்; மொத்த ஏற்றுமதிகள் 7.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது; மொத்த இறக்குமதிகள் 22.8 சதவீதம் குறைந்துள்ளது; வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொ. 1,926.0 மில்லியனாகக் சரிவடைந்தது; மற்றும் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் ஐ.அ.டொ. 3.5 பில்லியனினைப் பதிவு செய்தது.

2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 5,273.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில், புடைவை மற்றும் ஆடைகள், இரப்பர் பொருட்கள், உணவு, பானங்கள் மற்றும் புகையிலை மற்றும் பெற்றோலியப் பொருட்கள் உட்பட கைத்தொழில் ஏற்றுமதிகளின் வருவாயின் கணிசமான சரிவின் காரணமாக, 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஏற்றுமதி வருமானம் 7.7 சதவீதத்தினால் அல்லது ஐ.அ.டொ. 407.7 மில்லியனினால் ஐ.அ.டொ. 4,865.7 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. குறைவான உலகளாவிய கேள்வி மற்றும் சேவைத் துறையை நோக்கி நுகர்வு முறை திசை திருப்பப்பட்டமை ஆகியவையும் இதற்குப் பங்களித்துள்ளது. இதேபோல், 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 8,801.7 மில்லியனுடன் ஒப்பிடும்போது, நுகர்வோர் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் சரிவு காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இறக்குமதிக்கான செலவு 22.8 சதவீதத்தினால் அல்லது ஐ.அ.டொ. 2,010.3 மில்லியனினால், ஐ.அ.டொ. 6,791.4 மில்லியன் வரை வீழ்ச்சியுற்றுள்ளது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட சரிவு, 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஐ.அ.டொ. 1,925.7 மில்லியன் வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைக்க வழிவகுத்ததுடன் இது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 2,528.3 மில்லியனாகக் காணப்பட்டது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் தொழிலாளர்களின் பண அனுப்பல் 75.7 சதவீதத்தினால் அல்லது ஐ.அ.டொ. 1,011 மில்லியனினால் ஐ.அ.டொ. 2,347 மில்லியன் வரை கணிசமாக வளர்ச்சியடைந்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 1,336 மில்லியன்களாகும். 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து இலங்கைத் தொழிலாளர்களின் புலம்பெயர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் பெருமளவிலான பணப் பரிமாற்றம் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை உத்தியோகபூர்வ வழிகளைப் பயன்படுத்தும் பொருட்டு ஊக்குவிப்பதற்காக, அரசாங்கத்துடன் இணைந்து இலங்கை மத்திய வங்கி மேற்கொண்ட திட்டங்கள் உட்பட பல கொள்கை நடவடிக்கைகள் இதற்கு முக்கிய பங்காற்றியுள்ளன.

2022 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொ. 635.0 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில், உலகளாவிய சுற்றுலாத்துறையில் தொடரும் மீட்சி காரணமாக 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் சுற்றுலாத்துறையின் வருமானம் 30.4 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 828.0 மில்லியனாக உயர்ந்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையானது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 378,521 பயணிகளுடன் ஒப்பிடுகையில், 524,486 ஆக உயர்ந்துள்ளது. இந்தக் காலகட்டத்தில் இரஷ்யா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

கொழும்புப் பங்குச் சந்தையானது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் தேறிய வரவாகப் பதிவுசெய்த ஐ.அ.டொ. 92 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில், 2023

ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஐ.அ.டொ. 3 மில்லியன் வரையான குறிப்பிடத்தக்க சரிவைப் பதிவு செய்துள்ளது. இதற்கு நேர்மாறாக, 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ஐ.அ.டொ. 9 மில்லியனிலிருந்து 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஐ.அ.டொ. 398 மில்லியனாக அரசாங்கப் பிணையங்கள் சந்தைக்கு மொத்த வரவுகள் அதிகரித்துள்ளன. இதற்கிடையில், சீன மக்கள் வங்கியில் இருந்து ஐ.அ.டொ. 1.4 பில்லியன் இடமாற்று வசதி உள்ளடங்கலாக 2023 மே மாத இறுதியில் மொத்த உத்தியோகப்பூர்வ ஒதுக்குகள் ஐ.அ.டொ. 3.5 பில்லியனாகக் காணப்பட்டன. 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 2,595 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டு மே மாத இறுதியில் மொத்த கொடுப்பனவுகளின் மீதி (BoP) ஐ.அ.டொ. 1,597 மில்லியன் மிகையினைப் பதிவுசெய்துள்ளது. 2023, யூன் 28 இறுதியில் அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாயின் பெறுமதி 17.6 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்தது.

## ஏற்றுமதிகள்

2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஏற்றுமதிகளின் வருமானத்தைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டின் இதே காலக்கட்டத்தில் ஐ.அ.டொ. 5,273.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில், உலகளாவிய கேள்வியானது, குறிப்பாக இலங்கையின் முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் குறைந்து வருவதைப் பிரதிபலிக்கும் வகையில், 7.7 சதவீதத்தினால் சரிவுற்று ஐ.அ.டொ. 4,865.7 மில்லியனினைக் கொண்டிருந்தது. புடைவை மற்றும் ஆடைகள், இரப்பர் பொருட்கள், பெற்றோலியப் பொருட்கள் மற்றும் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலைப் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி வருமானம் முறையே 15.7 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 2,030.6 மில்லியனாகவும், 8.5 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 360.5 மில்லியனாகவும், 28.6 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 207.8 மில்லியனாகவும் மற்றும் 6.1 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 208.6 மில்லியனாகவும் குறைந்ததன் காரணமாக, கைத்தொழில்துறை ஏற்றுமதியின் வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 10.6 சதவிகிதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொ. 3,825.2 மில்லியனினைப் பதிவுசெய்தது. இரசாயனப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் அவை சார்ந்த பொருட்கள், மரம் மற்றும் காகிதப் பொருட்கள், போக்குவரத்து உபகரணங்கள், தோல், பயணப் பொருட்கள் மற்றும் பாதணிகள், பிளாஸ்திக் மற்றும் அதன் பொருட்கள் மற்றும் பீங்கான் பொருட்கள் போன்ற பிற கைத்தொழில் ஏற்றுமதிகளின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும், இயந்திரங்கள் மற்றும் பொறிமுறைச் சாதனங்கள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், கால்நடைத் தீவனங்கள் மற்றும் அச்சுத் தொழில் தயாரிப்புகள் ஆகியவற்றின் ஏற்றுமதி வருமானம், 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மொத்த ஏற்றுமதி வருவாயில் சாதகமான பங்களிப்பினை வழங்கியுள்ளன.

**அட்டவணை 1.4 வெளிநாட்டு வர்த்தகம் 2023 சனவரி - மே**

ஐ.அ.டொ. மில்லியன்

| வகை | 2022 | 2023 | % மாற்றம் |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | 5,273.4 | 4,865.7 | -7.7 |
| விவசாய உற்பத்திகள் | 974.5 | 1,017.9 | 4.5 |
| தேயிலை | 460.9 | 524.0 | 13.7 |
| ஆரம்ப நிலை உற்பத்திகள் (இறப்பர், தெங்கு உற்பத்திகள்) | 195.8 | 148.0 | -24.4 |
| ஏனைய விவசாய உற்பத்திகள் | 317.8 | 345.9 | 8.8 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 4,277.0 | 3,825.2 | -10.6 |
| புடவை மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் | 2,408.5 | 2,030.6 | -15.7 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 291.1 | 207.8 | -28.6 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 1,577.4 | 1,586.8 | 0.6 |
| கனிப் பொருட்கள் | 14.2 | 10.8 | -23.9 |
| ஏனையவை | 7.7 | 11.7 | 51.9 |
| **இறக்குமதிகள்** | 8,801.7 | 6,791.4 | -22.8 |
| நுகர்வு பொருட்கள் | 1,353.7 | 1,241.7 | -8.3 |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 767.8 | 698.7 | -9.0 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 585.9 | 543.0 | -7.3 |
| இடைநிலைப் பொருட்கள் | 5,842.7 | 4,571.1 | -21.8 |
| பெற்றோலியம் | 2,383.8 | 2,064.8 | -13.4 |
| உரம் | 44.5 | 61.6 | 38.4 |
| புடவைகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் | 1,404.7 | 999.9 | -28.8 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 2,009.7 | 1,444.8 | -28.1 |
| முதலீட்டுப் பொருட்கள் | 1,603.3 | 971.4 | -39.4 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,024.9 | 658.8 | -35.7 |
| போக்குவரத்து உபகரணங்கள் | 87.5 | 30.8 | -64.8 |
| கட்டிட மூலப்பொருட்கள் | 489.0 | 280.7 | -42.6 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 1.9 | 1.1 | -42.1 |
| ஏனையவை | 1.9 | 7.3 | 284.2 |
| **வர்த்தக மீதி** | -3,528.3 | -1,925.7 | -45.4 |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் விவசாய ஏற்றுமதியின் வருமானம் ஐ.அ.டொ. 1,017.9 மில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொ 974.5 மில்லியனிலிருந்து 4.5 சதவீத மிதமான அதிகரிப்பாகும். முக்கியமாக தேயிலையிலிருந்து ஐ.அ.டொ. 524.0 மில்லியன் வரை 13.7 சதவீதமும், வாசனைப் பொருட்கள் ஐ.அ.டொ. 148.2 மில்லியன் வரை 16.0 சதவீதமும், கடலுணவிலிருந்து ஐ.அ.டொ. 114.5 மில்லியன் வரை 8.2 சதவீதமும் ஏற்றுமதி வருமானங்கள் அதிரித்துள்ளன. காய்கறிகள் மற்றும் பதனிடப்படாத புகையிலையிலிருந்து கிடைக்கும் வருமானம் முறையே 25.8 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 11.8 மில்லியனாகவும், 25.3 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 11.0 மில்லியனாகவும் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் தென்னை, சிறு விவசாய ஏற்றுமதிகள் மற்றும் இரப்பர் ஆகியவற்றின் வருமானம் முறையே 24.4 சதவீதம் சரிந்து ஐ.அ.டொ. 132.6 மில்லியனினையும் 8.5 சதவீதம் சரிந்து ஐ.அ.டொ. 60.5 மில்லியனினையும் 24.8 சதவீதம் சரிந்து 15.4 மில்லியனினையும் கொண்டிருந்தது.

## இறக்குமதிகள்

இறக்குமதிச் செலவினமானது 2022 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஐ.அ.டொ. 8,801.7 மில்லியனுடன் ஒப்பிடும்போது, நுகர்வோர், இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதி செலவினங்கள் குறைந்தமையால் 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 22.8 சதவீதத்தினால் அல்லது ஐ.அ.டொ. 2010.3 மில்லியனினால், ஐ.அ.டொ. 6,791.4 மில்லியன் வரை குறைந்துள்ளது. உணவு மற்றும் பானங்கள், உணவு அல்லாத நுகர்வுப் பொருட்கள், எரிபொருள், புடைவை மற்றும் புடைவைப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள், கட்டடப் பொருட்கள், பிளாஸ்திக் மற்றும் அதன் பொருட்கள், காகிதம் மற்றும் காகிதப் பலகை மற்றும் அவை சார்ந்த பொருட்கள் போன்ற முக்கிய இறக்குமதி வகைகளில் சரிவேற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அட்டவணை 1.5 உலகம் பற்றிய ஓர் பார்வை - 2022**

| நாடு | 2022<br>உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (வருடாந்த சதவீத மாற்றம்) | பணவீக்கம் (சதவீதம்) | வேலையிண்மை (சதவீதம்) | அரசிறை மீதி (உள்நாட்டு உற்பத்தி சதவீதம்) | மொத்த கடன்(உள்நாட்டு உற்பத்தி சதவீதம்) |
|---|---|---|---|---|---|
| ஆஜன்டீனா | 5.2 | 72.4 | 7.0 | -3.9 | 84.5 |
| அவுஸ்ரேலியா | 3.7 | 6.6 | 3.7 | -3.3 | 55.7 |
| பிரேசில் | 2.9 | 9.3 | 7.9 | -4.6 | 85.9 |
| கனடா | 3.4 | 6.8 | 5.3 | -0.7 | 106.6 |
| சிலி | 2.4 | 11.6 | 7.9 | -1.3 | 38.0 |
| சீனா | 3.0 | 1.9 | 4.2 | -7.5 | 77.1 |
| பிரான்ஸ் | 2.6 | 5.9 | 7.3 | -4.9 | 111.1 |
| ஜேர்மனி | 1.8 | 8.7 | 3.1 | -2.6 | 66.5 |
| கிரீஸ் | 5.9 | 9.3 | 12.2 | -4.0 | 177.4 |
| இந்தியா | 6.8 | 6.7 | …. | -9.6 | 83.1 |
| இந்தோனேசியா | 5.3 | 4.2 | 5.9 | -2.3 | 39.9 |
| இத்தாலி | 3.7 | 8.7 | 8.1 | -8.0 | 144.7 |
| யப்பான் | 1.1 | 2.5 | 2.6 | -7.8 | 261.3 |
| கொரியா | 2.6 | 5.1 | 2.9 | -0.9 | 54.3 |
| மலேசியா | 8.7 | 3.4 | 3.8 | -5.3 | 66.3 |
| மெக்சிகோ | 3.1 | 7.9 | 3.3 | -4.4 | 56.0 |
| ரஷ்யா | -2.1 | 13.8 | 3.9 | -2.2 | 19.6 |
| சிங்கப்பூர் | 3.6 | 6.1 | 2.1 | -0.4 | 134.2 |
| தென் ஆகிரிக்கா | 2.0 | 6.9 | 33.5 | -4.5 | 71.0 |
| ஸ்பெயின் | 5.5 | 8.3 | 12.9 | -4.5 | 112.0 |
| இலங்கை | -7.8 | 46.4 | 4.7 | -10.2 | 113.8 |
| தாய்லாந்து | 2.6 | 6.1 | 1.0 | -5.5 | 60.5 |
| ஐக்கிய இராச்சியம் | 4.0 | 9.1 | 3.7 | -6.3 | 102.6 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.1 | 8.0 | 3.6 | -5.5 | 121.7 |
| வியட்நாம் | 8.0 | 3.2 | 2.3 | -2.5 | 37.1 |
| வெனிசுலா | 8.0 | 201.0 | … | -6.0 | 157.8 |

*மூலம் : "உலக பொருளாதாரக் கண்ணோட்டம்", சர்வதேச நாணய நிதியம் 2023 ஏப்பிரல், நிதிக் கண்காணிப்பு, சர்வதேச நாணய நிதியம் 2023 ஏப்பிரல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் 2022 ஆண்டறிக்கை*

… தகவல் இல்லை

2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 1,353.7 மில்லியனுடன் ஒப்பிடும்போது, முக்கியமாக உணவு மற்றும் பானங்கள் மற்றும் உணவு அல்லாத நுகர்வுப் பொருட்கள் ஆகிய இரண்டினதும் இறக்குமதி செலவினம் குறைந்ததனால் 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 8.3 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 1,241.7 மில்லியன் வரை குறைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் உணவு மற்றும் பானங்கள் மீதான இறக்குமதிச் செலவினைப் பொறுத்தவரை 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ஐ.அ.டொ. 767.8 மில்லியனுடன் ஒப்பிடுகையில், ஐ.அ.டொ. 698.7 மில்லியன் வரை 9.0 சதவீதத்தினால் குறைந்துள்ளது. சர்க்கரை மற்றும் மிட்டாய்களில் ஐ.அ.டொ. 220.5 மில்லியன் வரையான 123.7 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைத் தவிர அனைத்து உப துறைகளிலும் இறக்குமதிச் செலவினம் குறைந்துள்ளது. மேலும், 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் உணவு அல்லாத நுகர்வுப் பொருட்களிலிருந்து இறக்குமதிச் செலவினம் 7.3 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்று ஐ.அ.டொ. 543.1 மில்லியன் பதிவாகியுள்ளது, இது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 585.8 மில்லியன் ஆகும். இருப்பினும் மருத்துவ மற்றும் மருந்தாக்கப்பொருட்களுக்கான செலவினங்கள், 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 230.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஐ.அ.டொ. 306.4 மில்லியன் வரை 32.9 சதவீதத்தினால், குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. மேலும் 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் தனிப்பட்ட வாகனங்களின் இறக்குமதிச் செலவினம் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 2.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொ. 12.5 மில்லியன் வரை 271.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

கோதுமை மற்றும் மக்காச்சோளம், விவசாய உள்ளீடுகள், வைரங்கள், விலைமதிப்பற்ற கற்கள், உலோகங்கள் மற்றும் உரங்கள் தவிர அனைத்து உப துறைகளினதும் செலவினம் குறைந்ததன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொ. 4,571.1 மில்லியன் வரை, 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொ. 5,842.7 மில்லியனிலிருந்து 21.8 சதவீதத்தினால் குறைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஐ.அ.டொ. 1,404.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் புடைவைகளுக்கான செலவினம் ஐ.அ.டொ. 999.9 மில்லியன் வரை 28.8 சதவீதத்தினால் கணிசமாகக் குறைந்துள்ளது. இது உலகளாவிய கேள்வியின் மந்தநிலை காரணமாக புடைவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி வருமானத்தின் படிப்படியான வீழ்ச்சியைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. இதற்கிடையில், முக்கியமாக சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை குறைந்து வருவதாலும், அனைத்துப் பயனாளர்களுக்கும் வாராந்த ஒதுக்கீட்டை உறுதி செய்வதற்காக எரிபொருளுக்கான QR குறியீட்டு முறைமையை செயற்படுத்துவதன் மூலம் அரசாங்கம் எரிபொருளின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதாலும் 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில், குறிப்பாக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் இறக்குமதி செலவினத்தின் 36.6 சதவீத வீழ்ச்சியுடன் எரிபொருளுக்கான இறக்குமதிச் செலவினம் 13.4 சதவீதத்தினால் அல்லது ஐ.அ.டொ. 319.0 மில்லியனினால் ஐ.அ.டொ. 2,064.8 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்தது. இரசாயனப் பொருட்கள் (26.6 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 321.4 மில்லியன் வரை), பிளாஸ்திக் மற்றும் அதன் பொருட்கள் (43.8 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 180.0 மில்லியன் வரை), காகிதம் மற்றும் காகிதப் பலகைகள் (15.5 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 173.3 மில்லியன் வரை), அடிப்படை உலோகங்கள் (58.8 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 91.2 மில்லியன் வரை), இரப்பர் (55.1 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 68.4 மில்லியன் வரை) மற்றும் கனிமப் பொருட்கள் (61.2 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 28.6 மில்லியன் வரை) போன்ற பிற இடைநிலை பொருட்கள் சரிவைப் பதிவு செய்துள்ளன.

2022 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஐ.அ.டொ. 1,603.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில், முதலீட்டு நடவடிக்கைகள் மீதான தொடர்ச்சியான பலவீனமான உள்நாட்டுக் கேள்வி மட்டங்கள் காரணமாக, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கான செலவினம் 35.7 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 658.8 மில்லியன் வரையும், கட்டடப் பொருள் 42.6 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 280.7 மில்லியன் வரையும் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் 64.8 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 30.8 மில்லியன் வரையும் குறைந்ததன் விளைவாக முதலீட்டுப் பொருட்களுக்கான இறக்குமதிச் செலவினமானது 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 39.4 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 971.3 மில்லியனினைப் பதிவுசெய்தது.

## உலகப் பொருளாதார முன்னோக்குகைகள்[1]

உணவு மற்றும் எரிசக்தி தொடர்பான பணவீக்க அழுத்தங்களின் தணிவு மற்றும் சீரான வளர்ச்சிக்கான எதிர்பார்ப்புகளின் காரணமாக படிப்படியான உலகளாவிய பொருளாதார மீட்சி பற்றிய எதிர்பார்ப்பு காணப்பட்டாலும், மேலும் பல சவால்கள் உலகளாவிய வளர்ச்சி வேகத்தைத் தொடர்ந்து தடுத்து வருகின்றன. கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் இரஷ்யா-உக்ரைன் மோதல்கள் உட்பட கடந்த மூன்று ஆண்டுகளில் பாதகமான நிகழ்வுகளின் நீடித்த விளைவுகள் உலகப் பொருளாதாரத்தைத் தொடர்ந்து பாதித்தவண்ணம் உள்ளன.

2022 ஆம் ஆண்டில் பல நாடுகளில் பதிவு செய்யப்பட்ட வரலாற்று உயர்வான பணவீக்கத்தினை சமாளிக்கும் வகையில் கொள்கை விகிதங்களை உயர்த்துவதன் விளைவுகளின் காரணமாக நிதித்துறை கணிசமானளவு பாதிக்கப்படக்கூடியதாக இருப்பதால் நிச்சயமற்ற

1 உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் (2023, ஏப்பிரல், ச.நா.நி), அரசிறைக் கண்காணிப்பு (2023, ஏப்பிரல், ச.நா.நி), உலகளாவிய நிதி நிலைத்தன்மை அறிக்கை (2023, ஏப்பிரல், ச.நா.நி), கொமொடிட்டி மார்க்கெட்ஸ் அவுட்லுக் (2023, ஏப்பிரல், ச.நா.நி), உலகப் பொருளாதார முன்னோக்குகைகள் (2023, யூன், உலக வங்கி), மற்றும் ச.நா.நி, உலக வங்கி மற்றும் உலகளாவிய வலை தளத்திலிருந்து பிற தரவு மற்றும் தகவல்களின் அடிப்படையில்.

தன்மை அதிகமாக உள்ளது. மேலும், 2022 ஆம் ஆண்டில் நாடுகளைப் பாதிக்கச் செய்த மிகவும் பாதகமான பொருளாதார நிலைமைகள் 2023 ஆம் ஆண்டிலும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது: பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த கடுமையான நாணயக் கொள்கை நிலைப்பாடுகள், தொடரும் புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் இரஷ்யா-உக்ரைன் மோதலுடன் தொடர்புடைய பொருட்களின் விலை உயர்வு மற்றும் அதிக கடன் மட்டங்களுக்கு மத்தியில் வரையறுக்கப்பட்ட அரசிறை இடம் போன்றவை. இந்தச் சவால்கள் நிதித் துறையிலுள்ள பாதிப்புகளுடன் மிகவும் அச்சுறுத்தலாக உள்ள பணவீக்கத்தைக் குறைத்தல், வளர்ச்சியைப் பேணுதல் மற்றும் நிதித் துறை ஸ்திரத்தன்மையைக் காத்தல் ஆகியவற்றில் கடினமான பரிமாற்றங்களை எதிர்கொள்ள கொள்கை வகுப்பாளர்களை வழிநடாத்தும்.

## உலகப் பொருளாதார வளர்ச்சி

2022 ஆம் ஆண்டில் 3.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், உலகப் பொருளாதார வளர்ச்சி 2023 ஆம் ஆண்டில் 2.8 சதவீதமாகக் குறைந்து 2024 ஆம் ஆண்டில் மீண்டும் 3.0 சதவீதமாக மெதுவாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், நிதித் துறை அழுத்தங்களைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால், 2023 ஆம் ஆண்டில் உலகளாவிய வளர்ச்சி 2.5 சதவீதம் என்ற விகிதத்தில் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டிற்கு அப்பால், உலகளாவிய பொருளாதார வளர்ச்சி நடுத்தர காலத்தில் 3.0 சதவிகிதத்திற்கும் மேலாகவும், எனினும் தொற்றுநோய்க்கு முந்தைய மட்டங்களுக்குக் குறைவாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னேறிய பொருளாதாரங்களில் வளர்ச்சியானது 2022 ஆம் ஆண்டில் 2.7 சதவீதத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 1.3 சதவீதமாகவும், 2024 ஆம் ஆண்டில் 1.4 சதவீதமாக மெதுவான போக்கினைக் கொண்டிருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டில் 90 சதவீத முன்னேறிய பொருளாதாரங்கள் வளர்ச்சியில் சரிவைக் காணும் என்று கணிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஜேர்மனி (-0.1) மற்றும் ஐக்கிய இராச்சியம் (-0.3) ஆகியவை 2023 ஆம் ஆண்டில் எதிர்மறையான வளர்ச்சி விகிதங்களைக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது..

இதற்கு நேர்மாறாக, வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி விகிதங்கள் 2022 ஆம் ஆண்டில் 4.0 சதவிகிதத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 3.9 சதவிகிதமாகக் குறைந்து 2024 ஆம் ஆண்டில் 4.2 சதவிகிதம் வரை அதிகரித்து மீட்சி நிலைக்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ந்து வரும் மற்றும் விருத்தியடைந்து வரும் ஆசிய நாடுகள் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் முறையே 5.3 சதவீதமாகவும் 5.1 சதவீதமாகவும் வளர்ச்சியைக் கொண்டிருக்கும். முக்கியமாக சீனாவின் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி 2023 ஆம் ஆண்டில் 5.2 சதவீதமாகவும் 2024 ஆம் ஆண்டில் 4.5 சதவீதமாகவும் மற்றும் இந்தியாவின் கணிக்கப்பட்ட வளர்ச்சி 2023 ஆம் ஆண்டில் 5.9 சதவீதமாகவும் 2024 ஆம் ஆண்டில் 6.3 சதவீதமாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பணவீக்கம்

உலகளாவிய பணவீக்கமானது 2022 ஆம் ஆண்டில் 8.7 சதவீதத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 7.0 சதவீதமாகவும், 2024 ஆம் ஆண்டில் 4.9 சதவீதமாகவும் குறையும். சுமார் 76 சதவீத பொருளாதாரங்கள் 2023 ஆம் ஆண்டில் குறைந்த தலைக்குரிய பணவீக்கத்தினை அனுபவிக்குமெனவும் பொதுவாக அனைத்து முக்கிய நாடுகளிலும் பணவீக்கம் குறைந்து செல்லும் போக்கினைக் கொண்டிருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் நுகர்வோர் விலைகளானவை 2022 ஆம் ஆண்டில் 7.3 சதவீதத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 4.7 சதவீதமாகவும், 2024 ஆம் ஆண்டில் 2.6 சதவீதமாகவும் குறைக்கப்படும். வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் பணவீக்கமானது 2022 ஆம் ஆண்டில் 9.8 சதவீதத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 8.6 சதவீதமாகவும் மற்றும் 2024 ஆம் ஆண்டில் 6.5 சதவீதமாகக் குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ந்து வரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் ஆசியாவின் பணவீக்கம் 2023 ஆம் ஆண்டில் 3.4 சதவீதமாகவும், 2024 ஆம் ஆண்டில் 3.0 சதவீதமாகவும் இருக்கும். இருப்பினும், 2023 ஆம் ஆண்டில் வளர்ந்து வரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் ஐரோப்பிய நாடுகளில் (19.7 சதவீதம்), இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் (13.3 சதவீதம்) மத்திய மற்றும் மத்திய ஆசியா (15.9 சதவீதம்) மற்றும் உப-சஹாரா ஆபிரிக்க பகுதியில் (14.0 சதவீதம்) பணவீக்கம் இரட்டை இலக்கங்கள் வரை உயரும்.

## பொருட் சந்தைகள்

2023, மாச்சு நிலவரப்படி, பொருட்களின் விலைகள் 2022, யூன் மாதத்திலிருந்த உச்சநிலையுடன் ஒப்பிடும்போது ஏறக்குறைய 30 சதவீதத்தினால் கணிசமான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன. 2022 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டுடன் ஒப்பிடும்போது 2023, முதல் காலாண்டில் எரிசக்தி விலைகள் 20 சதவீதம் குறைவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. மசகெண்ணெய் விலை 2023 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 24 சதவீதமும், 2024 ஆம் ஆண்டில் மேலும் 5.8 சதவீதமும் குறையுமென கணிப்புகள் தெரிவிக்கின்றன. இருப்பினும், எரிபொருள் அல்லாத பொருட்களின் விலைகள் ஒப்பீட்டளவில் நிலையானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

உற்பத்திச் செலவுகள் மற்றும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய கேள்வியின் நீடித்த வளர்ச்சி காரணமாக விவசாய விலைச் சுட்டெண் 2021 ஆம் ஆண்டில் 108.31 இலிருந்து 2022 ஆம் ஆண்டில் 122.75 ஆக அதிகரித்தது. இருப்பினும், உள்ளீட்டுச் செலவுகள் குறைவதாலும், விவசாயப் பொருட்களின் வழங்கல் அதிகரிப்பதாலும், 2023 ஆம் ஆண்டில் விவசாய விலைகள் 7 சதவீதத்தினால் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## உலகளாவிய வர்த்தகம்

தொற்றுநோயால் தூண்டப்பட்ட உலகளாவிய பின்னடைவு நிலையின் நீடித்த விளைவுகள் மற்றும் வர்த்தகப் பொருட்களிலிருந்து உள்நாட்டுச் சேவைகளை நோக்கி நுகர்வு மாறுதல் காரணமாக உலகளாவிய கேள்வி மந்தமாக இருப்பதால், உலக வர்த்தகத்தின் அளவு 2022 ஆம் ஆண்டில் 5.1 சதவீதத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 2.4 சதவீதமாகவும் 2024 ஆம் ஆண்டில் 3.5 சதவீதமாகவும் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நாணய மற்றும் நிதித் துறை

உலகெங்கிலும் தொடர்ந்து உயர்ந்து சென்ற பணவீக்கத்திற்கு பதிலளிக்கும் விதமாக, உலக நாடுகளிலுள்ள மத்திய வங்கிகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் வட்டி விகித உயர்வுகளை நடைமுறைப்படுத்தியுள்ளன. இத்தகைய விகித அதிகரிப்பு, குறிப்பாக நிலையான பத்திரங்கள் கொண்ட முறிகளுடன் நிதிச் சொத்துகளின் பெறுமதியைக் கணிசமாகக் குறைத்துள்ளது. தொடர்ந்து நிலவும் பணவீக்க அழுத்தங்களுக்கு மத்தியில் நிதிச் சந்தைகளில் உள்ள அழுத்தத்தை நிருவகிப்பது சவாலானது. பணவீக்கத்தை மீண்டும் இலக்கு மட்டங்களுக்கு கொண்டு வரும் அதே வேளையில் நிதி ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் கடினமான பணியை எதிர்கொள்ளும், குறிப்பாக முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் உண்மை நிலை இதுவாகும். மறுபுறம், வளர்ந்து வரும் மற்றும் முன்னணி சந்தைகள் உலகளாவிய நிதி நிலைமைகளில் திடீர் இறுக்கம் மற்றும் அதிகரித்த மூலதன வெளியேற்றம் ஆகியவற்றின் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன.

பாதிக்கப்படக்கூடிய நிதித் துறைகள், வரையறுக்கப்பட்ட அல்லது அரசிறைக் கொள்திறனற்ற நாடுகள் மற்றும் குறிப்பிடத்தக்க வெளிப்புற நிதித் தேவைகள் ஏற்கனவே குறிப்பிடத்தக்க அழுத்தத்தில் உள்ளது மட்டுமன்றி நிலைமைகளில் ஒழுங்கற்ற இறுக்கம் காணப்படுமாயின் மேலும் கடுமையான சவால்களை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது.

**அட்டவணை 1.6 : சர்வதேச பொருட்களின் விலைகள்**

| விடயம் | அலகு | உண்மையான | | மதிப்பிடப்பட்ட | |
|---|---|---|---|---|---|
| | | 2021 | 2022 | 2023 | 2024 |
| **சக்தி** | | | | | |
| நிலக்கரி, அவுஸ்திரேலியா | $மெ.தொ | 138.1 | 344.9 | 200.0 | 155.0 |
| கச்சா எண்ணெய், சராசரி* | $/bbl | 70.4 | 99.8 | 84.0 | 86.0 |
| இயற்கை எரிவாயு, ஐ.அ. | $/MMBTU | 3.9 | 6.4 | 2.7 | 3.7 |
| **சக்தியற்ற** | | | | | |
| **விவசாயம்** | | | | | |
| **குடிபானங்கள்** | | | | | |
| கோலா | $/கிகி | 2.4 | 2.4 | 2.7 | 2.6 |
| கோப்பி, ரொபஸ்டா | $/கிகி | 2.0 | 2.3 | 2.3 | 2.3 |
| தேயிலை | $/கிகி | 2.7 | 3.1 | 2.7 | 2.8 |
| **உணவு** | | | | | |
| **கொழுப்புகள் மற்றும் எண்ணெய்கள்** | | | | | |
| பாம் எண்ணெய் | $மெ.தொ | 1,131.0 | 1,276.0 | 980.0 | 1,020.0 |
| சோயாபீன் உணவு | $மெ.தொ | 481.0 | 548.0 | 590.0 | 570.0 |
| சோயாபீன்கள் | $மெ.தொ | 583.0 | 675.0 | 590.0 | 540.0 |
| **தானியங்கள்** | | | | | |
| சோளம் | $மெ.தொ | 260.0 | 319.0 | 270.0 | 240.0 |
| நெல் | $மெ.தொ | 458.0 | 437.0 | 510.0 | 490.0 |
| கோதுமை | $மெ.தொ | 315.0 | 430.0 | 355.0 | 335.0 |
| **ஏனைய உணவுகள்** | | | | | |
| சீனி | $/கிகி | 0.4 | 0.4 | 0.5 | 0.5 |
| **மூலப் பொருட்கள்** | | | | | |
| பருத்தி | $/கிகி | 2.2 | 2.9 | 2.2 | 2.3 |
| இறப்பர் | $/கிகி | 1.7 | 1.5 | 1.4 | 1.5 |
| அறுக்கப்பட்ட மரம் | $/cum | 750 | 675 | 680 | 689 |
| **உலோகங்கள் மற்றும் கனிமங்கள்** | | | | | |
| அலுமினியம் | $மெ.தொ | 2,473 | 2,705 | 2,400 | 2,450 |
| செம்பு | $மெ.தொ | 9,317 | 8,822 | 8,500 | 8,000 |
| நிக்கல் | $மெ.தொ | 18,465 | 25,834 | 22,000 | 20,000 |

*மூலம் : விலை முன்னறிவிப்பு சர்வதேச நாணய நிதியத்தைத் தழுவியது, www.worldbank.org/en/research/commodity.markets இல் கிடைக்கும்*

** பெற்றோலிய விலை, ஐ.இ. < ப்ரென்ட், டுபாய் மற்றும் மேற்கு ரெக்ஸாஸ் இடைநிலை நேரடி விலைகளின் சராசரியாகும்*

## கட்டம் 1.1: வருமான அடிப்படையிலமைந்த அரசிறை ஒருங்கிணைப்பும் படுகடன் மீள்கட்டமைப்பும்

இலங்கையானது பல வருடங்களாக பொதுப் படுகடனில் அதிக சுமையை எதிர்கொண்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வரிக் கொள்கை மாற்றங்களைத் தொடர்ந்து வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையின் வேகமான அதிகரிப்பு மற்றும் தொற்றுநோய்களின் பாதகமான தாக்கங்களுடன் பொதுப் படுகடன்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, நீடித்து நிலைக்க முடியாத மட்டங்களை எட்டியது. 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், முக்கிய கடன் தரமதிப்பீட்டு நிறுவனங்கள் இறையாண்மைக் கடன் மதிப்பீட்டைக் குறைத்ததால், உலக மூலதனச் சந்தைகளுக்கான அணுகலை இலங்கை இழந்தது. இதன்படி, இலங்கையானது வருடத்திற்கு ஐ.அ.டொ. 5 பில்லியன் முதல் ஐ.அ.டொ. 6 பில்லியன் வரை வெளிநாட்டுக் கடனை, தொடர்ந்து செலுத்தும் போது, கடனை மீள்நிதியளிப்பதற்கு வெளிநாட்டு மூலதனத்தை திரட்ட முடியாது. இந்தச் செயற்பாட்டில் வெளிநாட்டு ஒதுக்குகள் கடுமையாகக் குறைந்துவிட்டதுடன் 2022, ஏப்பிரலிற்குள் பயன்படுத்தக்கூடிய ஒதுக்குகள் மிகக் குறைவான மட்டங்களை எட்டியதால், கடன் மறுசீரமைப்பு நிலுவையிலுள்ள வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதனை, நாடு ஒருதலைப்பட்சமாக நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இலங்கையானது நீடிக்கப்பட்ட நிதி வசதியைப் பாதுகாக்கும் நோக்கில் 2022, ஏப்பிரலில் சர்வதேச நாணய நிதியத்துடன் முறைப்படி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. சர்வதேச நாணய நிதியத்தின் விதிகள் தாங்க முடியாத கடனைக் கொண்டுள்ள நாடுகளுக்கு நிதியை வழங்க அதனை அனுமதிப்பதில்லை. எனவே இலங்கையின் கடனை மறுசீரமைப்பது என்பது சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கான முக்கியமான முன்நிபந்தனையாக மாறியது. ஆதலால், சர்வதேச நாணய நிதியத்துடனான ஈடுபாட்டிற்கு இணையாக, நிதி ஆலோசகர்களான லசார்ட் பிரேரஸ் மற்றும் சட்ட ஆலோசகர்களான கிளிபர்ட் சான்ஸ் ஆகியோரின் ஒத்தழைப்புடன் பொதுப் படுகடனை மறுசீரமைப்பதற்கான பேச்சுவார்த்தையை அரசாங்கம் ஆரம்பித்தது.

படுகடன் மறுசீரமைப்பு செயல்முறையின் முதல் படிமுறைகளில் ஒன்று சர்வதேச நாணய நிதியத்தினால் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வை உருவாக்குவதாகும். கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வானது, எதிர்காலத்தில் நாட்டின் பேரண்டப் பொருளாதார கட்டமைப்பை கோடிட்டுக் காட்டுவதுடன் நாட்டின் கடனை நிலையானதாக மாற்ற பொதுக் கடனில் தேவையான குறைப்பு மதிப்பீட்டையும் மேற்கொள்கிறது. அடிப்படையில், காலப்போக்கில் பொதுப் படுகடன் குறைப்பு என்பது உள்நாட்டு அரசிறை ஒருங்கிணைப்பு மற்றும் நிலுவையிலுள்ள கடனைக் கடன்தார்களால் குறைப்பதன் மூலம் பெறப்படுகிறது. முன்னையது, அதிகரித்த அரசாங்க வருமானம் மற்றும் செலவினங்களை நிருவகிப்பதன் ஊடாக உள்நாட்டு வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைப்பதன் மூலம் அடையப்படுகிறது - இது கடனாளி நாட்டின் பிரஜைகள் சுமக்கும் சுமைப் பகிர்வின் ஒரு பகுதியை உள்ளடக்கியது. பின்னையது (கடன்தாரர்கள் வைத்திருக்கும் படுகடனைக் குறைத்தல்) பெயரளவு வெட்டுக்கள், முதிர்வு நீடிப்புகள், பத்திரக் குறைப்புக்கள், கடன்தருநர்களின் நிலுவையிலுள்ள படுகடன் கருவிகள் ஆகியவற்றின் மூலம் அடையப்படுகிறது. நிலுவையிலுள்ள கடனில் தேறிய தற்போதைய பெறுமதியில் ஏற்படுத்தப்படும் குறைப்பு, கடன்தாரர்களால் பொறுப்பேற்கப்பட்ட சுமைப் பகிர்வு ஆகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான படுகடன் நிலைத்தன்மை பகுப்பாய்வானது கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கு பொதுக் கடனில் கணிசமான அளவு குறைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகிறது. படுகடன் நிலைத்தன்மை பகுப்பாய்வின் மூன்று முக்கிய குறிகாட்டிகள் பின்வருமாறு;

### அட்டவணை 1 : படுகடன் நிலைத்தன்மை பகுப்பாய்வின் மூன்று முக்கிய குறிகாட்டிகள்

| குறிகாட்டி | 2022 | 2027 - 2032 |
|---|---|---|
| மொ.உ.உ. % இல் பொதுப்படுகடன் | 128% | 95% (2032) |
| மொத்த நிதியளிப்புத் தேவைகள்/ மொ.உ.உ. % | 34.5% | 13% |
| வெளிநாட்டுப் படுகடன் சேவை/ மொ.உ.உ. % | 9.4% | 4.5% |

### கட்டம் 1.1: வருமான அடிப்படையிலமைந்த அரசிறை ஒருங்கிணைப்பும் படுகடன் ... (தொடர்ச்சி)

அதற்கிணங்க, 2023-2027 காலகட்டத்தில் படுகடன் சேவையில் எதிர்பார்க்கப்படும் குறைப்பு ஐ.அ.டொ. 17 பில்லியனாகக் காணப்படும். இது நாட்டின் பொதுப் படுகடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கு இலங்கையின் கடன் வழங்குநர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும். அரசாங்கத்தின் வருடாந்த மொத்த நிதித் தேவைகளில் உள்நாட்டுக் கடன் சேவையின் பங்கை வழங்கிய இலங்கையின் உள்நாட்டுக் கடன் வழங்குநர்களின் பங்களிப்பும் இதில் அடங்கும். நாட்டின் நிதித் துறையின் ஸ்திரத்தன்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தாமல், திட்டமிடப்பட்ட கடன் இலக்குகளை அடைவதற்காக, உள்நாட்டுக் கடனின் உச்சப்பயன் செயல்முறை கவனமாக அளவீடு செய்யப்பட்டுள்ளது.

கடன் வழங்குநர்களிடமிருந்து கடன் குறைப்புக்கான பங்களிப்பைக் கருத்தில் கொண்டு, படுகடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான சுமைகளில் இலங்கை மக்கள் பங்கு கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது. இது வரவுசெலவு திட்டப் பற்றாக்குறையைக் குறைப்பதன் மூலம் குறிப்பாக வரவுசெலவுத் திட்டத்தின் ஆரம்பப் பற்றாக்குறையைக் குறைப்பதன் மூலம் (வருமானம் கழித்தல் செலவினம் கூட்டல் வட்டிச் செலவு) அடையப்படுகிறது. அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் படுகடன் நிலைத்தன்மை பகுப்பாய்வானது 2025 ஆம் ஆண்டு முதல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீத வரவுசெலவு திட்ட ஆரம்ப மிகையை உள்ளடக்கியுள்ளதுடன், குறிப்பாக மொத்த நிதித் தேவைகள் மீதான இலக்கை அடைவதிலும் முக்கியமானதாகவுள்ளது.

இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தின் கட்டமைப்பைக் கருத்தில் கொண்டு, வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கான முக்கிய முயற்சியானது மேம்படுத்தப்பட்ட அரசாங்க வருவாயிலிருந்து மேற்கொள்ளப்படும். இலங்கையின் அரசாங்க வருமானம் உலகளாவிய சராசரியை விட (2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.2 சதவீதம்) கணிசமானளவு குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகும். அதேசமயம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 18 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையிலான அரசாங்க செலவினம் உலகளாவிய தரத்தின்படி அதிகமாக இல்லை. மேலும், கல்வி, சுகாதாரம், பொதுப் போக்குவரத்து, எண்ணியல் மயமாக்கல் மற்றும் பிற துறைகளில் கூடுதல் செலவுகள் தேவைப்படும் பகுதிகளுள்ளன.

இந்தச் சூழலில்தான் அரசாங்கத்தின் வருவாயை உயர்த்துவதற்கான தற்போதைய முயற்சிகள் குறிப்பிடத்தக்களவில் முக்கியத்துவம் பெறுகின்றன. இலங்கையானது தனது கடன்தருநர்களை நாட்டிற்குக் கடனளிப்பதில் கணிசமான இழப்புகளை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதால், கடனளிப்பவர்கள் இலங்கையின் குடிமக்களிடமிருந்து சடரீதியான அரசிறை முயற்சியை எதிர்பார்க்கிறார்கள் என்பது நன்கு புரிந்து கொள்ளப்படுகிறது. குறிப்பாக அவர்களின் வரி செலுத்துவோர் படுகடன் மறுசீரமைப்பின் போது இழப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய உத்தியோகபூர்வ இருதரப்பு கடன்தாரர்களின் விடயத்தில் இது உண்மையாகும்.

இந்த நோக்கத்திற்காக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கணிசமான வரிக் கொள்கையை மேம்படுத்துவதன் மூலம் இலங்கை ஏற்கனவே குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது. இருந்தபோதிலும், இலங்கையின் படுகடன் மறுசீரமைப்பு இலக்குகளை அடைவதை உறுதி செய்வதற்காக, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆரம்ப மிகை இலக்கான 2.3 சதவீதத்தை நிலையான அடிப்படையில் சந்திக்கும் வகையில் வரி வருவாயைத் தொடர்ந்து மேம்படுத்துவது அவசியம். மேலும், ஆரம்ப மிகை இலக்கை உள்ளடக்கிய அரசிறை முயற்சியில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டால், உள்நாட்டுப் படுகடன் உச்சப்பயன் செயல்பாட்டில் அடையப்பெற்ற நுட்பமான சமநிலையை ஆபத்தில் ஆழ்த்தி மறுபுறம் ஏதேனும் அரசிறைப் பற்றாக்குறைக்காக உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தேவைப்பட்டால் நாட்டின் நிதி ஸ்திரத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.

வரிக் கொள்கையை மறுசீரமைப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக, எதிர்பார்க்கப்பட்ட வருவாய் இலக்குகள் மற்றும் ஆரம்ப மிகை இலக்கை அடைவதில் வரி நிருவாக நடவடிக்கைகள் பெரும் பங்கு வகிக்கும். இந்த இலக்குகளை ஒரு நிலையான அடிப்படையில் அடையத் தவறின், இலங்கை தற்போது மேற்கொண்டு வரும் பொருளாதார மீட்சிக்கு ஆபத்தை ஏற்படுத்துவதுடன், 2022 ஆம் ஆண்டில் எதிர்கொள்ளப்பட்ட மிகவும் கடினமான நிலைமைகளுக்கு நாட்டைத் தள்ளும் அபாயம் உள்ளது.

# அத்தியாயம் 2

## அரசிறை அபிவிருத்திகள்

### மேன்நோக்கு

அரசாங்கமானது, அதிகரித்த வருமான சேகரிப்பு காரணமாக, பற்றாக்குறை இலக்காகிய ரூபா 56 பில்லியனினை விட ரூபா 48.3 பில்லியன் மிகையை அடையப்பெற்று 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான ஆரம்ப மீதி இலக்கைத் தாண்டியிருந்தது. வரிக் கட்டமைப்பை முற்போக்கானதாகவும், பரந்த அடிப்படையிலானதாகவும் மாற்றுவதற்காக 2022, யூன் முதல் தொடர்ச்சியான வலுவான கொள்கை நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. முன்னுரிமை நிறுவன வருமான வரி விகிதங்களினையும் வரி விலக்குகளையும் அகற்றுதல், கட்டாய மேம்படுத்தப்பட்ட தனியாள் வருமான வரி, பிடித்துவைத்தல் வரி ஆகியவற்றினை மீண்டும் அறிமுகப்படுத்துதல், தனியாள் வருமான வரி விகிதங்களினையும் பெறுமதி சேர் வரி விகிதங்களினையும் உயர்த்துதல் போன்ற கொள்கை நடவடிக்கைகள், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மேம்பட்ட வருமான செயலாற்றுகைக்கு முக்கியமாகப் பங்களித்துள்ளன. எவ்வாறாயினும், உயர் உள்நாட்டு பணவீக்கம், வலுவற்ற உள்நாட்டு நாணயம், உயர்ந்த உலகளாவிய பொருட்களின் விலைகள் மற்றும் கடுமையான அரசாங்க மீண்டெழும் செலவினங்கள் ஆகியவற்றிற்கு மத்தியில், அரசாங்க செலவினங்களை ஒருங்கிணைப்பது தொடர்ந்து சவாலானதாக இருந்தது.

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மொத்த அரசாங்க வருமானமாக ரூபா 820.1 பில்லியன் பதிவுசெய்யப்பட்ட அதேவேளை வரி வருமானத் திரட்டலின் விளைவாக 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 630.9 பில்லியனினை விட இது 30.0 சதவீத அதிகரிப்பினைப் பெற்றதுடன் ரூபா 3,408.0 பில்லியன் வருடாந்த மதிப்பீட்டில் 24.1 சதவீதத்தை எட்டியது. 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வரி வருமானம் 36.6 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 742.6 பில்லியனினை அடையப்பெற்றது. முக்கியமாக பெறுமதி சேர் வரி, வருமான வரி, உற்பத்தி வரி மற்றும் 2022, ஒற்றோபரில் அறிமுகப்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு ஆகியவற்றின் உயர் வருமானச் செயலாற்றுகையின் பயனாக, 2023 ஆம் ஆண்டிற்கான ரூபா 3,130.0 பில்லியன் வருடாந்த மதிப்பீட்டில் 23.7 சதவீதம் பதிவாகியது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் செஸ், விசேட வியாபாரப் பண்ட அறவீடு மற்றும் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு ஆகியவற்றின் வருமானம் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்துள்ளது. வரி அல்லாத வருமானத்தினைப் பொறுத்தவரை, முக்கியமாக மத்திய வங்கியின் இலாபங்கள் பெறப்படாததன் காரணமாக 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 30 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 77.5 பில்லியன் வரை 11.2 சதவீதத்தினால் சரிவடைந்தது. இருப்பினும், 2023 வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் திருத்தம் காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அபராதக் கட்டணங்களும் அறவீடுகளும் 73.4 சதவீதம் கணிசமாக அதிகரித்து 39.6 பில்லியனினைப் பதிவுசெய்தது. இவ் வருமானம் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 22.9 பில்லியன் ஆகும்.

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட ரூபா 149.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் வருமான வரி வருவாயானது, கட்டாய மேம்படுத்தப்பட்ட தனியாள் வருமான வரியின் அறிமுகத்துடன் மேம்படுத்தப்பட்ட தனியாள் வருமான வரி அதிகரித்ததன் விளைவாக 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் வருமான வரி 28.6 சதவீதம் அதிகரித்து ரூபா 191.8 பில்லியனினைக் கொண்டிருந்தது. மேம்படுத்தப்பட்ட தனியாள் வருமான வரி வருவாய் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 40.1 பில்லியனாகக் காணப்பட்டது. இவ் வருமானம் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 7.2 பில்லியன் ஆகும். 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 72.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் நிறுவன வருமான வரியும் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 105.0 பில்லியன் வரை கணிசமாக அதிகரித்தது. வரி விலக்குகள் மற்றும் முன்னுரிமை விகிதங்கள் அகற்றப்பட்டு நிறுவன வருமான வரி விகிதம் 30 சதவீதமாக உயர்த்தப்பட்டமையே இதற்கு வழிவகுத்தது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் குறிப்பிடத்தக்க செயலாற்றுகையைக் காண்பித்துள்ளன. இவை 64.2 சதவீதம் அதிகரித்து ரூபா 442.3 பில்லியனினைப் பதிவுசெய்தன. உள்நாட்டு நடவடிக்கைகள் மீதான பெறுமதி சேர் வரி 2022 ஆம் ஆண்டில் ரூபா 85.3 பில்லியனிலிருந்து ரூபா 158.2 பில்லியன் வரை 85.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தாலும், முக்கியமாக இலங்கை ரூபாவின் பெறுமதித் தேய்வு மற்றும் உலகளாவிய பண்டங்களின் விலை அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக இறக்குமதி மீதான பெறுமதி சேர் வரி 27.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 65.0 பில்லியனாகக் காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் உற்பத்தி வரிகளின்

வருமானமும் 11.7 சதவீதம் அதிகரித்து ரூபா 136.6 பில்லியனினைப் பதிவுசெய்ததுடன், பெற்றோலியப் பொருட்கள் மற்றும் சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரியின் அதிகரிப்பு இதற்குப் பங்களித்துள்ளது. மறுபுறம் மது வரி வருமானம் ரூபா 58.2 பில்லியன் வரை 2.2 சதவீதத்தினால் சற்று வீழ்ச்சியடைந்தது.

2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, முதல் நான்கு மாதங்களில் சுங்க இறக்குமதித் தீர்வையைத் தவிர வெளிநாட்டு வர்த்தகக் கட்டமைப்பின் மீதான அனைத்து வரிகளும் குறைந்துள்ளன. வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் 2022 ஆம் ஆண்டில் ரூபா 125.2 பில்லியனிலிருந்து 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 13.3 சதவீதம் சரிவடைந்து ரூபா 108.5 பில்லியனாகவும், துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு மற்றும் செஸ் அறவீட்டு வருமானம் முறையே 9.5 சதவீதமாகவும் 43.0 சதவீதமாகவும் குறைந்து ரூபா 56.7 பில்லியனாகவும் ரூபா 16.7 பில்லியனாகவும் காணப்பட்ட அதேவேளை, இறக்குமதி - சுங்க இறக்குமதித் தீர்வை 15.8 சதவீதம் அதிகரித்து ரூபா 20.3 பில்லியனினையும் கொண்டிருந்தது. பொருளாதார போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் சர்வதேச வர்த்தகத்தில் உள்ள தடைகளை நீக்குவதற்கும் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு மற்றும் செஸ் ஆகியவற்றினை முறையே 5 ஆண்டுகள் மற்றும் 3 ஆண்டுகளுக்குள் நீக்க 2023 – வரவுசெலவு திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் காரணமாக துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு மற்றும் செஸ் ஆகியவற்றில் இவ்வருமானச் செயலாற்றுகை மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில், காப்பு வரிகள் படிப்படியாக அகற்றப்படுவதால் வருவாய் தாக்கத்தை குறைக்க சுங்க இறக்குமதித் தீர்வை விகிதங்கள் 0 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 20 சதவீதம் எனத் திருத்தப்பட்டன. உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவுகளை எளிதாக்குவதற்கு அறவீட்டு விகிதங்கள் அவ்வப்போது குறைக்கப்பட்டமையால் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வருமானமும் ரூபா 14.9 பில்லியனாக 5.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 1,155.2 பில்லியனாகக் காணப்பட்ட அரசாங்க செலவினம் 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 1,645.6 பில்லியன் வரை 42.4 சதவீதம் அதிகரித்துள்ளது. மீண்டெழும் செலவினம் 46.0 சதவீதம் அதிகரித்து ரூபா 1,485.0 பில்லியனினையும் மற்றும் மூலதனச் செலவினமும் தேறிய கடன் பெறுகையும் 16.0 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 160.6 பில்லியனினையும் பதிவுசெய்தது. வட்டிக் கொடுப்பனவு, ஓய்வூதியம் மற்றும் நலன்புரித் திட்டங்களுக்கான அதிகரித்த செலவினமே செலவினங்களின் உயர்வுக்கு முக்கிய காரணமாகும். அரசாங்கக் கடனுக்கான அதிக வட்டி விகிதங்கள் காரணமாக உள்நாட்டுப் படுகடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் 130.8 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, வெளிநாட்டுப் படுகடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் 64.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பெருமளவிலான அரச ஊழியர்கள் ஓய்வு பெற்றதன் காரணமாக அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஊதியத்திற்கான செலவு 4.0 சதவீதத்தினால் குறைந்துள்ளது. அதே காரணத்தினால் ஓய்வூதிய கொடுப்பனவுக்கான செலவு 6.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. முக்கியமாக “சமூர்த்தி” திட்டத்தின் செலவு அதிகரிப்பு மற்றும் சமூகத்தின் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு கூடுதல் நிவாரணம் வழங்கப்படுவதன் காரணமாக நலன்புரிச் செலவினம் 38.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 2.1 : 2023 சனவரி முதல் ஏப்பிரல் வரையிலான வரவு செலவுத்திட்ட சுருக்கம்**

ரூபா.மில்லியன்

| விடயம் | 2022 | 2023 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **வருமானம் மற்றும் மானியங்கள்** | 631,129 | 821,346 |
| **வருமானம்** | 630,908 | 820,070 |
| வரி வருமானம் | 543,649 | 742,578 |
| வரி அல்லாத வருமானம் | 87,259 | 77,493 |
| மானியங்கள் | 221 | 1,276 |
| செலவினம் | 1,155,229 | 1,645,602 |
| மீண்டெழும் | 1,016,810 | 1,484,984 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 426,786 | 818,969 |
| ஏனையவை | 590,023 | 666,015 |
| அரசாங்க முதலீடுகள் | 140,999 | 177,903 |
| ஏனையவை | (2,580) | (17,285) |
| **வருமானப் பற்றாக்குறை (+)/மிகை(-)** | (385,902) | (664,913) |
| **மெத்த வரவு செலவுத்திட்ட மிகை (+)/பற்றாக்குறை(-)** | (524,100) | (824,256) |
| **நிதியீட்டம்** | 524,100 | 824,256 |
| வெளிநாட்டு நிதியீட்டம் | (126,985) | (77,498) |
| கடன் பெறுகை | 111,742 | 49,970 |
| மீள் கொடுப்பனவு | (238,727) | (127,468) |
| உள்நாட்டு நிதியீட்டம் | 651,085 | 901,753 |
| கடன் பெறுகை | 3,564,527 | 6,045,994 |
| மீள் கொடுப்பனவு | (2,913,443) | (5,144,241) |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**அட்டவணை 2.2 : 2023 சனவரி முதல் ஏப்பிரல் வரையிலான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானமும் செலவினமும்**

ரூபா.பில்லியன்

| விடயம் | மதிப்பிடப்பட்ட (வருடாந்த) | உண்மையான (தற்காலிக) | அடைவு (%) |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | 3,408 | 820 | 24.1 |
| வரி வருமானம் | 3,130 | 743 | 23.7 |
| வரியல்லா வருமானம் | 278 | 77 | 27.9 |
| **மொத்த செலவினம்** | 5,819 | 1,646 | 28.3 |
| மீண்டெழும் செலவினம் | 4,609 | 1,485 | 32.2 |
| மூலதனச் செலவினம் மற்றும் தேறிய பெறுகைகள் | 1,210 | 161 | 13.3 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## அரசாங்க வருமானம்

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், மானியங்கள் தவிர்த்து அரசின் மொத்த வருமானம் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 630.9 பில்லியனிலிருந்து 30.0 சதவீதம் அதிகரித்து ரூபா 820.1 பில்லியனினைக் கொண்டிருந்தது. இதற்குக் காரணம், வரி வருமானத்தில் ரூபா 742.6 பில்லியன் வரையான 36.6 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டமையாகும். இருப்பினும், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வரி அல்லாத வருமானம் 11.2 சதவீதம் குறைந்து ரூபா 77.5 பில்லியனாகக் காணப்பட்டதுடன் ஆண்டுக்குரிய மதிப்பிடப்பட்ட வருமானமாகிய ரூபா 3,408 பில்லியன் தொகையின் 24.1 சதவீதமாக இருந்தது.

**அட்டவணை 2.3 : 2023 சனவரி - ஏப்பிரல் வரையில் வருடாந்த மதிப்பீடு மற்றும் உண்மையான வரி வருமானம்**

ரூபா.பில்லியன்

| விடயம் | வருடாந்த மதிப்பீடு | உண்மையான (சன - ஏப்) (தற்காலிகமானது) |
|---|---|---|
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | |
| வருமானம் மற்றும் இலாபங்கள் மீதான வரி | 912 | 192 |
| பெறுமதிசேர் வரி - உள்நாட்டு | 553 | 158 |
| தேச கட்டுமான வரி - உள்நாட்டு | - | 0 .02 |
| SSCL - உள்நாட்டு | 186 | 54 |
| **உப மொத்தம்** | 1,651 | 404 |
| **சுங்கத் திணைக்களம்** | | |
| இறக்குமதி தீர்வைகள் | 80 | 20 |
| பெறுமதிசேர் வரி - இறக்குமதிகள் | 355 | 65 |
| SSCL- இறக்குமதிகள் | 64 | 15 |
| தேச கட்டுமான வரி - இறக்குமதிகள் | - | 0.1 |
| துறைமுக விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு | 220 | 57 |
| இறக்குமதி.்.ஏற்றுமதி செஸ் | 85 | 17 |
| விடே வியாபார பண்ட அறவீடு | 70 | 15 |
| உற்பத்தி வரி விசேட ஏற்பாடுகள் | 346 | 78 |
| சிகரட் | 140 | 43 |
| பெற்றோலியம் | 142 | 28 |
| மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற | 64 | 8 |
| **உப மொத்தம்** | 1,220 | 268 |
| **மதுவரித் திணைக்களம்** | | |
| மதுபானம்.்.புகையிரம் | 214 | 58 |
| **உப மொத்தம்** | 214 | 58 |
| **ஏனையவை** | | |
| தொலைத்தொடர்பு அறவீடு | 20 | 5 |
| உரிமப் பத்திர வரி மறறும் எனையவை | 25 | 7 |
| **உப மொத்தம்** | 45 | 13 |
| **மொத்த வரி வருமானம்** | 3,130 | 743 |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வரி வருமானமானது, 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகிய ரூபா 543.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில், வருமான வரியிலிருந்து 28.6 சதவீதத்தால் ரூபா 191.8 பில்லியன், பெறுமதி சேர் வரியிலிருந்து 63.9 சதவீதம் அதிகரித்து ரூபா 223.2 பில்லியன், சிகரெட் மீதான உற்பத்தி வரி 29.6 சதவீதம் அதிகரித்து ரூபா 42.7 பில்லியன் மற்றும் பெற்றோலியம் மீதான உற்பத்தி வரி 68.8 சதவீதம் அதிகரித்து ரூபா 27.8 பில்லியன் வரை, வரி வருமானங்கள் 36.6 சதவீதத்தினால் கணிசமானளவு அதிகரித்து ரூபா 742.6 பில்லியனினைப் பதிவுசெய்தன. மேலும், முதல் நான்கு மாதங்களில் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானமாகிய ரூபா 69.9 பில்லியனும் இந்த வளர்ச்சிக்குப் பங்களித்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், வரி வருமான சேகரிப்பு 2023 ஆம் ஆண்டிற்கான ரூபா 3,130 பில்லியன் மதிப்பீட்டுத் தொகையில் 23.7 சதவீதமாக இருந்தது.

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வரி அல்லாத வருமானம், 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 87.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 77.5 பில்லியன் வரை 11.2 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. இது முக்கியமாக வட்டி வருமானம் (173.6 சதவீதம்) மற்றும் அபராதம், கட்டணம் மற்றும் அறவீடுகளின் (73.4 சதவீதம்) வருமானம் அதிகரித்தாலும், மத்திய வங்கியின் இலாபப் பரிமாற்றங்கள் பெறப்படாமை மற்றும் இலாபங்கள் மற்றும் பங்கிலாபத் தொகைகள் (16.1 சதவீதம்), வாடகை (40.6 சதவீதம்) மற்றும் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை (6.5 சதவீதம்) வீழ்ச்சியடைந்தமையின் பிரதிபலிப்பாகும். அத்துடன், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், வரி அல்லாத வருமானத்தின் சேகரிப்பு, 2023 ஆம் ஆண்டிற்கான ரூபா 278.0 பில்லியன் மதிப்பீட்டுத் தொகையில் 27.9 சதவீதமாக இருந்தது.


**அட்டவணை 2.4 : 2023 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம்**

ரூபா.மில்லியன்

| விடயம் | 2022 | 2023 (தற்காலிகமானது) | வளர்ச்சி % |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | 543,649 | 742,578 | 36.6 |
| வருமான வரி | 149,163 | 191,768 | 28.6 |
| உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி | 180,090 | 314,848 | 74.8 |
| பெறுமதி சேர் வரி | 85,314 | 158,181 | 85.4 |
| சமூக பாதுகாப்பு உதவு தொகை அறவீடு | - | 54,396 | - |
| உற்பத்தி வரி | 94,726 | 102,246 | 7.9 |
| தேச கட்டுமான வரி | 50 | 24 | -51.9 |
| இறக்குமதி அடிப்படையிலான வரி | 203,582 | 223,414 | 9.7 |
| சுங்கத் தீர்வை | 17,505 | 20,264 | 15.8 |
| பெறுமதிசேர் வரி | 50,832 | 65,007 | 27.9 |
| தேச கட்டுமான வரி | 9 | 148 | 1,555.9 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 62,633 | 56,685 | -9.5 |
| விசேட வியாபார பண்ட அறவீடு | 15,797 | 14,872 | -5.9 |
| சமூக பாதுகாப்பு உதவு தொகை அறவீடு | - | 15,456 | - |
| உற்பத்தி வரி | 27,571 | 34,319 | 24.5 |
| செஸ் அறவீடு | 29,235 | 16,663 | -43.0 |
| உரிமப் பத்திர வரிகள் மற்றும் ஏனையவை | 10,814 | 12,548 | 16.0 |
| **வரி அல்லாத வருமானம்** | 87,259 | 77,493 | -11.2 |
| **மொத்த வருமானம்** | 630,908 | 820,070 | 30.0 |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**வரைபு 2.1 : 2023 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் அரச வருமானத்தின் பங்குகள்**




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

## வரி வருமானம்

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மொத்த வருவாயில் 90.6 சதவீதமாக இருந்த வரி வருமானம், 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவாகிய ரூபா 543.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 36.6 சதவீதம் அதிகரித்து 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 742.6 பில்லியனினைப் பதிவுசெய்தது. நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரி மூலம் 54.9 சதவீதமும், மேம்பட்ட தனியாள் வருமான வரி 458.5 சதவீதமும், பிடித்துவைத்தல் வரி 605.8 சதவீதமும் அதிகரித்ததன் காரணமாக வருமான வரி வருவாய் ரூபா 149.2 பில்லியனிலிருந்து 28.6 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 191.8 பில்லியனினைக் கொண்டிருந்தது. மேலும், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 223.2 பில்லியனினைப் பதிவுசெய்த பெறுமதி சேர் வரியின் அதிகளவான வருமானத் திரட்டல், வரி வருவாயின் வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியது. அதேசமயம், மொத்த வரி வருவாயில் 74.2 சதவீதமாக இருக்கும் நேரடியல்லாத வரிகளின் வருமானம் 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காணப்பட்ட ரூபா 394.5 பில்லியனிலிருந்து 39.6 சதவீதத்தினால் அதிகரித்து 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 550.8 பில்லியனினைக் கொண்டிருந்தது.

## வருமான வரி

நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரி, மேம்பட்ட தனியாள் வருமான வரி மற்றும் பிடித்து வைத்தல் வரி ஆகியவற்றின் வரி வருமானம் அதிகரித்ததன் காரணமாக வருமான வரி வருவாய் 2023 முதல் நான்கு மாதங்களில் ரூபா 191.8 பில்லியனினைப் பதிவுசெய்தது. இத்தொகையானது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவாகிய ரூபா 149.2 பில்லியனினை விட 28.6 சதவீத கணிசமான அதிகரிப்பாகும். மதிப்பீட்டாண்டொன்றிற்கு தனிப்பட்ட நிவாரணமாக ரூபா 1.2 மில்லியனினைத் தாண்டும் அனைத்து வரி செலுத்துவோருக்கும் 2023, சனவரி 01 ஆம் திகதி முதல் வேலைவாய்ப்பு வருமானத்தின் மீது மேம்பட்ட தனியாள் வருமான வரி மற்றும் பிடித்து வைத்தல் வரி ஆகியவற்றினை கட்டாயமாக்கியமையே இதற்குக் காரணமாகும். அதிகபட்ச தனியாள் வருமான வரி விகிதங்களை 18 சதவீதத்தில் இருந்து 36 சதவீதமாக உயர்த்தி, வரி விதிக்கத்தக்க வருமானத்தின் மீதான வரி அடுக்குகளை ரூபா 3 மில்லியனிலிருந்து ரூபா 500,000 வரை குறைத்த அதே நேரத்தில், வரி நிவாரணத்தைத் தாண்டும் ஒவ்வொரு ரூபா 500,000 இற்கும் தனியாள் வருமான வரி விகிதங்கள் 6 சதவீதத்திலிருந்து 36 சதவீதம் வரை படிப்படியாகத் திருத்தப்பட்டு வருமான வரி கட்டமைப்பு மாற்றப்பட்டது. புதிய திருத்தத்தின்படி, 2023, சனவரி 01 ஆம் திகதி முதல் மதிப்பீட்டாண்டொன்றிற்கு தனியாள் வருமான வரிக்கான பதிவெல்லை ரூபா 3.0 மில்லியனிலிருந்து ரூபா 1.2 மில்லியன் வரை குறைக்கப்பட்டதுடன், மதிப்பீட்டாண்டொன்றில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்காக வழங்கப்படும் ரூபா 1.2 மில்லியனினைக் கொண்ட செலவின நிவாரணம் நீக்கப்பட்டது. இதற்கிடையில், நிலையான நிறுவன வருமான வரி விகிதம் 2022, ஒற்றோபர் 01 ஆம் திகதி முதல் 24 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக அதிகரித்ததுடன் மதுபானம், புகையிலை மற்றும் பந்தயம்பிடித்தல் மற்றும் சூதாடல் மீதான நிறுவன வருமான வரி விகிதம் 40 சதவீதத்தில் பராமரிக்கப்பட்டு, சலுகை ரீதியான நிறுவன வருமான வரி விகிதங்கள் நீக்கப்பட்டன. இதன் விளைவாக, 2023 முதல் நான்கு மாதங்களில் நிறுவன மற்றும் நிருவனமல்லாத வரி வருமானமானது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 72.2 பில்லியனினை விட 54.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 111.8 பில்லியனினை அடையப்பெற்றது. 2023 முதல் நான்கு மாதங்களில் மேம்படுத்தப்பட்ட தனியாள் வருமான வரியைப் பொறுத்தவரை 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 7.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 458.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்து ரூபா 40.1 பில்லியனினைப் பதிவுசெய்தது. மேலும், பிடித்து வைத்தல் வரியும் ரூபா 5.6 பில்லியனிலிருந்து ரூபா 39.3 பில்லியன் வரை 605.8 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கிடையில், 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 633 மில்லியனினைக் கொண்டிருந்த மூலதன ஈட்டுகை வரி வருமானம், நிலைச் சொத்து விற்பனைத் துறையில் மந்தமான செயலாற்றுகை காரணமாக 2023 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 469 மில்லியன் வரை 26.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 2.5: 2023 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் வருமான வரி மூலமான வருமானங்களின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2022 | 2023 (தற்காலிகமானது) | மாற்றம் % |
|---|---|---|---|
| நிறுவன மற்றும் நிறுவனமல்லாத செலுத்தும் வரி | 72,184 | 111,843 | 54.9 |
| உழைக்கும் போது செலுத்தும் வரி | 7,177 | 40,082 | 458.5 |
| வட்டி வருமானம் மீதான வரி | 5,569 | 39,301 | 605.8 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 127 | 63 | -50.7 |
| மூலதன ஆதாய வரி | 633 | 469 | -25.9 |
| மிகை வரி | 59,586 | - | - |
| தன்னார்வ வெளிப்படுத்தல் வரி | 3,877 | 11 | -99.7 |
| **மொத்தம்** | 149,163 | 191,768 | 28.6 |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## பெறுமதி சேர் வரி

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மொத்த பெறுமதி சேர் வரி வருமானமானது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 136.1 பில்லியனினை விட 63.9 சதவீதம் அதிகரித்து ரூபா 223.2 பில்லியனினைப் பதிவுசெய்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 24.6 சதவிகிதத்தினை எட்டியது. 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் உள்நாட்டு நடவடிக்கைகளின் மீதான பெறுமதி சேர் வரி வருமானம் 85.4 சதவீதம் அதிகரித்து ரூபா 158.2 பில்லியனாகவும் இறக்குமதி மூலம் பெறப்பட்ட பெறுமதி சேர் வரி வருமானம் 27.9 சதவீதம் அதிகரித்து ரூபா 65.0 பில்லியனாகவும் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பெறுமதி சேர் வரியின் இந்த வருமானச் செயலாற்றுகைக்கு, முக்கியமாக நிலையான பெறுமதி சேர் வரி விகிதம் 8 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டமை, பெறுமதி சேர் வரிக்கான பதிவு வரம்பு ஆண்டொன்றிற்கு ரூபா 300 மில்லியனிலிருந்து ரூபா 80 மில்லியன் வரை குறைக்கப்பட்டமை போன்ற 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய கொள்கை நடவடிக்கைகள் காரணமாக அமைந்தன.

**அட்டவணை 2.6: 2023 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் பெறுமதி சேர் வரி மூலமான வருமானங்களின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2022 | 2023 (தற்காலிகமானது) | வளர்ச்சி % |
|---|---|---|---|
| உள்நாட்டு | 85,314 | 158,181 | 85.4 |
| இறக்குமதி | 50,832 | 65,007 | 27.9 |
| **வருமானம்** | 136,146 | 223,189 | 63.9 |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## உற்பத்தித் தீர்வை

உற்பத்தித் தீர்வை மூலம் கிடைத்த வருவாயானது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 122.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 முதல் நான்கு மாதங்களில் 11.7 சதவீதம் அதிகரித்து ரூபா 136.6 பில்லியனினைப் பதிவுசெய்தது. மதுபானம், மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற உற்பத்தி வரி விதிக்கத்தக்க பொருட்களிலிருந்து வருவாய் குறைந்துள்ள போதிலும், சிகரெட் மற்றும் பெற்றோலியப் பொருட்களிலிருந்து வருமானம் அதிகரித்தமையே இதற்குக் காரணமாகும். உற்பத்தித் தீர்வை வருமானம், வரி வருவாயில் 18.4 சதவீதமாகவும், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சேகரிக்கப்பட்ட மொத்த வருவாயில் 16.7 சதவீதமாகவும் இருந்ததுடன் ஆண்டு மதிப்பீட்டில் 24.4 சதவீதத்தை எட்டியது.

**அட்டவணை 2.7 : 2023 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் உற்பத்தி வரி செயலாற்றுகை**

ரூபா. மில்லியன்

| வரி அடிப்படை | 2022 | 2023 (தற்காலிகமானது) | வளர்ச்சி % |
|---|---|---|---|
| மதுபானம் | 59,473 | 58,158 | -2.2 |
| சிகரெட்டு | 32,962 | 42,706 | 29.6 |
| மோட்டார் வாகனங்கள் | 11,125 | 6,559 | -41.0 |
| பெற்றோலியம் | 16,446 | 27,759 | 68.8 |
| ஏனையவை | 2,291 | 1,382 | -39.7 |
| **மொத்தம்** | 122,297 | 136,564 | 11.7 |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 59.5 பில்லியனாகக் காணப்பட்ட மதுபானங்கள் மீதான வரி வருமானம், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மதுபான உற்பத்தி 12.1 மில்லியன் நிகர லீற்றர் வரை 22.6 சதவிகிதத்தினால் குறைந்ததன் காரணமாக, 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 58.2 பில்லியன் வரை 2.2 சதவீதத்தினால் சற்று வீழ்ச்சியடைந்தது. அதன்படி, 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வன் மதுபானத்தின் வருமானம் ரூபா 39.7 பில்லியனாக இருந்தது. இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 44.0 பில்லியனினை விட 9.8 சதவீத வீழ்ச்சியாகும். இதேபோல், மோல்ட் மதுபானத்தின் வருமானம் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 17.9 பில்லியனினை விட 2.4 சதவீதம் குறைந்து 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 17.5 பில்லியனாகக் காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மதுபானத்தின் மீதான மது வரி சேகரிப்பு, 2023 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த வருவாயில் 27.2 சதவீதமாக இருந்தது.

இருப்பினும், முக்கியமாக 60 மில்லிமீற்றர் நீளத்திற்கு மிகாமல் இருக்கும் சிகரெட்களைத் தவிர (உதா. கப்ஸ்தன்) அனைத்து வகையான சிகரெட்டுகளின் வரி விகிதமும் 20 சதவிகிதத்தினால் அதிகரித்ததன் விளைவாக 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சிகரெட் வருமானமானது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 33.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 29.6 சதவீதம் அதிகரித்து ரூபா 42.7 பில்லியனைக் கொண்டிருந்தது. 2023, சனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 60 மில்லிமீற்றருக்கும் குறைவான நீளம் கொண்ட சிகரெட்டின் உற்பத்தி வரி விகிதம் 1,000 குச்சிகளுக்கு ரூபா 13,360 என்ற விகிதத்தில் திருத்தப்பட்டது. இது குச்சிகளின் விற்பனைக் குறைவின் மத்தியில் அந்த வகை சிகரெட்டுகளில் குறிப்பிடத்தக்க வருமான அதிகரிப்புக்கு வழிவகுத்தது..


மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து திறைசேரிக்கு மாற்றப்பட்ட

பொறுப்புகளுக்கு நிதியளிப்பதற்காக 2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.3 சதவீதத்தை ஈட்டுவதற்காக 2023, சனவரி 01 முதல் அனைத்து வகையான பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதிக்கான உற்பத்தித் தீர்வை லீற்றருக்கு ரூபா 25.00 எனும் தொகையால் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக பெற்றோலியப் பொருட்களின் வருமானம் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகிய ரூபா 16.4 பில்லியனினை விட 68.8 சதவீதத்தினால் அதிகரித்து 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 27.8 பில்லியனினைக் கொண்டிருந்தது.

2020, மாச்சு முதல் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் குறைக்க அறிமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மோட்டார் வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் அரசாங்கக் கொள்கையின் தொடர்ச்சியின் விளைவாக, சனவரி முதல் ஏப்பிரல் வரையான 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மோட்டார் வாகனங்களுக்கான உற்பத்தித் தீர்வையானது, 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 11.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 41.0 சதவீதத்தினால் கணிசமாகக் குறைந்து ரூபா 6.6 பில்லியனாகக் காணப்பட்டது.

இதற்கிடையில், இனிப்புப் பானங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், பாம் எண்ணெய், கொழுப்பமிலம் போன்ற பிற உற்பத்தி வரி விதிக்கத்தக்க பொருட்களின் வரி வருமானம், 2023 ஆம் ஆண்டின் சனவரி முதல் ஏப்பிரல் வரையான முதல் நான்கு மாதங்களில் ரூபா 1.4 பில்லியன் வரை குறைவடைந்தது. இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 2.3 பில்லியனினை விட 39.7 சதவீதம் சரிவடைந்தமை இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் விளைவைப் பிரதிபலிக்கிறது.

வரைபு 2.2 : 2022 மற்றும் 2023 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் உற்பத்தி வரி செயலாற்றுகை




## ஏனைய வரிகள்

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சுங்க இறக்குமதித் தீர்வை மற்றும் தொலைத்தொடர்பு அறவீட்டிலிருந்து பெறப்பட்ட வருமானம் அதிகரித்த அதே நேரத்தில், துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு, விசேட வியாபாரப் பண்ட அறவீடு மற்றும் செஸ் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானம் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்துள்ளது. இறக்குமதிகளில் ஒட்டுமொத்த சரிவு காரணமாக, 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 62.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 56.7 பில்லியன் வரை 9.5 சதவீதத்தினால் சரிவுற்றது. 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சேகரிக்கப்பட்ட துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டு வருவாய், 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாகிய ரூபா 220.0 பில்லியனில் 25.8 சதவிகிதமாகும். இதற்கிடையில், சுங்க இறக்குமதித் தீர்வை வருமானமானது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 17.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023, மாச்சு முதல், சுங்க இறக்குமதித் தீர்வை விகிதங்கள் 0 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 15 சதவீதம் முதல் 0 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 20 சதவீதம் என உயர்த்தப்பட்டதன் காரணமாகவும், கோதுமை மாவு மீதான வரி விலக்கு நீக்கப்பட்டதன் காரணமாகவும் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 15.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்து ரூபா 20.3 பில்லியனினைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி அளவுகளில் ஒட்டுமொத்த சரிவு, பொருட்களின் மீது பெயரளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு விகிதங்களைப் பேணுதல் மற்றும் சோளத்தின் மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு நீக்கம் ஆகியவற்றின் காரணமாக விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 14.9 பில்லியனாக 5.9 சதவீதத்தினால் சரிவுற்றது. 2022, யூன் மாதத்தில் அறவீட்டு விகிதங்கள் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் தொலைத்தொடர்பு அறவீட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 25.0 சதவீதம் அதிகரித்து ரூபா 5.3 பில்லியனினைக் கொண்டிருந்தது. தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிகளில் எல்லை வைப்புத் தேவைகளை விதிப்பதன் மூலம் அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற இறக்குமதிகளைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக் கொள்கை நடவடிக்கைகளினால் இறக்குமதிகளில் வீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக செஸ் வரி வருமானம், 43.0 சதவீதம் குறைந்து 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 16.7 பில்லியனாக இருந்தது. இவ்வருமானம் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 29.2 பில்லியனாகும். அதன்படி, இறக்குமதி மீதான செஸ் அறவீட்டு வருமானம் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 28.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 16.0 பில்லியன் வரை 44.0 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. இதற்கிடையில், 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 0.69 பில்லியனாகக் காணப்பட்ட ஏற்றுமதி மீதான செஸ் அறவீட்டு வருமானம் நாணயமாற்று விகிதத் தேய்மானத்தின் விளைவாக 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 0.70 பில்லியன் வரை 1.4 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சேகரிக்கப்பட்ட செஸ் வருவாய் 2023 - ஆண்டு மதிப்பீடாகிய ரூபா 85.0 பில்லியனில் 19.6 சதவிகித தேறலாகும்.

### வரி அல்லாத வருமானம்

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வரி அல்லாத வருமானங்களைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பெறப்பட்ட ரூபா 87.3 பில்லியனினை விட 11.2 சதவீதம் வீழ்ச்சியடைந்து ரூபா 77.5 பில்லியனாக இருந்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 30.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மத்திய வங்கியின் இலாபங்கள் பெறப்படாமை இதற்குக் காரணமாகும். 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 11.4 பில்லியனாக இருந்த அரசுடைமைத் தொழில்முயற்சிகளின் இலாபம் மற்றும் பங்கிலாப வரவுகள், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 9.6 பில்லியன் வரை 16.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேபோல் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை வருமானம் 6.5 சதவீதத்தினால் ரூபா 11.3 பில்லியன் வரை வீழ்ச்சியடைந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வாடகை வருமானத்தின் வருவாயும் ரூபா 1.3 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 2.2 பில்லியனினை விட 40.6 சதவீத வீழச்சியாகும். இருப்பினும், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வட்டி வருமானமானது, 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 1.1 பில்லியனினை விட 173.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து ரூபா 3.0 பில்லியனினைப் பதிவுசெய்தது.

அபராதத் தொகைகள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் மூலம் அடையப்பெற்ற வருவாய், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 39.6 பில்லியனாக இருந்தது. இது 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 22.9 பில்லியனுடன் ஒப்பிடும்போது கடவுச்சீட்டு கட்டணங்கள், விசா கட்டணம், வாகனப் பதிவுக் கட்டணம் மற்றும் வருவாய் உரிமக் கட்டணம் ஆகியவற்றின் அதிகரிப்பின் விளைவினால் ஏற்பட்ட 73.4 சதவீத அதிகரிப்பாகும். 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சேகரிக்கப்பட்ட வரி அல்லாத வருவாய் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 27.9 சதவிகிதம் ஆகும்.

**அட்டவணை 2.8 : அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு**

ரூபா.பில்லியன்

| விடயம் | 2022 (சன-ஏப்.) | 2023 மதிப்பீடு | 2023 (சன-ஏப்.) (தற்காலிக.) | காரணங்கள் |
|---|---|---|---|---|
| வருமான வரிகள் | 149.2 | 912.0 | 191.8 | 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வருமான வரிகளின் வருவாய், 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 28.6 சதவீதம் அதிகரித்து ரூபா 191.8 பில்லியன்களாகவும், அது வருடாந்த மதிப்பீட்டில் 21 சதவிகிதத் தேறலாகவுமிருந்தது. நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரி, மேம்பட்ட தனியாள் வருமான வரி மற்றும் பிடித்துவைத்தல் வரி ஆகியவற்றிலிருந்து அதிகரித்த வருவாய் இதற்குக் காரணமாகும். முக்கியமாக அதிகபட்ச தனியாள் வருமான வரி விகிதத்தை 18 சதவீதத்திலிருந்து 36 சதவீதமாக உயர்த்தி, தனியாள் வருமான வரி விகிதங்கள் 6 சதவீதத்திலிருந்து 36 சதவீதமாகப் படிப்படியாகவும் நிலையான நிறுவன வருமான வரி வீதம் 24 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டது. எனவே, மீளாய்விற்கான காலத்தில் நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரி வருவாய் 54.9 சதவீதம் அதிகரித்து ரூபா 111.8 பில்லியனாகவும் மேம்பட்ட தனியாள் வருமான வரி வருவாய் 458.5 சதவீதம் அதிகரித்து ரூபா 40.1 பில்லியனாகவும் காணப்பட்டது. பிடித்துவைத்தல் வரியும் 605.8 சதவீதம் அதிகரித்து ரூபா 39.3 பில்லியனாக இருந்தாலும், மூலதன ஈட்டுகை வரியின் வருவாய் 25.9 சதவீதம் குறைந்து நிலைச் சொத்து விற்பனைத் துறையில் குறைந்த செயலாற்றுகை காரணமாக மீளாய்விற்கான காலகட்டத்தில் ரூபா 469.0 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்தது. |
| பெறுமதி சேர் வரி | 136.1 | 908.0 | 223.2 | 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பெறுமதி சேர் வரி வருமானம் ரூபா 223.2 பில்லியனாகும். 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 63.9 சதவீதம் அதிகரித்து வருடாந்த மதிப்பீட்டில் 24.6 சதவிகிதத்தினை அடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய கொள்கை திருத்தங்கள் காரணமாக நிலையான பெறுமதி சேர் வரி விகிதம் 8 சதவிகிதம் மற்றும் 15 சதவிகிதமாக அதிகரிக்கப்பட்டமையும் பெறுமதி சேர் வரியின் பதிவு வரம்பை ஆண்டொன்றிற்கு ரூபா 300 மில்லியனில் இருந்து ரூபா 80 மில்லியன் வரை குறைத்தமையும் இதற்கான முக்கிய காரணங்களாகும். 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதி தொடர்பான நடவடிக்கைகள் மீதான பெறுமதி சேர் வரியின் வருவாய், 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது முறையே 85.4 சதவீதத்தினால் ரூபா 158.2 பில்லியனாகவும் 27.9 சதவீதத்தினால் ரூபா 65.0 பில்லியனாகவும் அதிகரித்துள்ளது. |

ரூபா.பில்லியன்

| விடயம் | 2022 (சன-ஏப்.) | 2023 மதிப்பீடு | 2023 (சன-ஏப்.) (தற்காலிக.) | காரணங்கள் |
|---|---|---|---|---|
| உற்பத்தித் தீர்வை | 122.3 | 560.0 | 136.6 | உற்பத்தித் தீர்வைகளின் வருவாய் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 136.6 பில்லியன் வரை அதிகரித்தது. இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 11.7 சதவீத அதிகரிப்பாகவும் 2023 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் 24.4 சதவிகிதமாகவும் உள்ளது. மதுபானம், மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற உற்பத்தித் தீர்வைக்கான பொருட்களில் இருந்து வருவாய் குறைந்தாலும், சிகரெட் மற்றும் பெற்றோலியப் பொருட்களின் வருவாய் அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும். சிகரெட் மீதான உற்பத்தித் தீர்வை வருமானம், சிகரெட் குச்சிகள் மீதான வரி அதிகரிப்பு காரணமாக 29.6 சதவீதம் அதிகரித்து ரூபா 42.7 பில்லியனினையும் முக்கியமாக அனைத்து வகையான பெற்றோல் மற்றும் டீசல் மீதான உற்பத்தித் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூபா 25 ஆக அதிகரிக்கப்பட்டதனால் பெற்றோலியப் பொருட்கள் மீதான உற்பத்தித் தீர்வை வருவாய் 68.8 சதவீதம் அதிகரித்து ரூபா 27.8 பில்லியனினைக் கொண்டிருந்தது. இருப்பினும், முக்கியமாக மதுபான உற்பத்தி குறைவினால் மதுபானங்களின் வருவாய் 2.2 சதவீதம் குறைந்து ரூபா 58.2 பில்லியனாகவும் பிற பொருட்களிலிருந்து உற்பத்தித் தீர்வை சேகரிப்பு 39.7 சதவீதம் குறைந்து மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் ரூபா 1.4 பில்லியனாக இருந்தது, இது மதிப்பிடப்பட்ட பெறுமதியின் 23.0 சதவீதத் தேறல் ஆகும். |
| இறக்குமதித் தீர்வைகள் | 17.5 | 80.0 | 20.3 | 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இறக்குமதி வரியிலிருந்து வருமானம் 15.8 சதவிகிதம் கணிசமாக அதிகரித்து ரூபா 20.3 பில்லியனினை அடையப்பெற்றது. இது வருடாந்த மதிப்பீட்டில் 25.3 சதவிகிதம் ஆகும். 2023 மாச்சு மாதத்தில் 0 சதவிகிதம், 10 சதவிகிதம் மற்றும் 15 சதவிகிதம் முதல் 0 சதவிகிதம், 15 சதவிகிதம் மற்றும் 20 சதவிகிதம் வரையிலான வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டமையும், கோதுமை மாவுக்கான வரி விலக்கு நீக்கப்பட்டமையும் இந்தச் செயலாற்றுகைக்குரிய முக்கிய காரணமாகும். |
| துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 62.6 | 220.0 | 56.7 | 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டின் வருமான சேகரிப்பு, முக்கியமாக இறக்குமதியில் ஏற்பட்ட ஒட்டுமொத்த சரிவின் காரணமாக ரூபா 56.7 பில்லியனாகவும் ஆண்டு மதிப்பீட்டில் 25.8 சதவிகிதமாகவும் இருந்தது. அத்துடன் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 62.6 பில்லியனினை விட 9.5 சதவீதம் வீழ்ச்சியாகும். |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 15.8 | 70.0 | 14.9 | விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வருமானம் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 14.9 பில்லியனாக இருந்தது. 2022 இன் அதே காலகட்டத்தின் ரூபா 15.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 5.9 சதவீதம் குறைந்து 2023 இன் வருடாந்த மதிப்பீட்டில் 21.2 சதவீதத்தை எட்டியுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி அளவுகளில் ஒட்டுமொத்த சரிவு, அத்தியாவசியப் பொருட்களில் பெயரளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு விகிதங்களைப் பராமரித்தல் மற்றும் சோளத்தின் மீது பொருந்தக்கூடிய விசேட வியாபாரப் பண்ட அறவீட்டின் நீக்கம் ஆகியவை, இதற்கான முக்கிய காரணமாகும். |
| ஏனைய வரிகள் | 40.1 | 380.0 | 99.2 | கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 40.1 பில்லியனினைப் பெற்றுள்ள இதர வரிகளின் வருவாய் 147.4 சதவீதம் அதிகரித்து 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 99.2 பில்லியனாக இருந்தது. இது 2023 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் 26.1 சதவீத தேறலாகும். முக்கியமாக சமூகப் பாதுகாப்பு உதவுதொகை வரி விதிப்பு காரணமாக 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 69.9 பில்லியன் அடையப்பெற்றமையின் விளைவாகும். அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற இறக்குமதிகளைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக் கொள்கை நடவடிக்கைகளுடன் இறக்குமதியின் வீழ்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் செஸ் வரியிலிருந்து வருவாய் 43.0 சதவீதம் குறைந்து 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 16.7 பில்லியனினைப் பதிவுசெய்தது. இருப்பினும், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் தொலைத்தொடர்பு அறவீடானது, முக்கியமாக 2022, யூன் மாதத்தில் தொலைத்தொடர்பு அறவீடு உயர்த்தப்பட்டதன் காரணமாக 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 25 சதவீதம் கணிசமாக அதிகரித்து ரூபா 5.3 பில்லியனாக இருந்தது. |

ரூபா.பில்லியன்

| விடயம் | 2022 (சன-ஏப்.) | 2023 மதிப்பீடு | 2023 (சன-ஏப்.) (தற்காலிக.) | காரணங்கள் |
|---|---|---|---|---|
| வரி அல்லாத வருமானம் | 87.3 | 278.0 | 77.5 | வரி அல்லாத வருவமானம் 2023 முதல் நான்கு மாதங்களில் ரூபா 77.5 பில்லியன் ஆகும். 2022 ஆம் ஆண்டில் இதே காலப்பகுதியில் ரூபா 87.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 11.2 சதவீதம் குறைந்து வருடாந்த மதிப்பீட்டில் 27.9 சதவீதத்தை எட்டியுள்ளது. முக்கியமாக இலாபம் மற்றும் பங்கிலாபம், வாடகை, மத்திய வங்கியின் இலாபப் பரிமாற்றங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகளின் சரிவு இதற்கு வழிவகுத்துள்ளது. இருப்பினும், வட்டி வருமானத்திலிருந்து வரி அல்லாத வருமானம் ரூபா 3.1 பில்லியனினையும் மற்றும் அபராதங்கள், கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகள் 2023 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 39.6 பில்லியனையும் எட்டியது, இது 2022 மீளாய்வுக் காலப்பகுதியில் 173.6 சதவீதமாகவும் மற்றும் 73.4 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. மேலும், பிற வரி அல்லாத வருமானம் 2022, சனவரி முதல் ஏப்பிரல் வரை சேகரிக்கப்பட்ட வருவாயுடன் ஒப்பிடுகையில் ரூபா 12.6 பில்லியன் வரை 66.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. |
| **மொத்தம்** | **630.9** | **3,408.0** | **820.1** | |

*தொகுப்பு : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**கட்டம் 2.1 l பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2023, சனவரி முதல் யூன் வரை**

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **வருமான வரி - 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டு அரசிறைச் சட்டத்திற்கான திருத்தங்கள்** | |
| 01.06.2023 | 2023.05.31 ஆம் திகதிய 2334/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2022 - இடைக்கால வரவு செலவுத் திட்ட உரையின்படி, 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து வதிவுடையோருக்கும், அவர்களின் ஆண்டு வருமானம் மற்றும் வரி விலக்கு வரம்புகளைக் கருத்தில் கொள்ளாமல் உண்ணாட்டு இறைவரித் திணைக்களத்தில் கட்டாய வரிப் பதிவை அறிமுகப்படுத்துதல். |
| **2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, உண்ணாட்டு அரசிறை (திருத்தச்) சட்டம்** | |
| 01.01.2023 | **தனியாள் வருமான வரி** |
| | **ஆண்டொன்றிற்கான வரி விதிக்கத்தக்க வருமானம்** |
| | முதலாம் ரூபா 1,200,000 – விலக்களிப்பு<br>ரூபா 500,000 – ரூபா 1,000,000 - 6%<br>ரூபா 1,000,000 – ரூபா 1,500,000 – 12%<br>ரூபா 1,500,000 – ரூபா 2,000,000 – 18%<br>ரூபா 2,500,000 – ரூபா 3,000,000 – 24%<br>ரூபா 3,000,000 – ரூபா 3,500,000 – 30%<br>ரூபா 3,500,000 இற்கு மேல் - 36% |
| 01.01.2023 | **பிடித்துவைத்தல் வரி** |
| | **வரி விகிதங்கள்** |
| | பங்கிலாபம் – 15%<br>செலுத்தப்பட்ட வட்டி அல்லது கழிப்பீடு – 5%<br>மாதமொன்றிற்கு ரூபா 100,000 இற்கு மேற்படும் வாடகைக் கொடுப்பனவுகள் – 10%<br>சேவைக் கொடுப்பனவுகள் மாதமொன்றிற்கு ரூபா 100,000 – 5%<br>ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் – 14% |
| **பெறுமதி சேர் வரி - 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டம்** | |
| 01.01.2023 | 2022 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டம்<br>- தொடர்மாடி குடியிருப்புக்களுக்கான பெறுமதி சேர் வரி விலக்களிப்பினை நீக்குதல். |
| **உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வை - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்** | |
| 01.01.2023 | 2022.12.31 ஆம் திகதிய 2312/68 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இலங்கை சுங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 இ.மு. குறியீடு திருத்தத்திற்கு இடமளிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட/ உப பிரிவாக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தும் உற்பத்தித் தீர்வையை குறித்தொதுக்குவதற்காக.<br>- பெற்றோலியப் பொருட்களுக்குப் பொருந்தும் உற்பத்தித் தீர்வையை அதிகரிப்பதற்காக.<br>- சிகரெட்டுகளுக்குப் பொருந்தும் உற்பத்தித் தீர்வையை அதிகரிப்பதற்காக. |

கட்டம் 2.1 I பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2023, சனவரி முதல் யூன் வரை (தொடர்ச்சி)

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 01.06.2023 | 2023.05.31 ஆம் திகதிய 2334/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- எரிபொருள் (பெற்றோல் மற்றும் டீசல்) மீதான உற்பத்தி (விசேட ஏற்பாடு) தீர்வை விகிதத்தை ஒவ்வொன்றினதும் லீற்றரொன்றிற்கு ரூபா 25 ஆல் அதிகரித்தல். |
| 17.06.2023 | 2023.06.16 ஆம் திகதிய 2336/69 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பல்மிரிக் அமிலம் (இ.மு. குறியீடு 2915.70.10) மற்றும் லோரிக் அமிலம் (இ.மு. குறியீடு 2915.90.10) ஆகியவற்றின் மீதான உற்பத்தி (விசேட ஏற்பாடு) தீர்வையை கி.கா.ச. பெறுமதியில் 29 சதவீதமாக விதிப்பதற்காக. |
| **மதுவரி (கட்டளைச்சட்ட) தீர்வை - மதுவரி கட்டளைச்சட்டம் (52 ஆம் அத்தியாயம்)** | |
| 03.01.2023 | 07/2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.12.31 ஆந் திகதிய 2312/70 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- மதுபானம் மீதான தீர்வையை அதிகரிப்பதற்காக. |
| 01.01.2023 | 2022.12.31 ஆந் திகதிய 2312/71 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் பீடி தொடர்பாக கூறு ஒன்றிற்கு ரூபா 2 வீதம் வரியொன்றினை விதித்தல். |
| 17.06.2023 | 01/2023 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2023.06.16 ஆந் திகதிய 2336/70 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- உரிமத்துடன் மற்றும் உரிமமின்றி வைத்திருக்கக் கூடியவாறு ஐசோபிரைல் மதுசாரத்தின் தற்போதைய எல்லைகளை உயர்த்துவதற்கு. |
| **சுங்க மிகைக்கட்டணம் - சுங்கக் கட்டளைச்சட்டம் (235 ஆம் அத்தியாயம்)** | |
| 05.01.2023 | 2023.01.04 ஆம் திகதிய 2313/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2022 ஆம் ஆண்டின் புதிய இ.மு. பதிப்புடன் இ.மு. குறியீடுகள் 2017 பதிப்புள்ள தற்போதைய கட்டளைகளை மீண்டும் வெளியிடுவதற்கு. |
| 01.06.2023 | 2023.05.31 ஆம் திகதிய 2334/28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கான சுங்க இறக்குமதித் தீர்வையின் சதவீதமாக மிகைக் கட்டணமொன்றை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 6 மாத காலத்திற்கு தொடர்வதற்கு 2022.11.30 ஆந் திகதிய 2308/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினை மீண்டும் வெளியிடுவதற்கு. |
| **2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்** | |
| 01.01.2023 | 2022.12.31 ஆம் திகதிய 2312/67 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இலங்கை சுங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 இ.மு. குறியீடு திருத்தத்திற்கு இடமளிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட/ உப பிரிவாக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தும் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டினை குறித்தொதுக்குவதற்காக. |
| 04.04.2023 | 2023.04.03 ஆம் திகதிய 2326/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2023 - வரவுசெலவு திட்டத்தின் முன்மொழிவின்படி, ஐந்தாண்டு காலத்தில் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து நீங்கும் முதல் படியாக, 1631 தீர்வை பொருந்தக்கூடிய பொருட்களுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களிக்க. |
| **செஸ் அறவீடு - 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்** | |
| 01.01.2023 | 2023.01.01 ஆம் திகதிய 2312/76 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இலங்கை சுங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 இ.மு. குறியீடு திருத்தத்திற்கு இடமளிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட/வகைப்படுத்தப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தக்கூடிய செஸ் வரியை குறித்தொதுக்குவதற்காக. |
| 31.01.2023 | 2023.01.26 ஆம் திகதிய 2316/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பிணையப் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஓவர் தி கவுண்டர் (ஓரீசீ) தளத்தின் மீதான பெருநிறுவனக் கடன் பிணையங்களில் மீள்கொள்வனவு பரிமாற்றத்தின் (ரெபோ) மீது 0.006% செஸ் வரியை விதிப்பதற்காக. |
| 29.03.2023 | 2022.03.28 ஆம் திகதிய 2325/06 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2023 – வரவுசெலவு திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு மூன்று ஆண்டுகளுக்குள் செஸ் வரியை படிப்படியாக நிறுத்துவதற்கான முதல் படிமுறையாக, 8,155 இ.மு. குறியீடுகளில் 2,668 இ.மு. குறியீடுகளுக்கு செஸ் வரியைக் குறைப்பதற்காக. |
| 17.06.2023 | 2023.06.16 ஆம் திகதிய 2336/71 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- போர்ட்லண்ட் சீமெந்தின் இறக்குமதி மீதான செஸ் வரியை அதிகரித்தல் மற்றும் கிளிங்கர் இறக்குமதியில் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 1.00 செஸ் வரியை விதித்தல். |

கட்டம் 2.1 I பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2023, சனவரி முதல் யூன் வரை (தொடர்ச்சி)

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **சுங்க இறக்குமதித் தீர்வை - 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்** | |
| 01.01.2023 | 07/2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2023.01.01 ஆம் திகதிய 2312/75 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- சட்டப்பூர்வமான சர்வதேச வர்த்தக செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு 5 வருடங்களுக்கொரு தடவை இ.மு. குறியீட்டு முறைமையை இற்றைப்படுத்துதல். இலங்கையில் 08 இலக்கங்களில் மொத்தம் 7,842 இ.மு. குறியீடுகளுள்ளன, இருப்பினும், இ.மு குறியீடு 2022 பதிப்பு காரணமாக, மொத்த இ.மு. குறியீடுகளின் எண்ணிக்கை 8155 வரை அதிகரித்துள்ளன. |
| 29.03.2023 | 01/2023 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2023.03.28 ஆம் திகதிய 2325/07 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- சுங்க இறக்குமதித் தீர்வையின் மூன்றடுக்கு கட்டண முறையை 0 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 15 சதவீதத்திலிருந்து 0 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 20 சதவீதமாக திருத்துவதன் ஊடாக செஸ் அறவீடு 20 சதவிகிதத்தினால் குறைக்கப்பட்டதனால், வருமான நடுநிலையைப் பராமரிக்க குறிப்பிட்ட பொருட்களுக்கான சுங்க இறக்குமதித் தீர்வை விகிதத்தை அதிகரிப்பதற்காக. |
| 17.06.2023 | 02/2023 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2023.06.16 ஆம் திகதிய 2336/72 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- பல்மிற்றிக் அமிலம் மற்றும் லோரிக் அமிலத்திற்கான புதிய இ.மு. குறியீடுகளை (தேசிய உப பிரிவுகள்) உருவாக்குதல் மற்றும் உள்ளூர் ஒப்பனைத் தொழிலுக்கு வசதியாக பாம் எண்ணெய் கொழுப்பமிலத்தின் தீர்வைக் கட்டமைப்பைப் போன்ற ஒரு தீர்வைக் கட்டமைப்பை விதித்தல். |
| **விசேட வியாபாரப் பண்ட அறவீடு - 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்** | |
| 05.01.2023 | 2023.01.04 ஆம் திகதிய 2313/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2022 இன் புதிய இ.மு. பதிப்புடன், இ.மு குறியீடுகள் 2017 பதிப்பைக் கொண்டுள்ள, நடைமுறையிலுள்ள கட்டளைகளை மீண்டும் வெளியிடுவதற்கு. |
| 26.01.2023 | 2023.01.25 ஆம் திகதிய 2316/28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- விவசாய அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் கீழ், உள்நாட்டுக் கால்நடைத் தீவன உற்பத்தித் தொழிலை வசதிப்படுத்துவதற்காக மக்காச்சோளத்தின் சரக்கேற்றல் 2023, சனவரி 15 அளவில் துறைமுகங்கள்/ விமான நிலையங்களை அடைவதற்குட்பட்டு சலுகை நீடிக்கப்பட்டது. |
| 21.02.2023 | 2023.02.20 ஆம் திகதிய 2320/04 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- முட்டைகளின் இறக்குமதி தொடர்பாக முட்டையொன்றிற்கு ரூபா 50.00 விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை அறிமுகப்படுத்துதல் மற்றும் வெதுப்பகத் தொழிலுக்கு நியாயமான விலையில் முட்டைகள் கிடைக்கச்செய்வதற்கு அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு முட்டையொன்றிற்கு ரூபா 1.00 மாத்திரம் சலுகை விகிதத்தை அளித்தல். |
| 04.03.2023 | 2023.03.04 ஆம் திகதிய 2321/76 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உளுந்து, கௌபி, குரக்கன் மற்றும் மற்றொரு வகை தினை மீது விதிக்கப்பட்ட விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிப்பதற்கு.. |
| 08.03.2023 | 2023.03.07 ஆம் திகதிய 2322/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உள்நாட்டு விவசாயிகளின் அறுவடைக்கு நியாயமான சந்தை விலையை உறுதி செய்வதன் மூலம் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் கிலோ கிராமொன்றிற்கு ரூபா 50.00 வரை உயர்த்துதல். |
| 08.03.2023 | 2023.03.07 ஆம் திகதிய 2322/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- ரமலான் பண்டிகைக் காலத்தில் நன்கொடையாகவோ அல்லது அன்பளிப்பாகவோ பெறப்படும் பேரீச்சம் பழங்களை இறக்குமதி செய்ய கிலோ கிராமொன்றிற்கு ரூபா 1.00 என்ற சலுகை விகிதத்தைப் பயன்படுத்துதல். |
| 18.03.2023 | 2023.03.17 ஆம் திகதிய 2323/40 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- வர்த்தக அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்குட்பட்டு, உறைந்த முழு முட்டை திரவத்தை இறக்குமதி செய்வதற்கு கிலோ கிராமொன்றிற்கு ரூபா 200.00 என்ற சலுகை விகிதத்தைப் பயன்படுத்துதல். |
| 18.05.2023 | 2023.05.17 ஆம் திகதிய 2332/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்காகவும், அரிசி இறக்குமதி மீது கிலோ கிராமொன்றிற்கு வி.வி.ப. அறவீட்டினை 25 சதத்திலிருந்து ரூபா 65 ஆக உயர்த்துதல், மக்காச்சோள இறக்குமதிக்கு கிலோ கிராமொன்றிற்கு ரூபா 75 வி.வி.ப. அறவீட்டினை விதித்தல் திரிபோஷ உற்பத்திக்காக மக்காச்சோள இறக்குமதிக்கு கிலோ கிராமொன்றிற்கு ரூபா 50 வி.வி.ப. அறவீட்டினை விலக்களித்தல் மற்றும் பிற 34 பொருட்களின் செல்லுபடியாகும் காலத்தை அதே தீர்வை விகிதத்தில் நீடித்தல். |
| 21.05.2023 | 2023.05.20 ஆம் திகதிய 2332/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- முட்டைகளின் இறக்குமதி தொடர்பாக முட்டையொன்றிற்கு ரூபா 50.00 விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினைத் தொடருதல் மற்றும் வெதுப்பகத் தொழிலுக்கு நியாயமான விலையில் முட்டைகள் கிடைக்கச்செய்வதற்கு அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு முட்டையொன்றிற்கு ரூபா 1.00 மாத்திரம் சலுகை விகிதத்தை அளித்தல். |

கட்டம் 2.1 I பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2023, சனவரி முதல் யூன் வரை (தொடர்ச்சி)

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 23.06.2023 | 2023.06.22 ஆம் திகதிய 2337/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்குட்பட்டு, உறைந்த முழு முட்டை திரவத்தை இறக்குமதி செய்வதற்கு கிலோ கிராமொன்றிற்கு ரூபா 200.00 என்ற சலுகை விகிதத்தை அளித்தல்.<br>- சேல் மீன், மார்லின் மீன் மற்றும் குயின் மீன் போன்ற மீன் வகைகளை இறக்குமதி செய்யும் போது கிலோ கிராமொன்றிற்கு ரூபா 275 சலுகை விகிதத்தை அளித்தல். |
| **1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்** | |
| 01.01.2023 | 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.01.01 ஆந் திகதிய 2312/77 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தினை ஒருங்கிணைப்பதற்காக. |
| 01.01.2023 | 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.01.01 ஆந் திகதிய 2312/78 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- தற்காலிக இடைநிறுத்தத்தினை ஒருங்கிணைப்பதற்காக. |
| 19.01.2023 | 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.01.19 ஆந் திகதிய 2315/46 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- கட்டண விதிமுறைகள் தொடர்பான ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்காக. |
| 22.02.2023 | 2023 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.02.22 ஆந் திகதிய 2320/46 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- கட்டண விதிமுறைகள் தொடர்பான ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்காக. |
| 22.02.2023 | 2023 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.02.22 ஆந் திகதிய 2320/47 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்காக. |
| 24.03.2023 | 2023 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.03.24 ஆந் திகதிய 2324/45 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- வெளியேற்ற உமிழ்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்/ தராதர ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்காக. |
| 06.04.2023 | 2023 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.04.06 ஆந் திகதிய 2326/40 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- கட்டண விதிமுறைகள் தொடர்பான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்காக. |
| 01.06.2023 | 2023 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.04.06 ஆந் திகதிய 2326/41 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- ஒரு தடவை பயன்படுத்தும் பிளாஸ்திக் பொருட்களுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பதற்காக. |
| 10.06.2023 | 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.06.09 ஆந் திகதிய 2335/26 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- தற்காலிக இடைநிறுத்தத்தினை ஒருங்கிணைத்தல் மற்றும் 2023.01.01 ஆம் திகதிய 2312/78 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினைத் திருத்துதல். |
| **2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டம்** | |
| **புறப்படுகை அறவீடு** | |
| 12.01.2023 | 2023.01.11 ஆம் திகதிய 2314/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- விமான நிறுவனங்களிடமிருந்து புறப்படுகை அறவீட்டினைச் சேகரிப்பதற்காக. எவ்வாறாயினும், 2003 ஆம் ஆண்டு புறப்படுகை அறவீடு விதிக்கப்பட்டதிலிருந்து கப்பல்களுக்கான புறப்படுகை அறவீட்டினைச் சேகரிக்க ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவில்லை. எனவே, விமானத்தினைப் போன்று கப்பல் மூலமும் இலங்கையிலிருந்து புறப்படும் பயணிகளிடம் புறப்படுகை அறவீட்டினை சேகரிப்பதற்கான ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்துவதற்கு. |
| 25.04.2023 | 2023.04.25 ஆம் திகதிய 2329/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2023.01.11 ஆம் திகதிய 2314/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையின் I ஆம் அட்டவணையின் விடய இல. ii இனைத் திருத்துவதற்காக. |
| **2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் - சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் அறவீடு** | |
| 01.01.2023 | 2023.01.01 ஆம் திகதிய 2312/80 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உள்வரும் சர்வதேச அழைப்புகள், குறிப்பிட்ட தொலைபேசி எண்களுக்கு உள்வரும் சர்வதேச அழைப்புகள், உள்வரும் உள்ளூர் அணுகல் கட்டணம், தொலைத்தொடர்பு மேம்பாட்டுக் கட்டணம் மற்றும் வெளிச்செல்லும் உள்ளூர் அணுகல் கட்டணம் ஆகியவற்றிற்காக செலுத்த வேண்டிய வரி விகிதத்தை 2023, சனவரி 01, முதல் 2024, திசெம்பர் 31 வரை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்காக. |

கட்டம் 2.1 I பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2023, சனவரி முதல் யூன் வரை (தொடர்ச்சி)

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம் - மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி** | |
| 01.01.2023 | 2022.12.31 ஆம் திகதிய 2312/69 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இலங்கை சுங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 இ.மு. குறியீடு திருத்தத்திற்கு இடமளித்து, புதிதாக உருவாக்கப்பட்ட/உப பிரிவாக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தக்கூடிய சொகுசு வரியைக் குறித்தொதுக்குவதற்காக. |
| 10.02.2023 | 2023.02.10 ஆம் திகதிய 2318/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மின்சார கார்களை இறக்குமதி செய்யும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு முழுவதுமாக மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களின் வரி விலக்கு வரம்பை ரூபா 6 மில்லியனிலிருந்து ரூபா 12 மில்லியன் வரை உயர்த்துவதற்காக. |
| 31.05.2023 | 2023.05.31 ஆம் திகதிய 2334/24 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2023.02.10 ஆம் திகதிய 2318/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட பணஅனுப்பீடுகள், நாணயக் கடிதங்களின் நிறுவல் மற்றும் மோட்டார் வாகனங்களின் பதிவு ஆகியவற்றின் பரிசீலனைக் காலத்தை நீடிப்பதற்காக. (புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு முழு மின்சார மோட்டார் வாகனங்களின் வரி விலக்கு வரம்பு ரூபா 6 மில்லியனிலிருந்து ரூபா 12 மில்லியனாக அதிகரிப்பு) |

## அரசாங்க செலவினம்

அரசாங்க செலவினமானது 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் இருந்த ரூபா 1,155.2 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 2023 இன் அதே காலப்பகுதியில் 42.4 சதவீதத்தால் ரூபா 1,645.6 பில்லியன்களுக்கு அதிகரித்துள்ளது. மீண்டெழும் செலவினமானது 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ரூபா 1,016.8 பில்லியனிலிருந்து 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 46.0 சதவீதத்தினால் ரூபா 1,485.0 பில்லியனாக வளர்ச்சியடைந்தது. இது பிரதானமாக வட்டி செலுத்துதல், ஓய்வூதியம் செலுத்துதல் மற்றும் நலன்புரிச் செலவுகள் ஆகியவற்றின் மீதான செலவினங்களின் அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டதாகும். மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடனானது 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ரூபா 138.4 பில்லியனாக இருந்து 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 16.0 சதவீதத்தால் ரூபா 160.6 பில்லியனாக அதிகரித்திருந்தது.

**அட்டவணை 2.9 : அரசாங்க செலவினங்களின் செயலாற்றுகை, 2023 சனவரி - ஏப்பிரல்**

ரூபா.மில்லியன்

| விடயம் | 2022 | 2023 (தற்காலிக) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | 1,016,810 | 1,484,984 |
| சம்பளம் | 316,051 | 303,310 |
| ஓய்வூதியம் | 99,659 | 105,924 |
| வட்டிக் கொடுப்பனவு | 426,786 | 818,969 |
| ஏனையவை | 174,313 | 256,781 |
| **மூலதன செலவினம் மற்றும் தேறிய கடன்** | 138,419 | 160,618 |
| **மொத்தம்** | 1,155,229 | 1,645,602 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## வட்டி செலுத்தல்கள்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்கள் உட்பட வட்டி செலுத்துவதற்கான மொத்த செலவினம் 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் இருந்த ரூபா 426.8 பில்லியன்களுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 91.9 சதவீதத்தினால் ரூபா 819.0 பில்லியனாக அதிகரித்திருந்தது. வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி செலுத்துதல் 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ரூபா. 84.9 பில்லியனிலி இருந்து 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 64.9 சதவீதத்தினால் ரூபா 29.8 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது. அதேசமயம் உள்நாட்டு கடனுக்கான வட்டி செலுத்துதல் 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலகட்டத்தில் இருந்த 341.9 பில்லியனிலிருந்து 2023 அதே காலப்பகுதியில் 130.8 சதவீதத்தினால் ரூபா 789.1 பில்லியனாக அதிகரித்திருந்தது.

## சம்பளம் மற்றும் ஓய்வூதியம்

மாகாண சபைகள் உட்பட அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் ஊதியத்திற்கான செலவினம் 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா 316.1 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 4 சதவீதத்தினால் ரூபா 303.3 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது. இதற்கான காரணம் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் அதிகரித்த ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை, பொதுத்துறைக்கான ஆட்சேர்ப்பு இடைநிறுத்தம் மற்றும் கட்டாய ஓய்வூதிய வயதை 60 ஆக மாற்றியமைத்தமை என்பனவாகும். எனினும், ஓய்வூதியத்திற்கான செலவினமானது 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ரூபா 99.7 பில்லியன்களாக இருந்து 2023 ஆம் ஆண்டின் அதே முதல் நான்கு மாத காலப்பகுதியில் 6.3 சதவீதத்தினால் ரூபா 105.9 பில்லியனாக அதிகரித்திருந்தது.

## நலன்புரிச் செலவினம்

அரசாங்கமானது, 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் சமுர்த்தி கொடுப்பனவுகள், முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறன் கொண்ட படை வீரர்களுக்கான உதவித்தொகை, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உணவுப் பொதிகள் மற்றும் உர மானியம் மற்றும் பாடசாலை சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் உள்ளிட்ட குடியிருப்பாளர்களுக்கான மானியங்கள் தொடர்பாக ரூபா 264.39 பில்லியன்களை செலவிட்டிருந்தது.

சமுர்த்தி பண மானியத்திற்கான செலவினமானது 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ரூபா 20,679 மில்லியனிலிருந்து 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 55,593 மில்லியனாக அதிகரித்திருந்தது. இதற்கான காரணம் காத்திருப்போர் பட்டியலிலுள்ள பயனாளிகளுக்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்கியமையாகும். 2023 ஆண்டுக்கான சமுர்த்தி மற்றும் கொடுப்பனவு செலனவிமான ரூபா 200 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கிடையில், அரச மருத்துவமனைகளுக்கான மருந்து பொருட்கள் உட்பட சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து திட்டத்திற்கான அரசின் செலவினமமானது 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ரூபா 19,655 மில்லியன்களிலிருந்து 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 116.36 சதவீதத்தினால் ரூபா 42,526 மில்லியனாக அதிகரித்திருந்தது.

கஷ்ட்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள் மற்றும் பாதணி போன்ற கல்வி நலத்திட்டங்களுக்கான செலவினமானது முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா 8,771 மில்லியனாக காணப்பட்டன. மேலும், சேதன பசளையிலிருந்து இரசாயன பசளை என அரசு கொள்கை முடிவை திருத்தியதால் உரத்திற்கான மேலதிக செலவின கிரயம் ரூபா 13,772 மில்லியனாக காணப்பட்டன.

**அட்டவணை 2.10 : பிரதான நலன்புரி செலவினம்: 2023 சனவரி - ஏப்ரல்**

ரூபா.மில்

| நிகழ்ச்சித்திட்டம் | 2023 தற்காலிக |
|---|---|
| **சமூக நலன்புரி** | |
| சமுர்த்தி நிவாரணம் | 55,593 |
| குறை வருமான அங்கவீனமுற்றவர்களுக்கான ஒத்துழைப்பு | 1,800 |
| வயோதிபர்களுக்கான நிதி ஒத்துழைப்பு | 6,750 |
| சிறுநீரக நோயாளர்களுக்கான நிதி ஒத்துழைப்பு | 941 |
| “ரணவிரு மாபிய ரக்கவரண” கொடுப்பனவு | 754 |
| வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணம் | 8 |
| முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு | 54 |
| மரணம் மற்றும் அங்கவீனமுற்ற படையினருக்கான சேவை நட்டஈடு | 13,015 |
| **சுகாதார மற்றும் போசாக்கு** | |
| திரிபோ'ா நிகழ்ச்சித்திட்டம் | 152 |
| கர்ப்பிணி தாய்மார்களுக்கான போசாக்குணவு பொதி | 285 |
| பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டம் | 1,400 |
| பசும்பால் நிகழ்ச்சித்திட்டம் - பாடசாலை சிறுவர்கள் | - |
| பாடசாலை மாணவர்களுக்கான சுகாதார காப்புறுதி | 500 |
| முன்பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு | 5 |
| அரசாங்க வைத்தியசாலைகளுக்கான மருத்துவ வழங்கல்கள் (ஆயுர்வேத) | 42,526 |
| **கல்வி** | |
| பாடசாலை பாடப்புத்தகங்கள் | 7,071 |
| பாடசாலை சீருடைகள் | 832 |
| கஷ்ட மற்றும் மிகக் கஷ்ட பாடசாலைகளில் மாணவர்களுக்கான பாதணிகள் | - |
| புலமைப்பரிசில் - தரம் 5 மாணவர்கள் | 152 |
| மஹாபொல மற்றும் மாணவர் உதவு தொகைகள் | 716 |
| பல்கலைக்கழக மாணவர்களுக்கான மடி கணனி மற்றும் வைபை வசதிகளுக்கான வட்டி மானியம் | 0.13 |
| அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற முடியாத மாணவர்களுக்கான கடன் திட்டம் | - |
| மாணவர்களுக்கான தம்ம பாடசாலை பாடப்புத்தகம் | - |
| தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைகள் | - |
| **மானியங்கள்** | |
| பசளை மற்றும் பயிர் மானியம் | 13,772 |
| **ஏனைய மானியங்கள்** | |
| இ.போ.ச வருமானமீட்டாத பாதைகளுக்கான மானியம் மற்றும் படைவீரர்களுக்கு பருவச்சீட்டு மற்றும் பேருந்து அனுமதிப்பத்திரங்கள் | 3,296 |
| **மொத்தம்** | 149,622 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

### துறை சார் செலவினம்

### பாடசாலைக் கல்வி

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பாடசாலைக் கல்விக்காக ரூபா 102,624 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகள் முறையே ரூபா 101,211 மில்லியன் மற்றும் ரூபா. 1,413 மில்லியன்களாகும். 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது, பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கான காகிதச் செலவு அதிகரித்ததன் காரணமாக, 2023 ஆம் ஆண்டு அதே முதல் நான்கு மாதங்களில் மீண்டெழும் செலவினமானது 6 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் பாடசாலை ஊட்டச்சத்து உணவுத் திட்டம், பாடப் புத்தகங்கள் அச்சிடுதல் மற்றும் பாடசாலை சீருடைகள் மற்றும் கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு காலணிகள் வழங்குதல் போன்ற நலத்திட்டங்களை அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. பாடசாலை மாணவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்காக, அரசு ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு சத்தான உணவின் விலை ரூபா 30 முதல் ரூபா 100 வரை அதிகரித்துள்ளதோடு இதற்காக 2023 ஆம் ஆண்டில் ரூபா 1,400 மில்லியன் செலவு செய்துள்ளது. முதல் நான்கு மாதங்களில், பாடசாலை ஊட்டச்சத்து உணவுத் திட்டம் மற்றும் பாடப் புத்தகங்கள் அச்சிடுதல் மற்றும் பாடசாலை சீருடைகள் போன்றவற்றிற்கான மொத்தச் செலவினம் ரூபா 9,969 மில்லியன்களாகும். இதன் விளைவாக, 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இந்த நலன்புரி திட்டங்களுக்கான செலவினம் 180 சதவீதத்தால் அதிகரிப்படைந்துள்ளது. மூலதனச் செலவினமானது பிரதானமாக பாடசாலைகளில் புனர்வாழ்வு மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் மற்றும் மாகாணக் கல்வித் துறை உட்பட தரமான அபிவிருத்தி சீர்திருத்தங்களுக்கு செலவிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.11 : பாடசாலைக் கல்வி தொடர்பான பிரதான செயற்பாட்டுச் செலவினம் : 2023 சனவரி - ஏப்ரல்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2022 | 2023 (தற்காலிக) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| பாடசாலை ஆசிரியர்கள், ஏனைய பதவியனருக்கான வேதனாதிகள் | 84,089 | 83,909 |
| *தேசிய* | 25,519 | 17,669 |
| *மாகாண* | 58,570 | 66,240 |
| நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் | 3,558 | 9,969 |
| பரீட்சை மதிப்பீடு | 299 | 649 |
| மூலதனச் செலவினம் | | |
| பாடசாலைகள் புனரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 386 | 377 |
| ஆசிரிய அபிவிருத்தி | 10 | 12 |
| கல்வியில் விசேட அபிவிருத்தி | 59 | 2 |
| மாகாணக் கல்வி | 582 | 981 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

### உயர் கல்வி

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதக் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பல்கலைக்கழகக் கல்விக்கான மொத்தச் செலவினமானது 2023 இன் அதே முதல் நான்கு மாதங்களில் 14.3 சதவீதத்தால் ரூபா 24,318 மில்லியனாக அதிகரித்தது. மீண்டெழும் செலவினம் முதல் நான்கு மாதங்களில் 4.8 சதவீத்தினால் ரூபா 19,210 மில்லியனாக அதிகரித்தது. மூலதனச் செலவினம் 72.5 சதவீதத்தினால் 2022 இன் அதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, 2023 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 5,108 மில்லியன்களுக்கு அதிகரித்தது.

**அட்டவணை 2.12 : உயர் கல்வியின் பிரதான செயற்பாடுகளுக்கான செலவினம் : 2023 சனவரி - ஏப்ரல்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2022 சன - ஏப் | 2023 சன - ஏப் (தற்காலிக) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களின் ஆள்சார் வேதனாதிகள் | 16,585 | 16,796 |
| *மஹாபொல மற்றும் மாணவர் உதவு தொகைக் கொடுப்பனவு* | 450 | 716 |
| *மூலதனச் செலவினம்* | | |
| உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டத்தினைத் துரிதப்படுத்தல் (உலக வங்கி) | 970 | 967 |
| கிழக்கு பல்கலைக்கழகத்தில் சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதி (இ.அ/குவைத்) | 360 | - |
| விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப, மனிதவள அபிவிருத்தி கருத்திட்டம் (இ.அ.்.ஆசிய அபிவிருத்தி வங்கி) | 905 | 1,286 |
| வயம்ப பல்பலைக்கழக நகர அபிவிருத்தித் திட்டம் (இ.அ/ சவுதி) | 386 | 342 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

### திறன் மேம்பாடு மற்றும் தொழில் கல்வி

திறன் மேம்பாடு மற்றும் தொழில் கல்விக்கான மொத்தச் செலவினமானது ரூபா 2,565 மில்லியனாகும். இதில் 2023 ஆம் ஆண்டின் நான்கு மாத காலப்பகுதியில் மீண்டெழும் செலவினம் ரூபா 2,365 மில்லியன் என்பதுடன், மூலதனச் செலவினம் ரூபா 201 மில்லியனாகும்.

**அட்டவணை 2.13 : திறன் அபிவிருத்தி சார்ந்த பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம் : 2023 சனவரி - ஏப்ரல்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2022 | 2023 (தற்காலிக) |
|---|---|---|
| நிபுனதா சிசு திரிய | - | 194 |
| திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ஆ.அ.வ. / உ.வ.) | - | 152 |
| 07 தொழில்நுட்ப மற்றும் பொறிமுறைத் தொழில்நுட்ப கல்லூரிகளின் நவீனமயமாக்கல் | 35 | - |
| கொள்திறன் மேம்பாடு கருத்திட்டம் இலங்கையின் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறிமுறைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடநெறிகளுக்கானது. (இலங்கை அரசாங்கம்/ KoICA) | - | 48 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## அறிவியல் மற்றும் புத்தாக்கம்

அறிவியல் மற்றும் புத்தாக்கத்திற்கான மொத்தச் செலவினமானது ரூபா 630 மில்லியனாகும். இதில் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மீண்டெழும் செலவுகள் ரூபா 529 மில்லியன் என்பதுடன் மூலதனச் செலவினம் ரூபா 100 மில்லியனாகும்.

**அட்டவணை 2.14 : திறன் அபிவிருத்தி பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம் 2023 சனவரி - ஏப்ரல்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2022 | 2023 (தற்காலிகமானது) |
|---|---|---|
| அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் - இலங்கை உயிரியல் தொழில்நுட்ப நறுவகம் | - | 94 |
| விஞ்ஞான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 0.3 | 2 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## சுகாதாரம்

மேற்கத்திய மற்றும் சுதேச மருத்துவத் துறைகள் உட்பட சுகாதாரத்திற்கான அரசாங்கத்தின் மொத்தச் செலவு மாகாண மற்றும் மத்திய அரசின் சுகாதார செலவினங்களை உள்ளடக்கி 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில். 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 29.1 வீதத்தால் ரூபா 123,661 மில்லியனாக அதிகரித்துள்ளது. மொத்த சுகாதார செலவினத்தில் மீண்டெழும் செலவினம் ரூபா 117,215 மில்லியனாகும். மூலதன முதலீடு ரூபா 6,446 மில்லியன் என்பதுடன் மீண்டெழும் செலவினங்களில் முக்கிய வகைகளில் ஒன்றான மருத்துவப் பொருட்களான மருந்துகள், சத்திரசிகிச்சைப் பொருட்கள் மற்றும் ஆய்வுகூடப் பொருட்களுக்காக ரூபா 41,146 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.15 : சுகாதாரத் துறையில் பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம் சனவரி - ஏப்பிரல் 2023**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2022 சன - ஏப் | 2023 சன - ஏப் |
|---|---|---|
| **மொத்த மீண்டெழும் செலவினம்** | 87,447 | 117,215 |
| சேவை வழங்கல் செலவினம் | 47,786 | 47,483 |
| அதில் மருத்துவ அலுவலர் மற்றும் துணை அலுவலர் சம்பளங்கள் | 37,233 | 38,620 |
| மருந்துப் பொருள் வழங்கல் | 19,637 | 41,146 |
| மாகாண சுகாதாரம் | 20,024 | 28,586 |
| **அரச முதலீட்டுச் செலவினம்** | 8,281 | 6,446 |
| மருத்துவ உபகரணம் | 172 | 560 |
| சுகாதார முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டம் - ஆ.அ. வங்கி | 286 | 155 |
| இலங்கை கொவிட் 19 அவசர பொறுப்பு மற்றும் சுகாதார முறைமை தயார்நிலைக் கருத்திட்டம் (உ.வ) | 3,323 | 174 |
| தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளின் சுகாதார வசதிகளை தரமுயர்த்தல் | 449 | - |
| நிரல் அமைச்சு வைத்தியசாலைகளின் கீழ் அவசர சிகிச்சைப் பிரிவை மேம்படுத்தல் | 58 | 137 |
| அம்புலெட்டர் பராமரிப்பு மைய அபிவிருத்தி (GOSL》 சீனா) | 2 | - |
| உயர் சக்தி கதிரியக்கத்துடன் இலங்கையில் புற்றுநோயாளர்களுக்கான உயர் தர கதிரியக்க சிகிச்சை ஏற்பாடு | - | 53 |
| தாதியர் பீடம்∴ விடுதி நிர்மாணம் | 50 | 23 |
| ஏனைய மூலதன முதலீடுகள் | 2,924 | 5,345 |
| மாகாண சுகாதார முதலீடு | 1,017 | 2,100 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம்

2023 இன் முதல் நான்கு மாதங்களில், நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ மொத்த முதலீடு 9.82 சதவீதம் குறைந்து ரூபா 10,248 மில்லியனாக இருந்தது. மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் உட்பட நீர்ப்பாசன முறைமைகளின் அபிவிருத்திக்காக ரூபா 11,364 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. நீர்ப்பாசன அமைப்புகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான நீர்ப்பாசனம் நடப்பு ஆண்டில் ரூபா 3,477 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன், மீதியான ரூபா 6,771 மில்லியன் நீர்ப்பாசன அமைச்சுக்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் நீர்ப்பாசன முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## விவசாயம்

2023ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பெருந்தோட்டம், கால்நடைகள், மீன்பிடி மற்றும் காணி அபிவிருத்தி உள்ளிட்ட விவசாயத் துறைக்கான மொத்தச் செலவு 2.8 சதவீதத்தால் ரூபா 20,785 மில்லியனாக அதிகரித்தது. இந்த தொகையில் இரசாயன மற்றும் சேதன உரங்களுக்கான மானியத் திட்டத்திற்காக ரூபா 13,513 மில்லியன் செலவிடப்பட்டது. பயிர் விவசாயத்திற்காக ரூபா 786 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. பெருந்தோட்டத்துறை அபிவிருத்திக்காக ரூபா 17 மில்லியனும் மீன்பிடி அபிவிருத்திக்காக ரூபா 290 மில்லியனும், ரூபா 79 மில்லியன் காணி அபிவிருத்தக்காகவும் மற்றும் மீதியானது கால்நடை அபிவிருத்திக்கான உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கும் பயனாளிகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்

பாதுகாப்பான குடிநீர் மற்றும் தரமான சுகாதார சேவைகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகளில் இருந்து பெறப்பட்ட கடன்களின் சேவை உட்பட, அரசாங்கமானது 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 17,294 மில்லியனை செலவிட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இச்செலவினமானது கிட்டத்தட்ட 100 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. "கொள்திறன் மேம்பாடு மற்றும் விநியோக விரிவாக்கல்" தேசிய நிகழ்ச்சித்திட்டமானது (முன்னர் "அனைவருக்கும் நீர்" என்ற உப கருத்திட்டத்தின் பெயரில் இயக்கப்பட்டது.), 248 செயற்திட்டங்களைக் கொண்டுள்ளது. இவை உற்பத்தி திறனை மேம்படுத்துதல், நன்நீர் வழங்கல் திட்டங்களை நிறுவுதல் மற்றும் முழு மக்களும் பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதை உறுதி செய்வதற்கான தற்போதைய திட்டங்களை விரைவுபடுத்துதல் ஆகிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 2023 இல் செயல்படுத்தப்படுகின்றன.

**அட்டவணை 2.16 : நீர் வழங்கல், கழிவு நீரகற்றல் கருத்திட்ட செலவினம் : சனவரி - ஏப்ரல் 2023**

ரூபா.மில்லியன்

| கருத்திட்டம் | 2023 சன - ஏப் (தற்காலிகமானது) |
|---|---|
| யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம் (இ.அ/ஆ.அ.வ.) | 5,052 |
| நீர்வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம் (இ.அ/உ.வ) | 3,434 |
| பாரிய மாத்தளை நீர் வழங்கல் கருத்திட்டம் (இ.அ./பிரான்ஸ்) | 1,902 |
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கருத்திட்டம் 2 (இ.அ/ஆ.அ.வ) | 1,817 |
| அம்பதலே நீர்வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் சக்தி சேமிப்பு கருத்திட்டம் (இ.அ/பிரான்ஸ்) | 1,758 |
| திறன் மேம்பாடு மற்றும் விநியோக விரிவாக்கத் திட்டம் | 1,702 |
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கருத்திட்டம் 3 (இ.அ/ஆ.அ.வ) | 951 |
| பாரிய ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டம் (இ.அ./கொரியா) | 487 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்கள்

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், சாலைகள் மற்றும் பாலங்களுக்கான செலவு ரூபா 81,626 மில்லியனாகும். இது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 100 சதவீதத்திற்கும் மேலான அதிகரிப்பாகும். இந்த வருடத்தின் முதல் காலாண்டில் ஒப்பந்தக்காரர்களின் நிலுவைத் பட்டியல்களைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் அதிக முன்னுரிமை அளித்துள்ளது. மொத்த தொகையில் தேசிய மற்றும் கிராமப்புற வீதி மேம்பாட்டுக்காக ரூபா 18,925 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதன் கீழ் ரூபா 4,034 மில்லியன் ஒருங்கிணைந்த வீதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு (ஐ-வீதி), அதாவது 6,000 கி.மீ. இற்கும் அதிகமான தூரம் கொண்ட கிராமப்புற மற்றும் மாகாண சாலைகளை புனரமைத்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பிரதான வீதிகளை அணுகுவதற்கு 100,000 கி.மீ. தூரம் கொண்ட மாற்று வீதிகளை அபிவிருத்தி செய்ததற்கான பட்டியல்களை தீர்த்து வைப்பதற்காக ரூபா 8,269 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்கான செலவு ரூபா 17,666 மில்லியனாகும். அதில் கணிசமான தொகை மத்திய அதிவேக நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது. சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துவதற்கான செலவு ரூபா 511 மில்லியனாகும். பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் அபிவிருத்தி தொடர்பான செலவுகள் ரூபா 941 மில்லியனாகும்.

மேலும், வீதி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உள்ளூர் வங்கிகளிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பெறப்பட்ட கடனுக்கான வட்டி மற்றும் மூலதனத் திருப்பிச் செலுத்துதலுக்காக மொத்த செலவினங்களின் அதிகூடிய விகிதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுமார் ரூபா 39,960 மில்லியன்கள் செலுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.17 : பாதைகள் மற்றும் பாலங்கள் மீதான செலவினம் சனவரி - ஏப்ரல் 2023**

ரூபா.மில்லியன்

| | கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம் | 2022 சன - ஏப் | 2023 சன - ஏப் (தற்காலிகமானது) |
|---|---|---|---|
| 1 | **அதிவேக பாதை அபிவிருத்தி** | 1,430 | 17,666 |
| | மத்திய அதிவேகப் பாதை கருத்திட்டம் | 238 | 13,933 |
| | கொழும்பு - இரத்தினபுரி - பெல்மதுல்ல அதிவேகப் பாதை | 117 | 10 |
| | புதிய களனி பாலத்திலிருந்து உயர்த்தப்பட்ட அத்துருகிரியவிற்கான அதிவேகப் பாதை | 54 | 13 |
| | துறைமுக அடைவு உயர்த்தப்பட்ட அதிவேகப்பாதை கருத்திட்டம் | 1,021 | 1,965 |
| | தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் விரிவாக்கம் | - | 1,745 |
| 2 | **நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி** | 16,123 | 17,845 |
| | பாதைகள் பராமரிப்பு | 688 | 1,434 |
| | கொழும்பு மாவட்ட பாதை அபிவிருத்தி கருத்திட்டம் | 158 | 276 |
| | தெற்கு பாதை இணைப்புக் கருத்திட்டம் | 438 | 316 |
| | ஒருங்கிணைந்த பாதை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ பாதை) | 10,613 | 4,034 |
| | மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள், பாலங்களை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல் | 1,200 | 15 |
| | உள்ளடக்கிய இணைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் | 21 | 1,740 |
| | பிரதான பாதைகள் , அதிவேகப் பாதைகள் அடைவுக்கான மற்றும் போக்குவரத்து நெரிசலைக் குறை- ப்பதற்கான மாற்றுச்சாலைத் தொடர்பு அபிவிருத்தி | 2,436 | 8,269 |
| | ஏனையவை | 569 | 1,761 |
| 3 | **பாதைகள் விரிவாக்கல் மற்றும் மேம்பாடு** | 113 | 511 |
| 4 | **பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணம்** | 606 | 941 |
| | தேசிய அதிவேகப் பாதைகளில் சேதமடைந்த பலவீனமான பாலங்களின் மீள்கட்டமைப்பு | 32 | 130 |
| | பழைய பாலங்களின் தொகுதிகளைக் கொண்டு கிராமிய பாலங்கள் நிர்மாணம் | 303 | 125 |
| | இரண்டாவது புதிய களனி பால நிர்மாணக் கருத்திட்டம் | 21 | 2 |
| | கொஹுவல மற்றும் காதம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் | 226 | 115 |
| | உத்தரனாந்த மாவத்தையிலும், சிலேவாயில் ரயில் நிலையத்திற்கு அருகாமையிலும் ரயில் பாதைக்கு மேல் மேம்பாலங்கள் கட்டுதல் | 2 | 559 |
| | ஏனையவை | 22 | 10 |
| 5 | **இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீதி புனரமைப்பு** | 12 | - |
| 6 | **மகநெகும கிராமிய பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | 1,134 | 1,080 |
| 7 | **வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான மாற்றல்கள்** | 2,550 | 3,000 |
| 8 | **காணி மற்றும் காணி மேம்பாடு (முன்னுரிமை கருத்திட்டங்கள் நீங்களாக ஏனைய கருத்திட்டங்கள்** | 50 | 623 |
| 9 | **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அர்ப்பணிப்புகளுக்கு இடைவெளி நிதியளிப்பு** | 14,380 | 39,960 |
| 10 | **ஏனைய** | - | - |
| | **மொத்தம்** | 36,398 | 81,626 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## போக்குவரத்து

போக்குவரத்து துறைக்கான அரசின் மொத்த செலவினம் 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் செலவினத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 7 சதவீதத்தினால் ரூபா 19,289 மில்லியன்களுக்கு அதிகரித்துள்ளது. மேலும் ரூபா 14,218 மில்லியன் மற்றும் ரூபா 5,071 மில்லியன் முறையே மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது. கொழும்பு புறநகர் புகையிரத திட்டம், மகவ முதல் ஓமந்தை வரையிலான புகையிரத பாதையை புனரமைத்தல், தற்போதுள்ள புகையிரத பாதைகளை பராமரித்தல் மற்றும் சிறிய மற்றும் பாரிய அளவிலான புகையிரத பாதையின் திருத்தப்பணிகள ஆகியவற்றிற்காக புகையிரத திணைக்களத்தினால் ரூபா 1,340 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், பேருந்து போக்குவரத்துக்கான மொத்தச் செலவு ரூபா 3,118 மில்லியனாகும். இச்செலவினம் பொருளாதார ரீதியில் இலாபமில்லாத பாதைகளில் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளை இயக்குதல், பாடசாலை மற்றும் உயர்கல்வி பருவ சீட்டுகள் மற்றும் இராணுவவீரர்களுக்கான பேருந்து பாஸ்களை வழங்குதல் போன்ற நலன்புரி சேவைகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. மோட்டார் போக்குவரத்து திணைக்களம் இந்த காலகட்டத்தில் ரூபா 776 மில்லியனை செலவிட்டுள்ளது.

## வீடமைப்பு அபிவிருத்தி

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வீடமைப்பு மற்றும் அது தொடர்பான உட்கட்டமைப்புக்காக ரூபா 344 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் செலவிடப்பட்ட ரூபா 1,351 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 75 சதவீதமான சரிவைக் காட்டுகிறது. கிராமம், நகர்ப்புறம், தோட்டங்கள், விருசுமித்துரு மற்றும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட மக்கள் உட்பட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 329 மில்லியன்கள் செலவிடப்பட்டுள்ளது.

## நகர்ப்புற அபிவிருத்தி

நகர்ப்புற அபிவிருத்திக்காக 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் செலவிடப்பட்ட ரூபா 5,408 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் அதே முதல் நான்கு மாதங்களில் செலவிடப்பட்ட மொத்தச் செலவு 52 சதவீதத்தால் ரூபா 8,211 மில்லியன்களுக்கு அதிகரித்துள்ளது. இதில் ரூபா 820 மில்லியன் மீண்டுடெழும் செலவீனங்களுக்காகவும் ரூபா 7,391 மில்லியன்கள் மூலதனச் செலவினங்களுக்காகவும் செலவிடப்பட்டுள்ளது. நகர்ப்புற அபிவிருத்தி துறையின் மொத்தச் செலவில் கொழும்பு நகர அபிவிருத்தித் செயற்திட்டம், நகர மறுசீரமைப்புத் செயற்திட்டம், மூலோபாய நகர அபிவிருத்தித் செயற்திட்டம் (கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம்), வெராஸ் கங்கைத் செயற்திட்டம், “சியாக் நகர்” நிகழ்ச்சித் திட்டம் மற்றும் மாகாண நகர அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றுக்கு ரூபா 5,011 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## பொது திறைசேரி காசுப்பாய்ச்சலின் செயலாற்றுகை

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், வருவாய் மற்றும் பிற பெறுகைகள் வழியில் பொது திறைசேரிக்கு வந்த காசு உட்பாய்ச்சல்களானது ரூபா.782.0 பில்லியன் ஆகும்., இது மதிப்பீடுசெய்யப்பட்ட ரூபா.830.3 பில்லியனில் 94.2 சதவீதத்தை எட்டியுள்ளது. இதற்கிடையில், 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மீண்டெழும் மற்றும் பொது முதலீடுகளுக்கான காசு வெளிப்பாய்ச்சானது மதிப்பீட்டு தொகையான ரூபா.1,732.8 பில்லியனுக்கு எதிராக ரூபா.1,619.7 பில்லியன் தொகையாகும். இத்தொகையானது மதிப்பீட்டில் 93.5 சதவீதத்தை அடைந்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தில் இருந்த ரூபா 1,249.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 29.6 சதவீத அதிகரிப்பாகும்.

2023 ஏப்ரல் 30 ஆம் திகதியன்றுள்ளவாறு மொத்த காசுப் பற்றாக்குறை ரூபா.837.7 பில்லியன் ஆகும். இது 2022 ஏப்ரல் இறுதியில் காணப்பட்ட ரூபா. 650.8 பில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 28.7 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. இது முக்கியமாக செயல்பாட்டுச் செலவில் 39.4 சதவீதம் அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்டதாகும். எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதியின் இறுதி எதிர்மறை காசு மற்றும் வங்கி மீதி ரூபா. 4.9 பில்லியனாக இருந்தது. இது 2022 ஏப்ரல் 30 நிலவரப்படி ரூபா. 230.3 பில்லியனாக இருந்தது. இதற்கு காரணம் முக்கியமாக வருவாய் மற்றும் பிற வரவுகளில் 30.7 சதவீதம் அதிகரிப்பும் சர்வதேச நாணய நிதயத்தில் நீடிக்கப்பட்ட நிதி வசதி (இஇஎப்) திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன் வசதியுமாகும்.

**அட்டவணை 2.18 : 2023 சனவரி முதல் ஏப்பிரல் வரை அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் செயற்பாடுகளின் கூற்று**

ரூபா.பில்லியன்

| | 2022 | 2023 | |
|---|---|---|---|
| | உண்மையான | மதிப்பிடப்பட்ட | உண்மையான |
| ஆரம்ப காசு மீதி | -831.6 | -84.2 | -84.2 |
| வருமானம் மற்றும் ஏனைய பெறுகைகளிலிருந்து மொத்த காசு உட்டபாய்ச்சல் | 598.5 | 830.3 | 782.0 |
| மீண்டெழும் கொடுப்பனவுகளுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -998.8 | -1,535.0 | -1,392.9 |
| மூலதன கொடுப்பனவுகளுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல;* | -250.5 | -197.8 | -226.8 |
| தேறிய காசு மிகை (பற்றாக்குறை) | -650.8 | -902.5 | -837.7 |
| மொத்த பெறுகை * | 1,754.1 | 1,497.1 | 1,384.6 |
| படுகடன் மீள் கொடுப்பனவு | -605.6 | -549.1 | -474.8 |
| தேறிய பெறுகை | 1,148.5 | 948.0 | 909.8 |
| முன்னைய ஆண்டின் சர்வதேச முறிகளின் தேறிய பெறுகைகள் | 4.5 | - | - |
| சீராக்கல் கணக்கு மீதி (தற்காலிக ஊழிய மீதி, தேறிய வைப்புக்கள் முதலியன) | 99.1 | - | 7.2 |
| **முடிவுறுத்தல் காசு மீதி** | -230.3 | -38.7 | -4.9 |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

## அரசாங்கக் கடனை நிருவகித்தல்

2023 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த கடன்பெறல் வரம்புத் தொகை ரூபா. 4,979 பில்லியனாக இருந்தது, இதற்குள் 2023 ஜனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையிலான காலப்பகுதிக்கான அரசாங்கக் கடன்களின் பயன்பாடு ரூபா. 1,384.6 பில்லியனாக பதிவாகியுள்ளது.. மொத்த கடன் பயன்பாடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செயற்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட கடன்களை உள்ளடக்கியுள்ளது. இந்த காலகட்டத்தில இக்கடனில் முறையே ரூபா. 1,196.0 பில்லியன் மற்றும் ரூபா. 188.6


பில்லியன், நிதிக்காசுப் பாய்ச்சல் செயல்பாடுகள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியளிக்க பயன்படுத்தபட்டது.. மொத்தமாக பெற்ற கடன்களில் சுமார் 86.4 சதவீதம் உள்நாட்டுக் கடன்களாகும்.

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில மொத்த உள்நாட்டுக் கடன்களில் 49 சதவீதமானவை திறைசேரி உண்டியல்கள் மூலமாகவும், 42 சதவீதம் திறைசேரி முறிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், மேலும் 9 வீதம் இலங்கை மத்திய வங்கியின் தற்காலிக முற்பணம் மூலமாகவும் திரட்டப்பட்டது. மதிப்பாய்வு செய்யப்பட்ட காலத்தின் முடிவில் தேறிய கடன் ரூபா.909.8 பில்லியனாக இருந்தது.

**அட்டவணை 2.19 : மொத்த உள்நாட்டுக்கடன் பெறுகைகள் (2023 சனவரி - ஏப்பிரல்)**

| கருவி | ரூபா.பில்லியன் |
|---|---|
| திறைநேரி பிணைகள் | 502.9 |
| திறைசேரி உண்டியல்கள் (தேறிய) | 598.4 |
| தற்கால மற்பணங்கள் - இலங்கை மத்திய வங்கி | 109.0 |
| வெளிநாட்டு நாணய வங்கி அலகு மீள்கொடுப்பனவுகள் | (14.3) |
| **மொத்தம்** | 1,196.0 |

**வரைபு 2.3 : மொத்த உள்நாட்டுக் கடன்கள் (சனவரி - ஏப்பிரல் 2023**




*மூலத் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

**திறைசேரி உத்தரவுப்பத்திரம் மீதான தற்செயலான பொறுப்புக்களை வெளிப்படுத்துதல்**

திறைசேரி உத்தரவுப்பத்திரம் 2016 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதி முகாமை (பொறுப்பு) (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 2 இன் நியதிகளின் படி வழங்கப்பட்டது. மேலும் 2023 ஏப்ரல் 30 வரை வழங்கப்பட்ட மற்றும் செல்லுபடியாகும் திறைசேரி உத்தரவுப்பத்திரங்களின் மதிப்பு ரூபா.1,550.4 பில்லியன் ஆகும். 2023 ஏப்ரல் 30 இன் படி பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட திறைசேரி உத்தரவுபத்திரத்தின் பட்டியல் அட்டவணை 2.20 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.20 : திறைசேரியினால் விநியோகிக்கபட்ட உத்தரவாதங்களின் விபர பட்டியல் 2023.04.30 வரை**

| தொ. இல | வங்கி/ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | ரூபா.மில் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | மக்கள் வங்கி | இலங்கை மின்சார சபை | 15,633.33 | 128,520.26 |
| | | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 2,539.60 | |
| | | வரை. இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் | 23,640.67 | |
| | | லங்கா கோல் கம்பனி லிமிடெட் | 500.00 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 7,336.78 | |
| | | தேசிய கடதாசி கூட்டுத்தாபனம் | 140.00 | |
| | | நெல் சந்தைப்படுத்தல் சபை | 760.75 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 58,078.53 | |
| | | அரச அச்சு கூட்டுத்தாபனம் | 1,350.00 | |
| | | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 15,449.60 | |
| | | இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் | 100.00 | |
| | | லங்கா சதோச லிமிடெட் | 2,241.00 | |
| | | டெக்னோ பாரக் அபிவிருத்திக் கம்பனி (பிரவைட்) லிமிடெட் | 750.00 | |
| 2 | இலங்கை வங்கி | வரை. கட்டிட பொருள் கூட்டுத்தாபனம் | 500.00 | 404,028.74 |
| | | இலங்கை மின்சார சபை | 4,780.00 | |
| | | இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் | 250.00 | |
| | | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 100,000.00 | |
| | | ஜெ. சே. ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்- கழகம் | 835.00 | |
| | | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை | 200.00 | |
| | | லங்கா நிலக்கரி நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட் | 49,500.00 | |

| தொ. இல | வங்கி/ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | ரூபா.மில் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | வரை. வியாபார முகாமைத்துவத் தேசிய பாடசாலை | 8,600.00 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 68,489.67 | |
| | | நோர்த் சீ லிமிடெட் | 38.63 | |
| | | நெல் சந்தைப்படுத்தல் சபை | 500.00 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 147,102.33 | |
| | | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 11,506.30 | |
| | | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம் | 1,126.81 | |
| | | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் | 200.00 | |
| | | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 2,400.00 | |
| | | லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் | 8,000.00 | |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | இலங்கை மின்சார சபை | 7,500.00 | 203,019.18 |
| | | ஜெ. சே. ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 41,372.91 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 32,710.61 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 114,415.66 | |
| | | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் | 3,500.00 | |
| | | நகர அபிவிருத்தி அதிகார சபை | 2,770.00 | |
| | | டெக்னோ பார்க் அபிவிருத்தி கம்பெனி பிரைவேட் லிமிடெட் | 750.00 | |
| 4 | வர்த்தக வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 968.36 | 5,724.29 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 4,755.93 | |
| 5 | டீ எப் சீ சீ வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 6,026.24 | 11,922.75 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 5,896.51 | |
| 6 | சீனா எக்சிம் வங்கி | இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 29,145.46 | 29,145.46 |
| 7 | ஹட்டன் நெஷனல் வங்கி | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 4,000.00 | 44,211.43 |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 16,033.27 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 20,133.15 | |
| | | இலங்கை மின்சார சபை | 4,045.01 | |
| 8 | ஹொங்கொங் என்ட் ஷங்காய் பேங்கின் கொ லிமிடெட் | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 14,510.41 | 14,510.41 |
| 9 | இன்டஸ்ரியல் என்ட் கொமர்ஷியல் பெங் ஒப் சைனா | இலங்கை மின்சார சபை | 13,798.49 | 13,798.49 |
| 10 | யப்பான் இன்டநெஷனல் கோபரேஷன் ஏஜன்சி (JICA) | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 183,076.14 | 183,076.14 |
| 11 | தேசிய அபிவிருத்தி வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 21,380.43 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 6,299.21 | 27,679.63 |
| 12 | எக்சிம் பேங்க் ஒப் இந்தியா | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 84,390.48 | 84,390.48 |
| 13 | சீனா அபிவிருத்தி வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 54,247.46 | 54,247.46 |
| 14 | ஆசிய அபிவிருத்தி வங்கி | இலங்கை மின்சார சபை | 131,500.56 | 147,938.13 |
| | | நகரஅபிவிருத்தி அதிகார சபை | 16,437.57 | |
| 15 | சம்பத் வங்கி பிஎல்சி | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 14,500.00 | 14,500.00 |
| 16 | யுனி கிரடிட் பேங் ஒஸ்ரியா ஏஜி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 18,401.02 | 18,401.02 |
| 17 | ஐஎன்ஜி வங்கி எனவீ நெதர்லாந்து | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 30,166.01 | 30,166.01 |
| 18 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | 3,945.02 | 3,945.02 |
| 19 | சீனா நெஷனல் கெமிகல் இன்ஜினியரிங் இல14. கன்ஸ்ட்ரக்ஷன் கொ.லிமி. | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 14,391.09 | 14,391.09 |
| 20 | டீபி டரஸ்டிஸ் ஹொங்கொங் லிமிடெட் | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 57,531.50 | 57,531.50 |
| 21 | இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட் | நோர்த் சீ லிமிடெட் | 60.00 | 60.00 |
| 22 | ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) | இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி | 59,175.25 | 59,175.25 |
| | **மொத்தம்** | | 1,550,382.74 | 1,550,382.74 |

# அத்தியாயம் - 03

# அரசுடைமை தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

## மேன்நோக்கு

பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி மற்றும் ஒப்பீட்டு நாணய நிலைத்தன்மை ஆகியவை அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்த உதவியதனால், 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ரூபா 859 பில்லியன் இழப்புடன் ஒப்பிடுகையில், 2023 இன் முதல் நான்கு மாதங்களில் முக்கிய 52 நிறுவனங்களின் இலாபம் ரூபா 144 பில்லியனை பிரதிபலிக்கிறது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட செலவு - பிரதிபலிப்பு மின்சார கட்டண சரிசெய்தல் மற்றும் எரிபொருள் விலை சூத்திரம் மற்றும் பிற சீர்திருத்த முயற்சிகள் ஆகியவை செயல்திறனை மேம்படுத்த உதவியது. 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் குறிப்பிடத்தக்க நாணயத் தேய்மானம் கடந்த ஆண்டு டொலர் கடனுடன் தொழில்முயற்சிகளின் இழப்புகளுக்கு பங்களித்தது. 2023 ஆம் ஆண்டில் மிகவும் நிலையான நாணய நிலை மற்றும் இருப்புநிலை மறுசீரமைப்பு 2023 இல் தொடர்புடைய இழப்புகளை குறைத்தது. பெற்றோலியத் தொழில்துறையானது கீழ்நிலை சில்லறை சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட போட்டியுடன் தாராளமயமாக்கப்படுகிறது. எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகிய இரண்டிற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு தானியங்கி செலவு பிரதிபலிப்பு விலை முறையானது வங்கி அமைப்பில் செலுத்தப்படும் பாதகமான அழுத்தத்தை கட்டுப்படுத்தும்.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் எதிர்கால வளர்ச்சி சாத்தியங்களைத் திறப்பதற்கும் தொழில்முயற்சிகளில் துணிச்சலான சீர்திருத்தங்கள் முக்கியமானவை. பொது தொழில்முயற்சி மறுசீரமைப்புப் பிரிவை நிறுவுதல் உள்ளிட்ட முக்கிய படிகள், பொது தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்பு செயல்முறையை விரைவாகக் கண்காணிப்பது, தொழில்முயற்சி ஆளுமை, போட்டி மற்றும் முக்கிய தொழில்முயற்சிகளின் நிதி நிலையை மேம்படுத்த உதவும்.

நான்கு முக்கிய தொழில்முயற்சிகளின் இருப்புநிலைகளை மேம்படுத்துதல், அதாவது இலங்கை மின்சார சபை (இ.மி.ச.), இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (இ.பெ.கூ.), வீதி அபிவிருத்தி அதிகார சபை (வீ.அ.ச.), மற்றும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் (ஸ்ரீ.ஏ.லி.) ஆகிய முக்கிய 52 தொழில்முயற்சிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளை வெளியிடுதல். தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்முயற்சிகளுடன் கூட்டு நோக்கத்தின் அறிக்கைகளில் (Statements of Corporate Intent - SCIs) நுழையும் போது, ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்குகளுடன், நடுத்தர காலத்தில் நிதி அபாயங்களைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரச தொழில்முயற்சிகளிடமிருந்து வரிகள் மற்றும் பங்கிலாபங்களின் அறவீடு 2023 முதல் நான்கு மாதங்களில் ரூபா 9.6 பில்லியனாக இருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 11.4 பில்லியனாகும்.

## பத்து முக்கிய தொழில்முயற்சிகளின் மதிப்பாய்வு

### இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் சொத்துத் தளம் 2022 இன் இறுதியில் ரூபா 4,336 பில்லியனிலிருந்து 2023 ஏப்ரல் இறுதியில் 7.2 சதவீதத்தால் ரூபா 4,023 பில்லியனாக குறைந்துள்ளது. 2023 இன் முதல் நான்கு மாதங்களில், வங்கியின் வைப்புத் தளம் 1.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2022 இன் இறுதியில் இருந்த ரூபா 3,335 பில்லியனுடன் ஒப்பிடுகையில் சதவீதம் ரூபா 3,377 பில்லியனாக இருந்தது. வங்கியின் மூன்றாம் நிலை கடன் விகிதம் 2022 இன் இறுதியில் 5.27 சதவீதத்துடன் ஒப்பிடும் போது, 2023 ஏப்ரல் இறுதியில் 6.8 சதவீதமாக குறைந்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 19.9 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபம் பதிவாகியதுடன், 2023 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 3.4 பில்லியன் வரிக்கு முந்தைய இலாபத்தை பதிவு செய்துள்ளது.

### மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் சொத்துத் தளம், 2022 இன் இறுதியில் காணப்பட்ட ரூபா 2,972 பில்லியனிலிருந்து 2023 ஏப்ரல் இறுதியில் ரூபா 2,914 பில்லியனாக 1.9 சதவீதம் குறைவடைந்தது. வங்கியின் வைப்புத் தளம், 2022 இறுதியில் ரூபா 2,372 பில்லியனிலிருந்து சற்றே அதிகரித்து 2023 ஏப்ரல் இறுதியில் ரூபா 2,428 பில்லியனாக சற்று அதிகரித்தது. கடன்கள் மற்றும் முன்பணங்கள் 2.6 சதவீதம் அதிகரித்தது. 2022 இறுதியில் காணப்பட்ட ரூபா 1,783 பில்லியன் 2023 முதல் நான்கு மாதங்களில் ரூபா 1,830 பில்லியனாகும். வங்கியின் மூன்றாம் நிலை கடன் விகிதம் 2022 இறுதியில் 12.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2023 ஏப்ரல் இறுதியில் 18.3 சதவீதமாக சரிந்துள்ளது. மக்கள் வங்கியின் வரிக்கு முன்னரான வரி 2022 இன் அதே காலகட்டத்தில் காணப்பட்ட ரூபா 9.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2023 முதல் நான்கு மாதங்களில் ரூபா 6.3 பில்லியனாக இருந்தது.

## தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் சொத்துத் தளமானது 2022 இன் இறுதியில் காணப்பட்ட ரூபா 1,617 பில்லியனிலிருந்து 2023 ஏப்ரல் இன் இறுதியில் ரூபா 1,640 பில்லியனுக்கு 1.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. வங்கியின் வைப்புத் தளமானது 2022 இன் இறுதியில் காணப்பட்ட ரூபா. 1,477 பில்லியனிலிருந்து 2023 மார்ச் மாத முடிவில் ரூபா 1,496 பில்லியனுக்கு 1.2 சதவீதத்தால் அதிகரிப்படைந்துள்ளது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் இருப்பு மீதி 2022 இன் இறுதியில் காணப்பட்ட ரூபா. 553 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2023 இன் முதல் மூன்று மாதங்களில் ரூபா. 544 பில்லியனாக 1.6 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. தேசிய சேமிப்பு வங்கி 2022 முதல் நான்கு மாதங்களில் பதிவு செய்த வரிக்கு முன்னரான இலாபாமான ரூபா. 8.6 பில்லியனனுடன் ஒப்பிடுகையில் 2023 முதல் மூன்று மாதங்களில் ரூபா. 2.0 பில்லியனினை பதிவு செய்திருந்தது.

## வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்

2023 இன் முதல் நான்கு மாதங்களில், வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் வரிக்கு முந்தைய இலாபமாக ரூபா. 4,458 மில்லியினை பதிவு செய்திருந்தது. இது 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 51 சதவீதம் சரிவினைக் கண்டுள்ளது. இது முக்கியமாக நிறுவனத்தின் வெளிநாட்டு நாணய மதிப்பிலான பரிவர்த்தனைகள் மீதான தேறப்படாத இழப்பு காரணமாகும். சமீபத்தில், பிட்ச் ரேட்டிங் சர்விஸ் ஆனது, இலங்கை தேசிய மதிப்பீட்டின் சமீபத்திய இறையாண்மை தரமிறக்கம் மற்றும் மறுசீரமைப்பைத் தொடர்ந்து இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தேசிய காப்புறுதி நிதி வலிமையை “A (lka)” இலிருந்து “AA (lka)” ஆகக் தரமிறக்கியது. அரசுடமை தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினை விலக்குவதற்கு அரசாங்கம் இப்போது இனம் கண்டுள்ளது.

## இலங்கை மின்சார சபை

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 4,935 Gwh ஆக இருந்த மின்சாரத் தேவையானது 2023 ஆம் ஆண்டின் அதே முதல் நான்கு மாதங்களில் 4,516 Gwh ஆக 22 சதவீதம் சரிவடைந்துள்ளது. இருந்தபோதிலும், அந்தந்த காலகட்டத்திற்கான மின்சார விற்பனையின் மூலம் கிடைத்த வருவாய் இரட்டிப்பை விடவும் அதிகமாகும். இதற்கான காரணம் செலவு மீட்பு மாற்றங்களை பிரதிபலிக்கும் சராசரியாக 66 சதவீதம் அதிகரிப்புடன் கூடிய 2023 பெப்ரவரி 15 முதல் நடைமுறைக்கு வந்த இரண்டாவது மேல்நோக்கிய விலைத் திருத்தமாகும். அதன்படி, 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் மின்சார விற்பனை மூலம் பெறப்பட்ட வருமானமானது ரூபா.180,117 மில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில், இலங்கை மின்சார சபையானது முன்னோக்கிய நோக்கத்தின் அடிப்படையில் வழக்கமான, அரை ஆண்டிற்கு ஒரு முறை பயனடையும் பயனர் கட்டண மாற்றத்தை நடைமுறைப்படுத்தும். இது மேற்கொள்ளப்படுவது இலங்கை மின்சார சபையினை நிதி ரீதியாக இலாபகரமனதாக மாற்றுவதற்கும், அரசாங்கத்தின் மீதான வரவு செலவுத் திட்ட சுமையை குறைப்பதற்கும் ஆகும். எவ்வாறாயினும், எரிபொருள் மற்றும் நிலக்கரி விலை ரூபாயின் அடிப்படையில் அதிகரித்ததன் விளைவாக, நேரடி உற்பத்தி செலவு 2022 முதல் நான்கு மாதங்களில் ரூபா. 114,460 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டின் அதே முதல் நான்கு மாதங்களில் ரூபா. 177,468 மில்லியனுக்கு 55% வீதத்தினால் அதிகரித்தது. மேலும், தொழிற்படு மூலதனத் தேவைகளுக்காக வங்கிக் கடன்கள் மீதான வட்டி வீதங்கள் அதிகரித்ததன் காரணமாக, நிதிச் செலவு 2022 முதல் நான்கு மாதங்களில் இருந்த ரூபா. 5,876 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டின் அதே முதல் நான்கு மாதங்களில் ரூபா. 23,264 மில்லியனாக அதிகரித்தது. மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்ட போதிலும், இலங்கை மின்சார சபை இயக்க இழப்பைச் ஈடுசெய்வதற்காக 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா. 29,797 மில்லியனை செலவழித்திருந்தது. காரணம் தாமதமான கட்டண உயர்வானது, கணிசமானளவில் அதிகரித்த உற்பத்தி செலவினை முழுமையாக ஈடுசெய்ய போதுமானதாக இருக்கவில்லை.

மேலும், 2023 முதல் நான்கு மாதங்களில் விற்பனை புள்ளியில் ஒரு அலகு விலை ஒரு கிலோ வாட்ஸ் இற்கு ரூபா 47.44 ஆக கணிசமானளவு அதிகரித்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஒரு கிலோ வாட்ஸ் இற்கு ரூபா 26.95 ஆகக் காணப்பட்டது. 2023 இன் முதல் நான்கு மாதங்களின் உற்பத்தி கலவையைப் பொறுத்தமட்டில் 2023 முதல் நான்கு மாதங்களின் போது நீர் (ஹைட்ரோ): தெர்மல் (எரிபொருள்): வெப்பம் (நிலக்கரி): என்சிஆர் காற்று 24:22:41:12 என மாற்றப்பட்டது. இது 2022இன் அதே காலகட்டத்தில் 21:27:39:12 ஆக காணப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன மின் உற்பத்தியாளர்களுக்கு செலுத்தவுள்ள மொத்த கடன்கள் 2023 ஏப்ரல் இறுதியில் ரூபா. 216.92 பில்லியனுக்கு அதிகரித்தது. சுயாதீன மின் உற்பத்தியாளர்களுக்கு, முக்கியமாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில், உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தினை இலங்கை மின்சார சபையினால செலுத்தாததால் கடுமையான நிதி சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். எவ்வாறாயினும், நுரைச்சோலை அனல்மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்டதும் 2022 டிசம்பர் இறுதியில் நிலுவையிலுள்ள கடன் மீதியான ரூபா 214.7 பில்லியன் (அமெரிக்க டாலர் 591.4 மில்லியன்) தொகையினை அரசாங்கக் கணக்குப் புத்தகத்திற்கு மாற்றுவதற்கு எடுத்த அரசாங்கத்தின் கொள்கை முடிவுடன் மற்றும் கடனை மாற்றுவதற்கு, இலங்கை மின்சார சபை நிதிநிலை அறிக்கைகளில் துணைக் கடன்களாகப் பதிவு செய்யப்பட்ட ரூபா 146.5 பில்லியன் தொகையினை, 2022 டிசம்பர் இறுதியில் உள்ளவாறு அரசாங்கத்தினால் இலங்கை மின்சார சபையிலுள்ள

உரித்தாண்மை முதலீட்டாக மாற்றுவதற்கும் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன்கள் 2022 இறுதியில் ரூபா 397.9 பில்லியனாக இருந்து 2023 ஏப்ரல் இறுதியில் ரூபா 239.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

உலக சந்தையில் மசகு எண்ணெயின் சராசரி இறக்குமதி விலை, 2022 டிசம்பரில் ஒரு பீப்பாய்க்கு அமெரிக்க டொலர் 81 இல் இருந்து 2023 மார்ச்சில் அமெரிக்க டொலர் 78.5 ஆகக் குறைந்தது. இருப்பினும், மொத்த பெற்றோலிய பட்டியல் 1,599.7 மில்லியன் அமெரிக்க டொலரினை நெருங்கி உள்ளது. இது 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் நாட்டிற்கு செய்யப்பட்ட மொத்த இறக்குமதிகளில் 30 சதவீதத்தினை பிரதிபலிக்கிறது. இது ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் ஒப்பிடும்போது 16.8 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமத்தால் செய்யப்பட்ட பெற்றோலியம் மற்றும் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள் 877.35 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது, இது மொத்த பெட்றோலிய பட்டியலில் கிட்டத்தட்ட 54 சதவீதத்தைக் பிரதிபலிக்கிறது.

சர்வதேச எண்ணெய் விலைகளின் சரிவுக்கு ஏற்ப இறக்குமதி செலவில் ஏற்பட்ட குறைவு சனவரி 2023 இல் தொடங்கும் காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்படு மூலதன சுழற்சியில் முன்னேற்றங்களை ஏற்படுத்தியது. இது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 43.4 பில்லியன் இலாபத்தினை பதிவிட வைத்தது.

மேலும், இலங்கை மின்சார சபையின் மற்றும் இலங்கை எயர்லைன்சின் பலவீனமான நிதி நிலை மற்றும் பணப்புழக்கக் கட்டுப்பாடுகள் காரணமாக, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை எயர்லைன் உட்பட, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய மொத்தப் பொறுப்பு ரூபா. 238.9 பில்லியன் ஆகும். மறுபுறம், 2023 ஏப்ரல் இறுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது இந்தியக் கடன் வசதி (அமெ.டொலர் 697 மில்லியன்), தேசிய் ஈரான் எண்ணெய் நிறுவனம் (அமெ.டொலர 251 மில்லியன்) மற்றும் இலங்கை வங்கி(ரூபா. 26.2 பில்லியன்) ஆகியவற்றிற்கான கடனுக்காக அரசாங்கத்திற்கு எஞ்சிய பொறுப்புகளைக் கொண்டுள்ளது. எனவே, எரிபொருள் இறக்குமதியை எளிதாக்கப் பயன்படுத்தப்பட்ட 697 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள இந்தியக் கடன் வசதியினை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது செலுத்த முடியாதுள்ளது. எனவே, மத்திய அரசு, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை எயர்லைன்ஸ் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு இடையேயான இந்த குறுக்கு பொறுப்புகளின் சீரமைப்பானது முக்கிய அரசுடைமை முயற்சிகளின் இருப்புநிலைகளை மறுசீரமைப்பதற்கான அரசாங்கத்தின் ஒட்டுமொத்த மூலோபாய திட்டத்தில் குறிப்பிடப்படும்.

இலங்கையில் செயற்படும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் ஊடாக பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்தல், சேமித்தல், விநியோகம் செய்தல் மற்றும் விற்பனை செய்வதற்கு பெற்றோலியம் உற்பத்தி செய்யும் நாடுகளில் நிறுவப்பட்ட இரண்டு நிறுவனங்களுடன் அரசாங்கம் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. இது இலங்கையில் பெற்றோலிய சில்லறை விற்பனையில் போட்டியை அறிமுகப்படுத்துவதுடன் நுகர்வோரின் நலனுக்காக சேவை தரத்தை மேம்படுத்தும்.

## சிறீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட்

சிறீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்களை அதன் அதிக நிதி அபாயங்கள் காரணமாக வேறு பிரிப்பதற்கு முன்னுரிமையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

சிறீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட்டின் அரசாங்கத்திற்குச் சொந்தமான பங்குகளை விலக்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது மற்றும் விற்பனைப் பரிவர்த்தனை ஆலோசகர்கள் (அதாவது சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம்) நியமிக்கப்பட்டுள்ளனர். 2023 டிசம்பர் இறுதிக்குள் பரிவர்த்தனை ஆலோசகர்களால் ஆரம்ப விடாமுயற்சி மற்றும் வேறுபிரிப்பு உத்தி (கட்டம் I) முடிவடையும் என்றும், பரிவர்த்தனையை நிறைவேற்றுவதற்கான ஈடுபாட்டின் இரண்டாம் கட்டத்திற்கு இன்னும் 6 மாதங்கள் எடுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சவாலான வெளியக மற்றும் உள்ளக நிதிக் கட்டுப்பாடுகள் இருந்த போதிலும், சிறீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிட்டட் 2022/23 நிதியாண்டின் கடைசி காலாண்டில் ரூபா. 60.2 பில்லியன் இலாபத்தினை பதிவு செய்துள்ளது மற்றும் சிறீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் எதிர்மறையான நிகர சொத்துக்கள் 2023 மார்ச் இறுதியில் ரூபா 511 பில்லியாக இருந்தது.

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2022 ஆம் ஆண்டிற்கான 54.9 சதவிகிதம் மற்றும் 95.0 க்கு எதிராக நாட்டில் குழாய்வழி நீர் மற்றும் பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை 2023 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் முறையே 60.7 சதவிகிதம் மற்றும் 96.4 சதவிகிதமாக அதிகரிக்க முடிந்தது.

முதல் நான்கு மாதங்களில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது மொத்தம் 2.94 மில்லியன் இணைப்புகளுடன் 120,000 புதிய இணைப்புகளை கணினியில் சேர்க்க முடிந்தது. 2022 செப்டம்பர் முதல் தண்ணீருக்கான புதிய கட்டணத்தை அமல்படுத்தியதன் மூலம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 16,597 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 62.4 சதவீதம் அதிகமாகும். 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 10,221 மில்லியனாக இருந்தது. இதற்கிடையில், மதிப்பாய்வின்

போது மின் கட்டணம் மற்றும் பிற பொருள் செலவுகள் அதிகரிப்புடன், விற்பனை செலவு 50 சதவீதமாக ரூபா 9,211 மில்லியனாக அதிகரித்தது. இருப்பினும், சபையின் மொத்த இலாபம் 2023 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 7,386 மில்லியனாக இருந்ததுடன், கடந்த ஆண்டு இதே காலத்தில் ரூபா 4,081 மில்லியனை பதிவு செய்தது. இதனால் 38 சபைக்கு முந்தைய ஆண்டின் இதே காலத்தில் காணப்பட்ட ரூபா 483 மில்லியனுக்கு எதிராக 2023 இன் முதல் நான்கு மாதங்களுக்கு ரூபா 2,778 மில்லியன் இழப்பு ஏற்பட்டது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 263 மில்லியன் கன மீற்றர் தண்ணீரை உற்பத்தி செய்தது. 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 275 மில்லியன் கன மீற்றருக்கு எதிராக இருந்ததுடன் மதிப்பாய்வு செய்யப்பட்ட காலத்திற்கான நீர் விற்பனை 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 210 மில்லியன் கன மீற்றருக்கு எதிராக 196 மில்லியன் கன மீற்றராக பதிவு செய்யப்பட்டது. புதிய கட்டண அமுலாக்கத்தின் அடிப்படையில் நுகர்வோர் நடத்தை காரணமாக. மேலும், வருமானமல்லாத நீர் (Non-Revenue Water- NRW) முந்தைய ஆண்டைக் காட்டிலும் அதிகரித்துள்ள போக்கைக் காட்டியது. அதே சமயம் மதிப்பாய்வு செய்யப்பட்ட காலத்திற்கான வருமானமல்லாத நீர் முந்தைய ஆண்டின் 24.0 சதவீதத்திலிருந்து 25.4 சதவீதமாகப் பதிவு செய்யப்பட்டது.

### இலங்கை துறைமுக அதிகாரசபை

கடந்த சில வருடங்களாக, கொழும்பு துறைமுகமானது அதன் அதிகபட்ச செயற்திறனை எட்டும் வரை தொடர்ந்து போக்குவரத்து அதிகரிப்பைக் கண்டுள்ளது. மேற்கு கொள்கலன் முனையத்தின் மேம்பாடு விரைவாக முடிவடைவதும், கிழக்கு கொள்கலன் முனையம் முழுமையாக இயங்குவதும் முக்கியமானது.

நாட்டின் துறைமுக பெருந்திட்டத்திற்கு இணங்க, இலங்கை துறைமுக அதிகாரசபை கிழக்கு கொள்கலன் முனையம் - II, மேற்கு கொள்கலன் முனையம் - I, மற்றும் மேற்கு கொள்கலன் முனையம் - II உட்பட பல அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இத்திட்டங்கள் 2030 இற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கிழக்கு கொள்கலன் முனையத்தின் ஆழமான வரைவுடன், துறைமுகத்திற்கு பாரிய கப்பல்கள் வருவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. முனையத்தின் மீதமுள்ள வளர்ச்சி செயல்முறை ரூபா 5.9 பில்லியன் முதலீட்டில் துரிதப்படுத்தப்படுகிறது. உலகெங்கிலும் உள்ள கொள்கலன் போக்குவரத்திற்காக 775 TEU கப்பல்களைக் கொண்ட உலகின் மிகப்பெரிய கப்பல் நிறுவனமான எம்எஸ்சீ மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையுடனான கூட்டுறவு வணிக உறவுகளின் பத்து ஆண்டுகளுக்கும் மேலான வரலாறு, நுஊவு இல் செயல்படத் தொடங்கியுள்ளது. இதன் விளைவாக, கொழும்பு துறைமுக அதிகார சபைக்கு அதிக வருமானம் ஈட்டுவதுடன் சர்வதேச கப்பல் சமூகம் கொழும்பு துறைமுகத்தின் மீது வைத்துள்ள நம்பகத்தன்மையை பலப்படுத்தும்.

2023 இன் முதல் நான்கு மாதங்களில் இலங்கை துறைமுக அதிகார சபையின் மொத்த வருமானம் ரூபா 26,795 மில்லியனாகும். இதில் 36 சதவீதம் அதிக வருமானம் கப்பல் சரக்கேற்றல் சரக்கிறக்கல் மூலம் ரூபா 9,936 மில்லியன் ஈட்டப்பட்டது. வழிசெலுத்தலில் இருந்து ரூபா 6,424 மில்லியன், 9 சதவீதம். துறைமுகத்தில் இருந்து ரூபா 2,484 மில்லியன். 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலங்கை துறைமுக அதிகார சபையின் மொத்த இலாபம் ரூபா 11,485 மில்லியனாக இருந்தது. 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 14,221 மில்லியனாக இருந்தது.

### விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் விமான சரக்கு நடவடிக்கைகளுக்கான மேம்பட்ட திறனை எளிதாக்குவது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் தலைமையில் உள்ளது. இது ஒரு புதிய இறக்குமதி விமான சரக்கு கட்டிடமாக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் சேர்க்கப்படும் ஆறாவது விமான சரக்கு முனையமாகும். ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு தற்போதைய இறக்குமதி முனைய வசதியை மூலோபாய ரீதியாக மாற்றுவதன் மூலம், வாடிக்கையாளர்கள் 250,000 மெ.தொ. இலிருந்து 400,000 மெ.தொ. வரையிலான ஒட்டுமொத்த கொள்ளளவை அதிகரிப்பதன் மூலம் பயனடைவார்கள்.

தரையில் கையாளுதல் என்பது விமான நிலையத்தில் ஒரு முக்கியமான செயலாகும், மேலும் விமான நிலையத்திற்கும் விமான நிறுவனங்களுக்கும் இடையே ஒரு இடைமுகமாக செயல்படுகிறது. இது விமான நிலையத்தில் செயற்திறன் மற்றும் எளிதாக ஓட்டத்தை நிர்வகிக்கிறது. மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தில் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் தரை கையாளும் சேவையானது உள்வரும் பயணிகளுடன் உள்நாட்டு விமான நிறுவனங்களுக்கு அதன் தரை கையாளுதல் சேவைகளை வழங்குவதன் மூலம் தொடங்கப்பட்டது. சர்வதேச விமான நடவடிக்கைகளுக்கு தரைவழி கையாளுதல் சேவைகளை வழங்கும் நோக்கத்துடன், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் தனது சொந்த தரை கையாளுதல் சேவைகள் பயிற்சி பிரிவை மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தில் துவக்கியதுடன் இது மற்றொரு குறிப்பிடத்தக்க வரலாற்று தருணத்தை குறிக்கிறது. விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட்டின் இலாபம் 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 6,407 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 11,624 மில்லியன் இழப்பு பதிவு செய்யப்பட்டது.

**அட்டவணை 3.1 : பிரதான அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்பு / முக்கிய முன்னெடுப்புக்கள்**

| நிறுவனம் | மறுசீரமைப்பு/முக்கிய முன்னெடுப்புக்கள் |
|---|---|
| **அரச வங்கிகள்** | • கடன்களின் தரத்தை உயர்த்துதல், கண்காணிப்பையும் சேகரிப்பையும் மேம்படுத்துதல்,<br>• வளர்ந்து வரும் ஒழுங்குமுறை நிலப்பரப்புடன் புதுப்பித்தல், தேவையான மாற்றங்களைச் செயல்படுத்தவும் மற்றும் வெளிப்படையான அறிக்கையிடல் நடைமுறைகளைப் பராமரித்தல்<br>• செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளல்.<br>• ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களுக்கு உதவவும் புதிய வாடிக்கையாளர்களை ஈர்க்கவும் புதிய தயாரிப்புகளை உருவாக்குதல்.<br>• பின்தங்கிய மக்களுக்கு நிதி சேவைகளை விரிவுபடுத்துதல் மற்றும் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தல் |
| **வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்** | • இலங்கையின் இடைக்கால வெளிநாட்டுக் கடன் கொள்கையின் காரணமாக 175 மில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச முறிகளுக்கான வட்டி செலுத்தப்பட்டது.<br>• SLA மற்றும் அதன் துணை நிறுவனங்களை முன்னுரிமை அடிப்படையில் வேறு பிரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. |
| **இலங்கை மின்சார சபை** | • 2023 பிப்ரவரி 15 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இறுதிப் பயனாளர்களின் மின்சாரக் கட்டணம் சராசரியாக 66 சதவீதம் அதிகரிக்கப்பட்டது<br>• 10 மெகாவொட்டிற்கும் குறைவான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கான மாறல் தரப்படுத்தப்பட்ட கட்டணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது.<br>• அபிவிருத்தி நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து மின் துறைக்கான நிறுவன சீர்திருத்தங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கப்பட்டது. |
| **இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்** | • இலங்கையில் முன்னரே செயற்பட தீர்மானிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் ஊடாக பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்தல், சேமித்தல், விநியோகம் செய்தல் மற்றும் விற்பனை செய்வதற்கு பெற்றோலியம் உற்பத்தி செய்யும் நாடுகளில் நிறுவப்பட்ட இரண்டு நிறுவனங்களுடன் அரசாங்கம் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது.<br>• வாகனங்களுக்கான QR ஒதுக்கீடுகளை அதிகரித்தல். |
| இலங்கை துறைமுக அதிகாரசபை | • வழிசெலுத்தல், ஸ்டீவ்டோரிங், துறைமுக டொன்னேஜ், கொள்கலன் செயல்பாடுகள், வழக்கமான சரக்கு செயல்பாடுகள் போன்றவற்றின் கட்டண கட்டமைப்பை திருத்துவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.<br>• கொழும்பு துறைமுகத்தில் தெற்காசிய பண்டக சேவை மையத்தின் அங்கீகரிக்கப்பட்ட முதலீடு. |
| விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் | • கொழும்பு விமானத் தகவல் பகுதிக்கு மேல் பறக்கும் சர்வதேச விமானங்களுக்கு விதிக்கப்படும் இறுதிப் பாதை வழிசெலுத்தல் கட்டணங்களைத் திருத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. |

*மூலம்: அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் அரச முயற்சியாண்மைகள் திணைக்களம்*

**அட்டவணை 3.2 : பிரதான 52 அரசுடமைத் தொழில்முயற்சிகளின் இலாபமீட்டும் தன்மை**

ரூபா. மில்லியன்

| | தொழில்முயற்சி | 2021 | 2022 (அ) | 2023.04.30 (அ) |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி | 43,190 | 30,977 | 3,386 |
| 2 | மக்கள் வங்க | 30,387 | 21,338 | 6,281 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 28,555 | 4,510 | 1,997 |
| 4 | அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 405 | -48 | -426 |
| 5 | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | 878 | 377 | -115 |
| 6 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 776 | 1,823 | -781 |
| 7 | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை | 33,159 | 43,428 | 21,080 |
| 8 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 11,725 | 12,476 | 4,458 |
| 9 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 5,936 | 8,010 | 4,591 |
| 10 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 334 | 1,884 | 76 |
| 11 | விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை | 1,780 | 2,651 | 324 |
| 12 | இலங்கை மின்சார சபை | -34,139 | -261,869 | -29,797 |
| 13 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | -81,816 | -615,053 | 43,429 |
| 14 | இலங்கை துறைமுக அதிகாரசபை | 25,601 | 57,026 | 11,485 |
| 15 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | -3,054 | -3,064 | 2,778 |
| 16 | விமான நிலையங்கள் விமானப் போக்குவரத்துச் சேவைகள | -755 | 6,434 | 11,624 |
| 17 | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட் | -166,370 | -72,177 | 60,228* |
| 18 | இலங்கை போக்குவரத்துச் சபை | -3,054 | 484 | 217 |
| 19 | அரசு பொறியியல் கூட்டுத்தபானம | -1,597 | -940 | -291 |
| 20 | மத்திய பொறியியல் ஆலோசனைச் சேவைப் பணியகம் | 48 | 69 | 98 |
| 21 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தாபனம் | 96 | 27 | 52 |
| 22 | மில்கோ (பிரைவெட்) லிமிடட்ழூழு | 329 | -471 | -345 |
| 23 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | 160 | 133 | -77 |
| 24 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | -232 | 17 | -27 |
| 25 | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | -490 | -18 | -10 |
| 26 | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | 468 | 511 | 169 |
| 27 | சிலாபம் பெருந்தோட்டக் கம்பன | 511 | 514 | 190 |
| 28 | கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பன | -3 | 380 | -3 |
| 29 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | -20 | 2 | 0.3* |
| 30 | இலங்கை கனிம மணல் கம்பனி | 1,387 | 6,160 | 589 |
| 31 | இலங்கை பொஸ்பேட் கம்பனி | 117 | 74 | 29 |
| 32 | கஹட்டகஹ கிர.்.பைட் லங்கா லிமிடட் | 8 | 70 | 28 |
| 33 | அபிவிருத்தி லொத்தர் சபை | 2,953 | 3,267 | 1,035 |
| 34 | தேசிய லொத்தர் சபை | 1,004 | 1,390 | 424 |
| 35 | அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் | 1,239 | 1,586 | 960 |
| 36 | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம | -14 | 14 | -1 |
| 37 | அரச மருந்துப்பொருட் கூட்டுத்தாபனம் | 3,157 | 1,240 | -4 |
| 38 | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை | -258 | -2,033 | 193 |
| 39 | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | -344 | -370 | 3 |
| 40 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | -227 | -541 | -168 |
| 41 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | 11 | -236 | -27 |
| 42 | இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை | -35 | -53 | -4 |
| 43 | அரசாங்க மரக் கூட்டுத்தபானம | 1,136 | 315 | 60 |
| 44 | அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி | 60 | 473 | 27 |
| 45 | லங்கா சதொச நிறுவனம | -880 | -615 | -71 |
| 46 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் | -281 | -380 | 750 |
| 47 | இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தாபனம் | -64 | -42 | 6 |
| 48 | இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தாபனம் | -136 | -38 | 11* |
| 49 | லங்கா உரக் கம்பனி | 0.5 | 115 | 142 |
| 50 | கொழும்பு கொமாசல் .்.பெர்டிலைசர் கம்பன | 234 | 61 | 16 |
| 51 | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சி | -976 | -633 | -350 |
| 52 | லங்கா சீனிக் கம்பனி | 1,256 | 6,086 | -5 |
| | **மொத்தம்** | -97,845 | -744,658 | 144,224 |

*மூலம் : அரசுடமைத் தொழில் முயற்சிகள் மற்றும் பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம்*

* 31.03.2023 இல் உள்ளவாறு

**அட்டவணை 3.3 : அரசுடமைத் தொழில் முயற்சிகளிலிருந்தான அறவீடு/ பங்கிலாபம்**

ரூபா மில்லியன்

| | 2021 | 2022 | 2023.04.30 |
|---|---|---|---|
| **அறவீடு** | 25,919 | 22,004 | 7,535 |
| தேசிய சேமிப்பு வங்கி | 3,500 | - | - |
| இலங்கை வங்கி | 1,500 | - | - |
| மக்கள் வங்கி | 1,977 | 441 | - |
| இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 8,500 | 13,200 | 2,000 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | - | - | - |
| அரசாங்க மரக் கூட்டுத்தபானம | 100 | 320 | - |
| அரச மருந்தாக்கற் கூட்டுத்தபானம | 100 | 100 | - |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம | 1,824 | 1,608 | 225 |
| புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம | 2,000 | 1,000 | - |
| தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை | 15 | 35 | 40 |
| இலங்கை மின்சார சபை | - | - | - |
| இலங்கை முதலீட்டுச் சபை | - | 416 | - |
| தேசிய லொத்தர் சபை | 900 | 361 | 1,000 |
| பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | - | - | - |
| இலங்கை தராதரங்கள் நிறுவனம் | - | 10 | - |
| இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம | 25 | 50 | - |
| தேசிய கால்நடைவள அபிவிருதி சபை | - | - | - |
| மத்திய பொறியியல் ஆலோசனைச் சேவைப் பணியகம | 25 | - | - |
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் | - | - | - |
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை | 50 | 1,000 | 1,000 |
| அரச மருந்துப்பொருட் கூட்டுத்தாபனம் | - | 350 | - |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் | 110 | 290 | 150 |
| இலங்கை வெளிநாட்டுவெலைவாய்ப்பபுப் பணியகம் | - | 1,200 | 3,000 |
| தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | - | 10 | 70 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | - | - | - |
| இலங்கைக் காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி அதிகாரசபை | - | - | - |
| இலங்கை துறைமுக அதிகார சபை | - | 1,015 | - |
| தேசிய ஔடத ஒழுஙகுபடுத்தல் அதிகார சபை | 147 | 400 | - |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 4,000 | - | - |
| நில சீர்திருத்த ஆணைக்குழு | 1,100 | - | - |
| காண்டோமினியம் முகாமைத்துவ அதிகாரசபை | 25 | 50 | - |
| தேசிய வணிக மேலாண்மை நிறுவனம | 16 | 33 | - |
| இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தாபனம் | 5 | - | - |
| மேலாண்மை முதுகலை நிறுவனம | - | 90 | - |
| ஏனையவை | - | 25 | 50 |
| **பங்கிலாபங்கள்** | 4,672 | 6,087 | 2,030 |
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | 60 | 30 |
| இலங்கை வங்கி | 346 | 346 | 173 |
| மக்கள் வங்கி | 316 | 316 | 158 |
| லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | - | 0 | - |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 1 | 0.9 | - |
| இலங்கை சேமிப்பு வங்கி | - | 0 | - |
| வர்த்தக வங்கி | - | 0.17 | - |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | 899 | 1511 | - |
| விமான நிலையங்கள் விமானப் போக்குவரத்துச் சேவைகள் | - | 500 | 500 |
| இலங்கை கனிம மணல் கம்பனி | 700 | 759 | - |
| இலங்கை பொஸ்பேட் கம்பனி | 20 | 20 | 20 |
| சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | - | 0 | - |
| லங்கா லேலண்ட் | 3 | 13 | - |
| ரக்ன ஆரக்ஷக லங்கா லிமிட்டட் | - | 0 | 25 |
| மாந்தை உப்புக் கம்பனி (இலங்கை உப்புக் கம்பனி) | 15 | 0 | 20 |
| இலங்கை உரக் கூட்டுத்தாபனம் | 29 | 15 | - |
| கொழும்ப வர்த்தக உரக் கம்பனி | - | 10 | - |
| பரந்தன் இரசாயனக் கம்பனி | 3 | 50 | 5 |
| STC வர்த்தகக் கம்பனி | - | 11 | - |
| இலங்கை ரெலிகொம் PLC | 1331 | 1805 | - |
| டி லா ரு லங்கா லிமிட்டட் | 345 | 313 | - |
| இலங்கை மின்சாரக் கம்பனி லிமிட்டட் | 327 | 218 | 436 |
| இலங்கை கைத்தொழில் பேட்டைகள் லிமிட்டட் | 82 | 0 | 86 |
| திறன் அபிவிருத்தி நிதியம் | - | - | - |
| சிலோன் அக்ரோ இன்ட்ஸ்ரீஸ் | 95 | 24 | 119 |
| இலங்கை சீனிக் கம்பனி லிமிட்டட் | - | - | 352 |
| லங்கா லொஜிஸ்ரிக்ஸ் | - | - | - |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | 98 | 95 | 97 |
| லங்கா திரிபோச லிமிட்டட் | - | 10 | 10 |
| பிற | 2 | 10 | - |
| **மொத்தம்** | 30,591 | 28,091 | 9,565 |

*மூலம் : அரசுடமைத் தொழில் முயற்சிகள் மற்றும் பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம*

# அத்தியாயம் 4

# வெளிநாட்டு நிதி உதவி

## முன்நோக்கு

2022, ஏப்பிரலில் கடைப்பிடிக்கப்பட்ட கடன் மறுசீரமைப்பு கொள்கையால் அரசாங்கத்தின் கடன் வாங்கும் திட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் வழக்கமான இருதரப்புக் கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட வழங்கல்கள் மற்றும் புதிய நிதிக் கடப்பாடுகள் குறைந்துவிட்டன. பலதரப்புக் கடன் வழங்குபவர்கள் தங்கள் செயல்பாடுகளைத் தொடர்ந்தனர் மற்றும் அவர்களின் சில செயற்திட்டங்கள் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்திற்கு நிதியிடும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மீண்டும் அமைக்கப்பட்டன.

சர்வதேச நாணய நிதியத்தின் 2023-2026 விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ், வரவு செலவுத்திட்ட நிதி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை முதல் தவணையாக 333 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றது. விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தினால் பரிந்துரைத்த கொள்கை முன்முயற்சிகளை வலுப்படுத்தவும், பாதிக்கப்படக்கூடிய குழுக்களை மேம்படுத்துவதற்காக சமூக பாதுகாப்பு வலையை ஆதரிக்கவும், இந்த ஆண்டின் பிற்பகுதியிலும் அதற்கு அப்பாலும் பலதரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்து கணிசமான அளவு வெளிநாட்டு நிதியைப் பெற அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

மேலும், இந்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட அவசரகால கடன் வசதிகள் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கான வெளிநாட்டு நாணயத் தேவைகளை எளிதாக்க கணிசமாக உதவியது என்பது தெளிவாகிறது. 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இக்கடன் வசதிகளின் கீழ் 131 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறப்பட்டன. அதன்படி, மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தின் போது அரசாங்கம் 670.3 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக் கொண்டது.

## வெளிநாட்டு நிதியுதவி கடப்பாடுகள்

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஜப்பான் அரசாங்கத்துடன் இரண்டு மானிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதன் மூலம் அரசாங்கம் மொத்தமாக 40.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி கடப்பாடுகளில் பெற்றுள்ளது. ஜப்பானிய பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 37.1 மில்லியன் அமெரிக்க டொலர்களை எரிபொருள் மானிய உதவிக்காகவும் மற்றும் 3.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை தொற்றுக் கழிவு முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்காகவும் ஜப்பான் அரசாங்கத்தால் நீடிக்கப்பட்டது. சுகாதாரம் மற்றும் சமூக நலத்துறைக்காக இந்த மானிய கடப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

## வெளிநாட்டு நிதியுதவி வழங்கல்களும் பயன்பாடும்

2023 சனவரி 1 முதல் ஏப்ரல் 30 வரையிலான காலக்கட்டத்தில் மொத்த வெளிநாட்டு நிதியளிப்பு 670.3 அமெரிக்க டொலர்கள் ஆகும். இதில், நீடிக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் தவணையாக அமெரிக்க டொலர் 333.0 மில்லியன் பெறப்பட்டது (2023-2026) மீதமுள்ள அமெரிக்க டொலர் 333.0 பிற கடன்களாக வழங்கப்பட்டது, மேலும் அமெரிக்க டொலர் 4.3 மில்லியன் மானியங்கள் வழியில் வழங்கப்பட்டது.


2023 இல் பதிவுசெய்யப்பட்ட பணப்பரிமாற்றங்களில் பெரும்பாலானவை சர்வதேச நாணய நிதியத்திலிருந்து வழங்கப்பட்டது. இது மொத்த வழங்கல்களில் கிட்டத்தட்ட 50 சதவீதத்தை பிடித்துள்ளது. அதைத் தொடர்ந்து இந்தியா (21 சதவீதம்), உலக வங்கி (18 சதவீதம்) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (9 சதவீதம்) ஆகியனவும் வழங்கியுள்ளன.

**அட்டவணை: 4.1 : 2023 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரை வழங்கப்பட்ட வெளிநாட்டு கடன்கள் மற்றும் மானியம்**

| அபிவிருத்தி பங்காளர்கள் | வழங்கல்கள்* (ஐ.டொ.மி) | | |
|---|---|---|---|
| | கடன் | மானியம் | மொத்தம் |
| **இருதரப்பு** | 146.4 | 1.3 | 147.7 |
| இந்தியா | 142.5 | - | 142.5 |
| நெதர்லாந்து | 3.9 | - | 3.9 |
| ஜர்மன் | - | 1.3 | 1.3 |
| **பலதரப்பு** | 519.6 | 3.0 | 522.6 |
| சர்வதேச நாணய நிதியம் | 333.0 | - | 333.0 |
| உலக வங்கி | 114.2 | 3.0 | 117.2 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 58.0 | - | 58.0 |
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 11.1 | - | 11.1 |
| ஒபெக் நிதியம் | 3.2 | - | 3.2 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 0.1 | - | 0.1 |
| **மொத்தம்** | 666.0 | 4.3 | 670.3 |

*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*
*வெவ்வேறு நாணயங்களில் செய்யப்பட்ட பணப் பரிமாற்றங்களை அமெரிக்க டொலராக மாற்றுவதற்கு, 2023 ஏப்ரல் இல் உள்ள மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டன*
**தற்காலிகமாக*

**வரைபு 4.1 : ஒவ்வொரு துறைக்கும் 2023 சனவரி 1 முதல் ஏப்ரல் 30 வரை (அமெரிக்க டொலர் மில்லியன்) வழங்கப்பட்டவை**




மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்


** ஏனையவை - கல்வி மற்றும் பயிறசி, பாதுகாப்பு, விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், நீர்பாசனமும் அது சார்ந்த செயற்பாடுகளும், சுற்றாடல், மனிதாபிமான உதவி, இடர்முகாமைத்துவம், சிறு நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தி, காணி அபிவிருத்தி, பெருந்தோட்டம்

## அபிவிருத்தி செயற்திட்டங்களின் உறுதியளிக்கப்பட்ட வழங்கப்படாத இருப்பு

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதியின்படி, அடுத்த 3-5 ஆண்டுகளில் பயன்படுத்தப்படும் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட கடன்களில் இருந்து கிடைக்கப்பெறும் வெளிநாட்டு நிதியுதவியின் மொத்த வழங்கப்படாத இருப்புத் தொகை 6.3 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். மீதியின் பெரும்பகுதி சீனாவுடனான செயற்திட்டங்களில் இருந்து வழங்கப்பட உள்ளது, மற்றவை முறையே ஜப்பான், ஆசிய அபிவிருத்தி வங்கி, இந்தியா மற்றும் உலக வங்கி ஆகியவற்றிலிருந்து வழங்கப்படுகின்றன.

உறுதியளிக்கப்பட்ட வழங்கப்படாத இருப்பில் கிட்டத்தட்ட 21 சதவீதம் சாலைகள் மற்றும் பாலங்கள் துறையிலும், 18 சதவீதம் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திற்காகவும், 12 சதவீதம் தரைவழிப் போக்குவரத்துத் துறையிலும் பயன்படுத்தப்பட உள்ளது.


**வரைபு 4.2 : பாரிய அபிவிருத்தி பங்காளர்களால் 2023 ஏப்ரல் 30 அன்று அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்காக ஈடுபடுத்தப்பட்ட வழங்கப்படாத இருப்பு மீதி (அமெரிக்க டொலர் மில்லியன்)**




மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

*பிற = அவுஸ்திரேலியா, ஐ.இ., ஹங்கேரி, குவைத், பாகிஸ்தான், கொரியா, ரஷ்யா, ஜேர்மனி, டென்மார்க், ஸ்பெயின், அவுஸ்திரியா, ஐரோப்பிய முதலிட்டு வங்கி, IFAD

**வரைபு 4.3 : 2023 ஏப்ரல் 30 அன்று, கருத்திட்டங்களினதும் நிகழ்ச்சித்திட்டங்களினதும் துறை ரீதியாக ஈடுபடுத்தப்பட்ட வழங்கப்படாத இருப்பு மீதி (அமெரிக்க டொலர் மில்லியன்)**




மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

## வெளிநாட்டு கடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் சேவை செலுத்துதல்கள்

ஏப்ரல் 2023 இன் முடிவில் மத்திய அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டுக் கடன் 36.31[1] பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 2023 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதி முதல் ஏப்ரல் 30 ஆம் தகதி வரையிலான மொத்தக் கடன் சேவைக் கொடுப்பனவுகள்[2] 470.2 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தன, இதில் 378.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதன்மை கொடுப்பனவினை திருப்பிச் செலுத்துதலுக்குப் பதிலாகவும், மீதி 91.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வட்டி செலுத்துவதற்காகவும் ஆகும்.

அரசாங்கத்தால் கடைப்பிடிக்கப்படும் இடைக்காலக் கொள்கைக்கு இணங்க, இருதரப்பு மற்றும் வணிகக் கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட பாதிக்கப்பட்ட கடன்களின் வெளிநாட்டுக் கடனைச் செலுத்துவது 2022 ஏப்ரல் 12 ஆந் திகதி தொடங்கும் இடைக்காலப்பகுதிக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஏப்ரல் 2023 இறுதிக்குள் முதன்மை தொகையான 3,691 மில்லியன் அமெரிக்க டொலர்களும் அதற்கான வட்டித் தொகையான் 1,301* மில்லியன் அமெரிக்க டொலர்களும் செலுத்தப்படாத கடன் சேவையாக திரண்டுள்ளன.

---

1. தற்காலிகமானது, மத்திய அரசின் நிலுவையில் உள்ள வெளிநாட்டுக் கடன்கள் மட்டுமே சித்தரிக்கப்படுகின்றன. இதில் கடன் நிறுத்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு திரட்டிய செலத்தப்படாத முதன்மை கொடுப்பனவும் உள்ளடங்கும்.

2. கடன் சேவை = முதன்மை கொடுப்பனவுகள் + வட்டி செலுத்துதல்

* மறுசீரமைப்புக்கான கலந்துரையாடலின் போது கடனாளிகளுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும்